Get Your Premium E-Commerce
WEBSITE &
ANDROID APP
for Just ₹Rs. 2999/-
SALE
+91 9853719337, 7436914247

தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tami naduepaper.com

MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Vo ume- 2 | Issue: 244 | 17-03-2025 | திங்கள்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# ‘ரூ’ என்பது பெரிதானது ஏன்? முதலமைச்சர் விளக்கம்

**சென்னை, மார்ச் 17:**
தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ’உங்களில் ஒருவன்’ (Ungalil Oruvan) என்னும் பெயரில், திமுக அரசின் மீது எதிர்கட்சிகள் வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கும், மக்களின் மனதில் எழும் கேள்விகளுக்கும் பதிலளித்து வருகிறார். இந்த நிலையில், இன்று (மார்ச் 16) வெளியான உங்களில் ஒருவன் பதில்கள் காணொலியில், “மொழிக் கொள்கையில் நாம் எந்தளவுக்கு உறுதியுடன் உள்ளோம் என்பதை காட்டவே ‘ரூ’ என்ற எழுத்தை பெரிதாக வைத்தோம்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கமளித்துள்ளார்.

அந்த வீடியோவில் முதல்வர் கூறியிருப்பதாவது: பட்ஜெட் logo-வை வெளியிட்டிருந்தேன். மொழிக்கொள்கையில் நாம் எந்தளவுக்கு உறுதியாக இருக்கிறோம் என்பதை அதில் ‘ரூ’- என்று வைத்திருந்தோம். ஆனால், தமிழைப் பிடிக்காதவர்கள். அதை பெரிய செய்தி ஆக்கிவிட்டார்கள்.

ஒன்றிய அரசிடம், நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான ஊதியத்தை வழங்க வேண்டும், பேரிடர் நிதி வழங்க வேண்டும், பள்ளிக்கல்வி நிதியை விடுவிக்க வேண்டும், தமிழ்நாடு சார்பாக நூறு கோரிக்களை வைத்திருப்பேன்.

அதற்கெல்லாம் பதில் பேசாத ஒன்றிய நிதியமைச்சர், இதைப் பற்றி பேசியிருக்கிறார்.

அவங்களே, பல பதிவுகளில் ரூ-என்றுதான் பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலத்திலும் எல்லாரும் Rupees- என்பதை எளிமையாக Rs-என்றுதான் எழுதுவார்கள். அதெல்லாம் பிரச்சினையாக தெரியாதவங்களுக்கு, இதுதான் பிரச்சினையாக தெரிகிறது போல. மொத்தத்தில், இந்திய அளவில் நம் பட்ஜெட்டும் ஹிட், தமிழும் ஹிட்! இவ்வாறு முதல்வர் கூறியுள்ளார்.

அதேபோல், பட்ஜெட் முன்னேற்பாடுகள் குறித்த கேள்விக்கு, “முதல்வருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவில் நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டப்லோ, அறிஞர்கள் ரகுராம் ராஜன், ழான் திரேஸ், அரவிந்த் சுப்பிரமணியன், நாராயணன் போன்றவர்கள் நிறைய ஆலோசனைகள் வழங்கினார்கள். மறுபுறம், அடித்தட்டு மக்களிடமும் அவர்களின் தேவைகள் என்ன என்று கேட்டுத் தெரிந்து கொண்டோம். அதுமட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும், நாடுகளிலும் மக்களிடம் நல்ல ‘ரீச்’ ஆன திட்டங்கள் என்ன என்று பார்த்து, அதை நம்முடைய மாநிலத்திற்கு ஏற்ற மாதிரி கொண்டு வர வேண்டும் என்று முடிவு செய்தோம். இதற்காக, பல நாட்கள் தலைமைச் செயலகத்தில் மாலை 6 மணியில் இருந்து இரவு பத்து மணி வரை அமைச்சர்கள், அதிகாரிகள் கூட உட்கார்ந்து பேசிப் பேசித்தான் இந்த பட்ஜெட்டைத்தயாரித்தோம்.” என்று முதல்வர் கூறியுள்ளார்.

மேலும், கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கான தடுப்பு மருந்தை அரசே இலவசமாகத் தரும், ஊர்க்காவல் படையில் திருநங்கைகளையும் ஈடுபடுத்துவோம் போன்ற அறிவிப்பு மனதுக்கு நெருக்கமான பட்ஜெட் அறிவிப்புகள் என்று முதல்வர் கூறியுள்ளார்.

“மொழிக் கொள்கையில் நாம் எந்தளவுக்கு உறுதியுடன் உள்ளோம் என்பதை காட்டவே ‘ரூ’ என்ற எழுத்தை பெரிதாக வைத்தோம்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கமளித்துள்ளார்.



## இந்தியா - சீனா போட்டி, மோதலாக மாறக் கூடாது: பிரதமர் மோடி



**புது டில்லி, மார்ச் 17:**
செய்யறிவு தொழில்நுட்ப ஆய்வாளர் லெக்ஸ் ஃபிரிட்மேன் உடனான நேர்காணலின்போது இந்தியா - சீனா உறவு குறித்து பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது,

”சமீபத்தில் (கடந்த ஆண்டு அக்டோபர்) சீன அதிபர் ஸி ஜின்பிங் உடனான சந்திப்பின்போது, எல்லைப் பகுதிகளில் இயல்பு நிலையை நீட்டிக்கச் செய்வதற்கான பார்வைகளை இருவரும்ப கிர்ந்துகொண்டோம். 2020-க்கு முன்பு எல்லைப் பகுதிகளில் நிலைத்திருந்த அமைதியை மீண்டும் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் இருதரப்பிலும் ஈடுபட்டுள்ளோம்.

மெதுவாக, அதே நேரத்தில் நிச்சயமாக எல்லைகளில் இயல்பு நிலை திரும்பும். எல்லைகளில் முன்பு இருந்த அதே உற்சாகம், ஆற்றல் மீண்டும் திரும்பும். ஆனால், இதற்கு நேரம் எடுக்கும் என்பது மறுப்பதற்கில்லை.

இந்த நவீன உலகில் சீனாவின் பங்கு முக்கியமானது. வரலாற்றுப் பதிவுகளை எடுத்துப் பார்த்தால் சீனாவும் இந்தியாவும் ஒருவரிடமிருந்து மற்றொருவர் பாடங்களைக் கற்றுள்ளனர்.

இருதரப்பும் உலக மேம்பாட்டிற்காக அளப்பறிய பங்காற்றியுள்ளன. பொருளாதார வரலாற்றை திரும்பிப் பார்த்தால், இந்தியாவும் சீனாவும் மட்டுமே உலகின் மொத்த ஜிடிபியில் 50% பங்காற்றியுள்ள பதிவுகளைக் காணலாம்.

இந்தியாவின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு எத்தகையது என்பதை இதிலிருந்து அறியலாம். சீனா உடனான கூட்டு ஒத்துழைப்பு கலாசார ரீதியிலும் வலுவாக உள்ளதாக நான் நம்புகிறேன்” எனக் குறிப்பிட்டார்.

## விண்வெளி மையத்துடன் இணைந்தது டிராகன் விண்கலம்

### சுனிதா வீடு திரும்ப தயார்



**நாசா, மார்ச் 17**
ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம் நாசா விஞ்ஞானிகளுடன் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு இன்று காலை சென்றடைந்து உள்ளது. தற்போது சுனிதா வில்லியம்சை மீட்கும் பணியில் முதல் வெற்றி கிடைத்துள்ளது. அவர்கள் 19ந்தேதி பூமிக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ஐ.எஸ்.எஸ்.) கடந்த ஆண்டு ஜூன் 5-ந்தேதி ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஆய்வு பணிக்காக பச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லயம்ஸ் ஆகிய இருவரும் சென்றனர். ஒரு வார காலம் தங்கி ஆய்வு பணி மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டு இருந்தது. எனினும், குறுகிய கால பரிசோதனைக்காக சென்ற அவர்களுடைய பயணம், விண்கல தொழில்நுட்ப கோளாறால் பாதிக்கப்பட்டு, பூமிக்கு திரும்ப முடியாமல் விண்வெளி நிலையத்திலேயே சிக்கி தவிக்கும்படியான சூழலுக்கு தள்ளப்பட்டனர்.

பூமிக்கு திரும்ப முடியாமல் தொடர்ந்து 9 மாதங்களாக அவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கி தவித்தனர்.

இந்நிலையில் விண்வெளி வீரர்களை பூமிக்கு அழைத்து வர ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் நாசா அமைப்பு இணைந்து டிராகன் விண்கலம் அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி நேற்று அதிகாலை பால்கன் 9 டிராகன் விண்கலம் கென்னடி விண்வெளிமையத்தில் இருந்து ஏவப்பட்டது. இதில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் ஆனி மெக்கிளைன், நிக்கோலி அயர்ஸ், ஜப்பான் விண்வெளி வீரர் டகுயா ஒனிஸி, ரஷிய விண்வெளி வீரர் கிரிஸ் பெஸ்கோவ் ஆகியோர் சென்றனர். இந்த ராக்கெட் இன்று காலை 9.40 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திற்குள் சென்று இணைந்தது. இதனால் சுனிதா மற்றும் வில்மோர் இருவரும் பூமிக்கு திரும்புவதற்கான பணியில் முதல் வெற்றி கிடைத்துள்ளது.

நாசா விஞ்ஞானிகள் நால்வரும் டிராகன் விண்கலத்திலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் இறங்கினர். சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்ற அவர்களை, அங்கு ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டு வரும் சுனிதா வில்லியம்ஸ், பட்ச் வில்மோருடன் சேர்ந்து பிற விஞ்ஞானிகளும் கைதட்டி வரவேற்றனர். இந்த படங்களை நாசா வெளியிட்டுள்ளது. வருகிற 19-ந்தேதி வில்மோர் மற்றும் வில்லயம்ஸ் இருவரும் அந்த விண்கலத்தில் புறப்பட்டு பூமிக்கு திரும்புவார்கள். அவர்களுடன் நாசா விஞ்ஞானிகள் நிக் ஹேக், டான் பெடிட் மற்றும் ரஷிய விஞ்ஞானிகள் அலெக்சாண்டர் கோர்புனோவ், அலெக்சி ஓவ்சினின் மற்றும் இவான் வாக்னர் ஆகியோரும் பூமிக்கு திரும்புவார்கள். எனினும், இந்த திட்டத்தில் தொழில்நுட்பக் கோளாறுகளாலோ அல்லது பிற காரணங்களாலோ கால தாமதம் ஏற்படவும் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 214 பாகிஸ்தான் பணயக்கைதிகளை தூக்கிலிட்டதாக பலூச் விடுதலை ராணுவம் அறிவிப்பு

**பெஷாவர், மார்ச் 17:**
பாகிஸ்தானில் பயணியர் ரயிலை கடத்திய கிளர்ச்சியாளர்கள், அரசு தங்களது கோரிக்கைக்கு செவி சாய்க்காததால், 214 பாகிஸ்தான் பணயக்கைதிகளை தூக்கிலிட்டதாக பலூச் விடுதலை ராணுவம் அறிவிப்பு.

நம் அண்டை நாடான பாகிஸ்தானில், பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையில் பாக்., முஸ்லிம் லீக் நவாஸ் கட்சியின் ஆட்சி நடக்கிறது. இங்குள்ள பலுசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாக அறிவிக்கக் கோரி, நீண்ட நாட்களாக பலூச் விடுதலை ராணுவம் என்ற கிளர்ச்சி அமைப்பு வலியுறுத்தி வருகிறது.

ஆனால், இதை பாக்., அரசு கண்டுகொள்ளவில்லை. இதனால் அதிருப்தி அடைந்த கிளர்ச்சியாளர்கள், அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றனர். பெஷாவர் நோக்கி சென்ற ஜாபர் பயணியர் விரைவு ரயிலை, சமீபத்தில் கிளர்ச்சியாளர்கள் கடத்தினர். அதில், பெரும்பாலும் பாக்., ராணுவத்தினர் இருந்தனர்.

பொதுமக்களில் சிலரை விடுவித்த கிளர்ச்சியாளர்கள்,



200க்கும் மேற்பட்ட ராணுவத்தினரை பிணைக்கைதிகளாக பிடித்து வைத்தனர். அவர்களை மீட்க பாக்., ராணுவத்தினர், கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிட்டனர். இதில், 33 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, பிணைக்கைதிகளை விடுவிக்க வேண்டுமானால், ராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்ட பலூச் விடுதலை அமைப்பின் மூத்த நிர்வாகிகளை, இரு நாட்களுக்குள் விடுதலை செய்யும்படி, பாக்., அரசுக்கு கிளர்ச்சியாளர்கள் கெடு விதித்தனர்.இந்த கெடு நேற்று முடிவடைந்தது. தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாததால் கடுப்பான கிளர்ச்சியாளர்கள், பிணைக்கைதிகளாக இருந்த 214 ராணுவ வீரர்களை தூக்கிலிட்டு கொன்றதாக நேற்று அறிவித்தனர்.

பாக்., அரசின் பிடிவாத குணமே தங்களது முடிவுக்கு காரணம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால், இந்த தகவலை பாக்., அரசு மறுத்துள்ளது.

## இன்றைய பஞ்சாங்கம்

17.03.2025 (பங்குனி 3)
திங்கட்கிழமை

திதி:
இன்று மாலை 6.38 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 2.00 வரை சித்திரை பின்பு சுவாதி

யோகம்:
இன்று பிற்பகல் 2.03 வரை துருவம் பின்பு வ்யாகாதம்.

கரணம்:
இன்று அதிகாலை 5.38 வரை வணிசை பின்பு மாலை 6.38 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம்:
இன்று காலை 6.22 வரை யோகம் சரியில்லை பின்பு காலை 11.27 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்:
இன்று காலை 11.27 வரை சதயம் பின்பு பூரட்டாதி.
இன்று சுபமுகூர்த்த நாள்.

சூரிய உதயம் : 6.22

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்

தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!

**இன்றைய கேள்வி**

இந்திய ராணுவத்தில் ஆள்சேர்ப்பு

இந்த செய்தி எந்த பக்கத்தில் இடம்பெற்றுள்ளது என கண்டுபிடிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து தக்க சன்மானம் வழங்கப்படும்.
நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய WhatsApp no.8122664699



நேற்றைய இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடை அளித்த வாசகர்
- ஓகே சிவா
சமூக ஆர்வலர், மதுரை

## திருக்குறள் குறள்-200

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்**



சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும், பயன் இல்லாதவைகளாகிய சொற்களை சொல்லவே கூடாது.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கையில் இழந்ததை
நினைக்காதே!
பெற்றதை நினை!

கடுகளவு பெற்றாலும்
கடலளவு சந்தோஷம்
கொள்!
வாழ்க்கை சிறக்கும்!

**ரமேஷ் பாபு**
உளுந்தூர்பேட்டை

## திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் கலைஞர் அரங்கில் பொருளியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் மன்ற விழா



திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் கலைஞர் அரங்கில் பொருளியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் மன்ற விழா கல்லூரி முதல்வர் இல .ரேவதி தலைமையில் நடைபெற்றது. துறைத் தலைவர் முனைவர் ஆ ம. அயோத்தி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக இணைப் பேராசிரியர்கள் வைகுந்த வாசன் மற்றும் ஜோசப் பாஸ்கரன் கலந்து கொண்டனர். பேராசிரியர்கள் மா கோவிந்தராஜ் கா வெங்கடேசன் வேலைவாய்ப்பு பெறுவது பற்றி விளக்கம் அளித்தனர்.கல்லூரி தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியினை இணை பேராசிரியர் ர. முனியப்பன் தொகுத்து வழங்கினார்.முடிவில் உதவி பேராசிரியர் தே. சிவகுமார் நன்றி கூறினார்.

**ந. சண்முகம் திருவண்ணாமலை**

## மாணவர்களுக்கு பரிசு வழங்கும் விழா



**சிவகங்கை,மார்ச் 17:**
சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் நூலக புத்தகம் படித்த மாணவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. தேவகோட்டை வட்டாட்சியர் சேது நம்பு மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார்.தேவகோட்டை தாலுகா வருவாய் ஆய்வாளர் ரமேஷ் முன்னிலை வகித்தார்.

## ராமேஸ்வரம் கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்



விடுமுறை தினமான நேற்று ராமேஸ்வரம் கோவிலில் பக்தர்கள் திரண்டனர்.நீண்ட கியூ வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கந்தர்வகோட்டை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் சாதனை பெண்மணிகள் நான்கு பேருக்கு பாராட்டு விழா

**கந்தர்வ கோட்டை,மார்ச் 17:**
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கந்தர்வகோட்டை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் சாதனை பெண்மணிகள் நான்கு பேருக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

மருத்துவர் தன.குணசீலி (மருத்துத்துறை), கந்தர்வ கோட்டை பகுதியின் முதல் பெண் நாவலாசிரியர் ந. சுலோச்சனா சகாதேவன், தேர்தல் ஆணையத்தின் விருதை தமிழ்நாடு ஆளுநர் கையால் விருது பெற்ற அண்டனூர் கிராம நிர்வாக அலுவலர் சா. இளவரசி, கந்தர்வகோட்டை முழுநேர கிளை நூலகர் ஆ. வனிதா நால்வருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கந்தர்வகோட்டை வட்டாட்சியர் திரு. மா. ரமேஷ் அவர்களும் தஞ்சாவூர் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கௌரவத் தலைவர் மருத்துவர் மு. செல்லப்பன் அவர்களும் சாதனை பெண்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகள் வழங்கி வாழ்த்தினார்கள்.



இந்நிகழ்வுக்கு கந்தர்வ கோட்டை கிளைத் தலைவர் மஞ்சைதாசன் அவர்கள் தலைமை வகித்தார். கிளைச் செயலர் ஜீவாதாசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் எழுத்தாளர் அண்டனூர் சுரா, மாவட்டச் செயலர் பாலசந்திரன், நாவலாசிரியர் சோலச்சி, தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் முத்துக்குமார், கந்தர்வகோட்டை கிளை தலைவர் ரகமத்துல்லா, TNSTF கிளை செயலர் தவச்செல்வம் உட்பட பலரும் கலந்துகொண்டார்கள். கிளை பொருளர் ஜெயபிரகாஷ் அவர்கள் நன்றி நல்கினார்.

## பக்தர்களுக்கு நீர்மோர்




பொன்னமராவதியில் வருவாய்த்துறை சார்பில் ஸ்ரீமுத்துமாரியம்மன் பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு நீர்மோர், பானாக்கம்,ரொட்டி, தண்ணீர் வழங்கப்பட்டது..

## சபரிமலை ஐயப்பன் கோவிலில் கணபதி ஹோமம்



பங்குனி மாத பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்பட்டு உள்ளது. முன்னதாக கணபதி ஹோமம் நடந்தது.




திருவண்ணாமலை மலை மீது நேற்று காலை 7:00 மணி அளவில் அண்ணாமலையார் மலை மீது நிலா சூரியனும் நிலவும் காட்சி. அதிசயமான காட்சி. **நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தாய்லாந்து தமிழ் முஸ்லிம் சங்கத்தில் மு.தமிமுன் அன்சாரி பங்குபெற்ற நிகழ்ச்சிகள்!

**பேங்க்காக், மார்ச் 17:**
பேங்க்காக்கிலுள்ள தாய்லாந்து தமிழ் முஸ்லிம் சங்கத்தின் சார்பாக பேங்க்காக் பள்ளியில் நிகழ்வுற்ற இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர், நாகப்பட்டினம் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.தமிமுன் அன்சாரி அவர்கள் கலந்துகொண்டார்கள்!



நிகழ்ச்சியில் ஜனாப் அப்ஸர், திருக்களாச்சேரி ஜாமிஆ மஸ்ஜித் இமாம் மௌலவி எஸ்.முஹம்மது ஸதுருத்தீன் மஹ்ழரி, பேங்க்காக் மஸ்ஜித் இமாம் அல்ஹாஃபிஸ் ப்பீ.எம்.ஷபீர் அலி ஆலிம் மிஸ்பாஹி, நீடூர் அ.முஹம்மது நிஜாமுத்தீன் மற்றும் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், ஈரான், ஆப்பிரிக்கா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாட்டினர் உட்பட சுமார் 600 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

இரவு தராவீஹ் தொழுகை முடிந்ததும் 'இணக்கத்தை உருவாக்குவோம்!' என்ற தலைப்பில் மு.தமிமுன் அன்சாரி அவர்கள் சிற்றுரையாற்றினார்கள்.

மஸ்ஜித் தலைமை இமாம் அவர்கள் துஆஓத சொற்பொழிவு நிறைவு பெற்றது. இதில் சுமார் 300 பேர்கள் வரை கலந்து கொண்டு சொற்பொழிவு கேட்டு பயன்பெற்றார்கள்.

## இலங்கையில் இனிய நந்தவனம் அறிமுகம்

**இலங்கை, மார்ச் 17:**
இலங்கை கண்டியில் 15-3-2025 அன்று இலங்கை - இந்திய நட்புறவு ஒன்றியம் நடத்திய சாதனையாளர்கள் நூறு பேருக்கு விரும் வழங்கும் விழாவில் இனிய நந்தவனம் 28 ஆவது ஆண்டு மலர் வெளியிடப்பட்டது.

இலங்கை மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏகநாயக்கா முதல் பிரதியை வெளியிட தினகரன் - வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், சர்வதேச இசைக்கல்லூரிக் கான பியிற்சி நிலையத்தின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.




இலங்கை - இந்திய நட்புறவு ஒன்றியத்தின் தலைவர் தீபன் அனைவரையும் வரவேற்க இனிய நந்தவனம் மாத இதழ் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நன்றி தெரிவித்தார்.

## தோரணமலை முருகன் கோவிலில் வருணகலச பூஜை, ஊர்வலம்



தென்காசி மாவட்டம் தோரணமலை முருகன் கோவிலில் வருணகலச பூஜை, ஊர்வலம் நடந்தது.

## வீட்டுத் தோட்டங்களுக்கு மானிய விலை காய்கறி விதை



**சென்னை, மார்ச் 17:**
வீட்டு தோட்டங்களில், காய்கறிகள் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில், தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் அடங்கிய காய்கறிகள் விதைகள் அடங்கிய தொகுப்பு, 15 லட்சம் குடும்பங்களுக்கு, 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும். இதேபோல, பப்பாளி, கொய்யா, எலுமிச்சை அடங்கிய பழச்செடிகள் தொகுப்பு, 9 லட்சம் குடும்பங்களுக்கு, 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும் என்று வேளாண் பட்ஜெட்டில் அமைச்சர் எம்ஆர்கே பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

## தன்வந்திரி பகவானுக்கு சிறப்பு ஹோமம்

**வந்தவாசி, மார்ச் 17:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த நல்லூர் ஸ்ரீசுந்தர வரதராஜ பெருமாள் கோவிலில் நேற்று தன்வந்திரி பகவானுக்கு ஹோம பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த வைபவத்தில் மூல மூர்த்திகளுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு சிறப்பு திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு உற்சவ மூர்த்திகள் புஷ்ப அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். தலைமை அர்ச்சகர் ராஜன் சுவாமிகள் முன்னிலையில் பட்டாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க தன்வந்திரி பகவானுக்கு யாகசாலை பூஜையை மேற்கொண்டனர்.



இந்த வைபவத்தில் வந்தவாசி மற்றும் நல்லூர் கிராமத்தைச் சுற்றியுள்ள பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

## நூலேணி பதிப்பகம் மற்றும் தமிழால் இணைவோம் இணைந்து நடத்திய அமெரிக்க வாழ் தமிழர் நெல்லை ஆனந்தியின் பதினோரு நூல்கள் வெளியீடு

**சென்னை, மார்ச் 17:**
சென்னை தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் நூலேணி பதிப்பகம் மற்றும் தமிழால் இணைவோம் இணைந்து நடத்திய அமெரிக்க வாழ் தமிழர் நெல்லை அன்புடன் ஆனந்தி அவர்களின் பதினோரு நூல்கள் வெளியீடு நடந்தது. விழாவில் நான்கு தன்முனை நூல்களும் வெளியிடப்பட்டன. வாசமல்லி பூத்திருக்கு நூலினை முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். விழாவில் மக்கள் குரல் இதழாளர் ராம்ஜி, கவிதை உறவு ஏர்வாடி இராதாகிருஷ்ணன், நூலேணி பதிப்பகம் கன்னிக்கோவில் இராஜா, தமிழால் இணைவோம் சத்யநாயனராஜ் பாலகுரு, தங்க மங்கை மீனா



திருப்பதி,முனைவர் பா.தாமோதரன் , கண்ணதாசன் கலைக்கூடம் கவிஞர் காவிரி மைந்தன், முனைவர் பூங்கோதை, அன்பு பாலாம் ச.விஜய் ஆனந்த், மலேசிய தமிழ் பள்ளி தலைமை ஆசிரியர் புனிதா சுப்பிரமணியம், நூலாசிரியர் அன்புடன் ஆனந்தி, ஹைக்கூ கவிஞர் அமுதபாரதி மற்றும் பல தமிழ் ஆளுமைகளும் கலந்துகொண்டு நூலினை வெளியிட்டு சிறப்பித்தனர்.

# காஞ்சி, திருவள்ளூரில் ரூ.1,112 கோடியில் புதிய மின்னணு உற்பத்தி பேட்டைகள்: அஸ்வினி வைஷ்ணவ் தகவல்




**காஞ்சிபுரம், மார்ச் 17:**

காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் மணலூர் ஆகிய இடங்களில் ரூ 1,112 கோடி செலவில், புதிய மின்னணு உற்பத்தி பேட்டைகளை மத்திய அரசு அமைக்க உள்ளது என்று, மத்திய ரயில்வே, தகவல் ஒலிபரப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்டம், பண்ணூரில் தனியார் மின்னணு பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தின் அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் பங்கேற்று அடிக்கல் நாட்டினார்.

பின்னர், அவர் பேசியதாவது: பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வையின் காரணமாக, மின்னணு உற்பத்தி துறையில் இந்தியா வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. உலகின் உற்பத்தி மையமாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்தி வருகிறோம். இன்று உலகின் 2-வது ஏற்றுமதி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. ரயில்வே துறையில், கடந்த பட்ஜெட்டில் தமிழகத்துக்கு ரூ.6,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது முன் எப்போதையும் விட அதிகம். இதில், புதிய ரயில் பாதைகள் அமைத்தல், பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைத்தல், ரயில் நிலையங்கள் மேம்பாடு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மின்னணு தொழிலைப் பொறுத்தவரை, உற்பத்தியுடன், வடிவமைப்பு பொருளாதாரமும் வளர்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், ரூ 1,112 கோடி செலவில், காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், மணலூர் ஆகிய இடங்களில் புதிய மின்னணு உற்பத்தி பேட்டைகளை மத்திய அரசு அமைக்க உள்ளது. தமிழ் மிகவும் பழமையான, மிகவும் இனிய மொழி. அது, இந்தியாவின் சொத்தாக மட்டுமல்லாமல், உலகத்தின் சொத்தாகவும் திகழ்கிறது. இது நம் அனைவருக்கும் பெருமை. நாம் அனைத்து இந்திய மொழிகளையும் மதிக்கிறோம். அதில் பெருமை கொள்கிறோம். ஒவ்வொரு இந்திய மொழிக்கும் உரிய இடத்தைக் கொடுத்து, அவற்றுக்கு கிடைக்க வேண்டிய மரியாதையை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழக தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா பேசும்போது,

"தேசிய ஏற்றுமதியில் 36 சதவீதம் பங்கைக் கொண்டு இந்தியாவின் முன்னணி மின்னணு உற்பத்தியாளராக தமிழகம் முன்னணியில் உள்ளது. இந்தத் தொழிற்சாலை அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி, அதிக மதிப்புள்ள மின்னணு உற்பத்திக்கான உலகளாவிய மையமாக தமிழகத்தின் பங்கை வலுப்படுத்துகிறது" என்றார்.

மத்திய தகவல் தொழில் நுட்பத்துறை செயலர் எஸ். கிருஷ்ணன், மாநில தொழில் துறை செயலர் அருண் ராய் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## 2,000 பேருக்கு இ-ஸ்கூட்டர் வாங்க ரூ.20,000 மானியம் - தமிழக பட்ஜெட் அறிவிப்பு யாருக்கு பொருந்தும்?

**சென்னை, மார்ச் 17:**

நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 2,000 இணையம் சார்ந்த சேவைப் பணித் தொழிலாளர்களுக்கு புதிதாக இருசக்கர மின் வாகனம் (E-SCOOTER) வாங்கும் பொருட்டு தலா 20,000 ரூபாய் மானியமாக வழங்கும் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்று தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு (மார்ச் 14) காலை தாக்கல் செய்தார். தொழிலாளர் நலன் சார்ந்த அறிவிப்புகளை வெளியிட்டு அவர் பேசுகையில்,

“வேகமாக வளர்ந்து வரும் இணையம் சார்ந்த பொருளாதாரச் சூழலில், இணையம் சார்ந்த சேவைப் பணிகளில் ஈடுபடும் இளைஞர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துவரும் நிலையில், இத்தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்கள் நலவாரியம் (GIG WORKERS WELFARE BOARD) உருவாக்கப்பட்டது.

இந்நலவாரியத்தில்பதிவுசெய்துள்ளதொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 2,000 இணையம் சார்ந்த சேவைப்பணித் தொழிலாளர்களுக்கு புதிதாக இருசக்கர மின் வாகனம் (E-SCOOTER) வாங்கும் பொருட்டு தலா 20,000 ரூபாய் மானியமாக வழங்கும் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள இணையம் சார்ந்த சேவைப்பணித் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில், சுமார் 15 லட்சம் தொழிலாளர்களுக்கு, விபத்து மரணம் மற்றும் இயலாமை இழப்பீட்டுக்கான குழு காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

மேலும், இவ்வகை சேவைப்பணித் தொழிலாளர்களுக்கென அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக்கூடங்கள், சென்னை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களில் உருவாக்கப்படும்.

இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு 1975 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,” என்று அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

## தமிழக வேளாண் பட்ஜெட் 2025-ல் மானியம், உதவித் தொகை சார்ந்த அறிவிப்புகள் என்னென்ன?

**சென்னை, மார்ச் 17:**



2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழகவேளாண் பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் உழவர் நலன் மற்றும் வேளாண்மை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இன்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்தார். அவரது பட்ஜெட் உரையில் இடம்பெற்றுள்ள விவசாயிகளுக்கான மானியம், ஊக்கத்தொகை தொடர்பான அறிவிப்புகள் இங்கே...

> உயிர்ம வேளாண் முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் விளைபொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தி, ஏற்றுமதி செய்ய, எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்துக்கு முழு மானியம் வழங்கப்படும்.

> பட்டியல் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு அவர்களுக்கு பங்குத்தொகையினால் ஏற்படும் பொருளாதாரச் சுமையினைக் குறைத்து உதவிடும் வகையில், நடைமுறையில் உள்ள 40 முதல் 50 சதவீத மானியத்துக்குப் பதிலாக 60 முதல் 70 சதவீத மானியம் வழங்கப்படும். இக்கூடுதல் மானியம், மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்காக 2025-26 ஆம் ஆண்டில் 21 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

> புரதச்சத்து மிகுந்த காளான் உற்பத்தியை பெருக்குவதுடன், புதிய தொழில் முனோவோர்களை ஊக்குவிக்கவும், வேலைவாய்ப்பு களை உருவாக்கும் வகையிலும், ஊரகப் பகுதிகளில் ஐந்து காளாண் உற்பத்திக் கூடங்கள் அமைத்திட மானியம் வழங்கப்படும்.

> விவசாயிகள் தாங்கள் விளைவித்த காய், கனிகளை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்திட, 4000 நடமாடும் விற்பனை வண்டிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

> பயறு வகைப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக பயறு வகைகளில் 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைக்க, தொகுப்புக்கு இரண்டு லட்சம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கும் வகையில், 2025-26 ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இதில் உற்பத்தி செய்யப்படும் விதைகளை, உற்பத்தி மானியம் வழங்கி வேளாண்மைத் துறையே கொள்முதல் செய்து,வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கும்.

> சிறு, குறு விவசாயிகள், சிறிய நிலப்பரப்பில் வேளாண் பணிகளை தாங்களே மேற்கொள்ள உதவிடும் வகையில் விவசாயி களுக்கு 7,900 பவர்டில்லர்கள் 6,000 விசை களையெடு ப்பான்கள் மானியத்தில் வழங்கப்படும்.

> 2025-26 ஆம் ஆண்டில் வட்டி மானியத்துக்கென 853 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

> உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு, நிதி உதவிகளை உயர்த்தி வழங்குதல்

விபத்து மரணத்துக்கான இழப்பீடு, ஒரு லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயாகவும், விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்புக்கு நிதி உதவி,

20 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாகவும், இயற்கை மரணத்துக்கான நிதி உதவி 20 ஆயிரும் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாகவும்,

இறுதிச்சடங்கு செய்வதற்கான நிதி உதவி, 2500லிருந்து 10,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

> 2025-26 ஆம் ஆண்டில் நெல் ஊக்கத்தொகை வழங்கிட, 525 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, என்பது உள்ளிட்ட மானியம் குறித்த அறிவிப்புகளை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ளார்

## பட்ஜெட்டில் நிதி பற்றாக்குறை: மத்திய அரசுடன் ஒப்பிட்டு தமிழக அரசுக்கு ப.சிதம்பரம் பாராட்டு

**திருப்பத்தூர், மார்ச் 17:**



“பட்ஜெட்டில் நிதி பற்றாக்குறையை மத்திய அரசை விட தமிழக அரசு கட்டுப்படுத்தியதை பாராட்டுகிறேன்” என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் ப.சிதம்பரம் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “தமிழக அரசின் நிதி மேலாண்மையை பாராட்டுகிறேன். முதலீடுகள் செய்வது மட்டும் முக்கியமல்ல. சாலை போன்ற திட்டங்களை நிறைவேற்றும்போது, தரத்தையும் தமிழக அரசு கண்காணிக்க வேண்டும். தமிழக அரசின் மொத்த கடன் ரூ.9.30 லட்சம் கோடி. இது மொத்த உற்பத்தியில் 3 சதவீதம். நிதி பற்றாக்குறையை 3 சதவீதத்துக்குள் கட்டுப்படுத்தியது பாராட்டுக்குறையது.

கடந்த 2020-21-ம் ஆண்டு அதிமுக அரசின் இறுதி பட்ஜெட்டில் வருவாய் பற்றாக்குறை ரூ.62,326 கோடியாக இருந்து. அது திமுக அரசின் இறுதி பட்ஜெட்டில் ரூ.41,635 கோடியாக உள்ளது. அதிமுக அரசை விட ரூ.21,000 கோடி வருவாய் பற்றாக்குறை குறைக்கப்பட்டதை பாராட்டுகிறேன். மத்திய அரசு பட்ஜெட்டில் நீதி பற்றாக்குறை 4.1 சதவீதமாக அறிவித்தனர். தமிழக அரசு பட்ஜெட்டில் நிதி பற்றாக்குறை 3 சதவீதமாக அறிவித்துள்ளனர். மத்திய அரசுடன் ஒப்பிடும்போது நிதி பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டதை பாராட்டுகிறேன்.

மேலும், அரசு ரூ.57,231 கோடி முதலீடு செய்வதை வரவேற்கிறேன். இது கடந்த ஆண்டை விட 22.4 சதவீதம் அதிகம். முதலீட்டுக்கு செலவழித்தால் வளர்ச்சி இருக்கும். பொருளாதார வளர்ச்சி 8 சதவீதம் இருக்கும் என ஆய்வறிக்கையில் கூறியுள்ளனர். மேலும், பல கோடி ரூபாயில் முதலீடு செய்தால் மட்டும் போதாது. அரசு கட்டிடங்கள், பாலங்கள் நெடுஞ்சாலைகள் தரமாக இருக்க வேண்டும். பல இடங்களில் தரமாக இருந்தாலும், சில இடங்களில் தரமாக இல்லை.

கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென எப்போதும் நான் வலியுறுத்துவேன். அதன்படி கல்விக்கான ஒதுக்கீடு முதலிடத்தில் உள்ளது. சென்னை அருகே உலகத் தரம் வாய்ந்த நகரம், 6-வது நீர்த்தேக்கம், அண்ணா பல்கலைகழகத்துக்கு ரூ.500 கோடி, விஞ்ஞான மையத்துக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு வரவேற்கத்தக்கது. சிறு, குறு தொழில்களுக்கு வங்கி மூலம் ரூ 2.25 லட்சம் கடன் வழங்குவதாக அறிவித்துள்ளனர். ஆனால், வங்கிகள் கடன் தர இழுத்தடிப்பர். இதனால் வங்கி அதிகாரிகளை அழைத்து கடன் வழங்குவதை மாநில நிதி அமைச்சர் 3 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும்.

மதுபான மோசடி நடந்ததாக பட்ஜெட்டில்கூறவில்லை,அண்ணாமலை தான் கூறுகிறார். காவிரி - வைகை - குண்டாறு திட்டம் நிறைவேற்ற 3 அணைகள், நீண்ட கால்வாய் கட்ட வேண்டும் என்று நான் அப்போதே கூறினேன். இதை ஆராயாமல் கடந்த அதிமுக அரசு திட்டத்தை அறிவித்தது. அவர்கள் திட்டத்தை தொடங்கி வைத்ததாக தெரியவில்லை. கல்லை மட்டும் போட்டுச் சென்றனர்.

இந்த பட்ஜெட் மொத்தத்தில் தமிழக மக்களுக்கு நலன் பயக்கும் என்பதே எனது கருத்து. கடைசி ஆண்டு பட்ஜெட் என்பதால் தமிழக அரசு அறிவித்த திட்டங்களை செயல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். திட்டங்களை தரமான முறையில் நிறைவேற்ற வேண்டும். மதுவிலக்கு என்பது நடக்காத காரியம்,” என்று ப.சிதம்பரம் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
8122664699



## நலம் தரும் மருத்துவம்

### காலிபிளவரை உணவில் சேர்த்துக்கொள்வதால் கிடைக்கும் நன்மைகள்

காலிபிளவரில் வைட்டமின் ஏ, பி, இ, கே சத்துக்கள் அதிகம் உள்ளன. தினமும் 90 கிராம் அளவுக்கு காலிபிளவர் சாப்பிடும்போது வைட்டமின் சி சத்து கிடைக்கிறது. காலிபிளவர் மூளையை போன்ற தோற்றம் உடையது. இது மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது.

காலிபிளவரில் உள்ள ஊட்டச்சத்துகள் அனைத்தும் உடலுக்கு உன்னதமான மருந்தாகிறது. புற்று நோய் உருவாவதை தடுக்குகிறது. நார்ச்சத்து உள்ளதால் மலச்சிக்கல் இல்லாது செய்கிறது. காலிபிளவர் கருவில் உள்ள குழந்தையின் மூளை, முதுகுத்தண்டு வளர்ச்சிக்கு உதவுகிறது. மூட்டு வலியை குறைப்பதில் காலிபிளவர் முக்கிய பங்கு வகிக்கிறது.

மெக்னீசியம், பொட்டாசியம், கால்சியம் போன்றவை இருப்பதால் இதில் எதிர்ப்புசக்தி அதிகமாக உள்ளது. புற்றுநோய் வராமல் தடுக்கும் தன்மை கொண்ட காலிபிளவர் இதயத்துக்கு பலம் கொடுக்கிறது.

செரிமான கோளாறுகளை சரிசெய்கிறது. இதை உணவில் சேர்த்துக்கொள்வதால் பல்வேறு நன்மைகள் விளையும். காலிபிளவரை பயன்படுத்தி கீழ்வாதம்,



முடக்குவாதத்தால் ஏற்படும் வலிக்கான மருந்து தயாரிக்கலாம்.

ஒரு ஸ்பூன் காலிபிளவர் பசை, சிறிது பூண்டு, மிளகு சேர்த்து, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைத்து குடித்தால் மூட்டுவலி, வாத ஜுரம், வீக்கம் சரியாகும். உடல் வலியும் குறையும். காலிபிளவர் இலைகளை பயன்படுத்தி அடிப்பட்ட வீக்கம், மூட்டு வலிக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

விளக்கெண்ணெய்யுடன் காலிபிளவர் இலை பசையை சேர்த்து நன்றாக வதக்கி பத்தாக போட்டு துணிகட்டி வைத்தால் வலி, வீக்கம் சரியாகும். காலிபிளவரை பயன்படுத்தி சிறுநீரகம், இதயத்தை பலப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம்.

ஒரு ஸ்பூன் காலிபிளவர் பூ பசை, அரை ஸ்பூன் சீரகம், சிறிது மிளகுப்பொடி சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும்.

இதை வடிகட்டி குடிக்கவும். இது, இதயத்துக்கு பலம் கொடுக்கும் ஊட்டசத்தாகிறது. எலும்பு பலவீனம் அடையாமல் செய்கிறது. அடிபட்ட இடத்தில் ரத்தம் சேர்ந்து வீக்கம், ரத்தகசிவு இருந்தால் அவைகள் சரியாகும். சிறுநீர் பெருக்கியாக விளங்குவதுடன் ரத்த அழுத்தத்தை குறைக்கிறது. ரத்தத்தை உறைய வைக்கும் தன்மை கொண்டது. உன்னதமான இதய ஊட்டச்சத்தாக விளங்குகிறது.

காலிபிளவரை பயன்படுத்தி புற்றுநோய் செல்கள் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் காலிபிளவர் பசை, கால் ஸ்பூன் மஞ்சள் பொடி, அரை ஸ்பூன் சீரகம் சேர்த்து, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி 50 முதல் 100 மில்லி அளவுக்கு தினமும் புற்றுநோயாளிகள் எடுத்துக்கொள்ளும்போது, புற்றுநோய் செல்கள் வளர்வது தடுக்கப்படும்.

# முகூர்த்த தினமான இன்று பத்திரப் பதிவுக்கு கூடுதல் டோக்கன்!


**சென்னை, மார்ச் 17:**

பத்திரப் பதிவுக்கு இன்று கூடுதல் டோக்கன் வழங்கப்படும் என்று பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: சுப முகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிக அளவில் பத்திரப் பதிவுகள் நடைபெறும் என்பதால், அந்த நாட்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பத்திரப்பதிவுக்கு கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கப்பட்டு வருகிறது. தற்போது பங்குனி மாதத்தின் மங்களகரமான தினமான மார்ச் 17-ம் தேதி (இன்று) அதிக அளவில் பத்திரப் பதிவுகள் நடைபெறும்.

எனவே, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100-க்கு பதில் 150 டோக்கன்கள், இரண்டு சார் பதிவாளர்கள் இருந்தால் 200-க்கு பதில் 300 டோக்கன்கள் வழங்கப்படும். அதிக அளவில் பத்திரப்பதிவு நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100-க்கு பதில் 150 சாதாரண டோக்கன்களுடன், ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் டோக்கன்களுடன் கூடுதலாக 4 தட்கல் டோக்கன்களும் பொது மக்கள் பயன்பாட்டுக்காக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.640 குறைந்தது!



தங்கம் விலை பவுனுக்கு ரூ.640 குறைந்து ரூ.65,760-கசு விற்பனை விற்பனையாகிறது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. நேற்று முன்தினம் பவுனுக்கு ரூ.1,440 அதிகரித்து ஒரு பவுன் ரூ.66,400 என்ற புதிய உச்சத்தை அடைந்தது. இந்நிலையில், தங்கம் விலை நேற்று குறைந்தது. இதன்படி, கிராமுக்கு ரூ.80 குறைந்து ரூ.8,220-க்கும், பவுனுக்கு ரூ.640 குறைந்து ரூ.65,760-க்கும் விற்பனையாகிறது. இதேபோல், 24 காரட் சுத்த தங்கம் ஒரு பவுன் ரூ.71,736-க்கு விற்பனையாகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.112-க்கு விற்பனையானது. ஒரு கிலோ பார் வெள்ளியின் விலை ரூ.1,12,000 ஆக உள்ளது.

# இன்டெல் நிறுவனத்தின் புதிய சிஇஓ சம்பளம் ரூ.600 கோடி

அமெரிக்காவின் இன்டல் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக (சிஇஓ) இருந்த பாட் கெல்சிங்கர் சமீபத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து, புதிய சிஇஓ-வாக லிப்-பு டான் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஆண்டு சம்பளமாக ரூ.600 கோடி வரை கிடைக்கும் என கூறப்படுகிறது. இதில் அடிப்படைச் சம்பளமாக ரூ.8.7 கோடி கிடைக்கும். செயல்பாட்டு ஊக்கத் தொகையாக 200% வழங்கப்படும். நிறுவன பங்குகள் மற்றும் ஊக்கத் தொகை என ரூ.574 கோடி கிடைக்கும். செமிகண்டக்டர் மற்றும் மென்பொருள் துறையில் 20 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் கொண்டவர் டான். கடந்த 2009 முதல் 2021 வரையில் கேடன்ஸ் டிசைன் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் சிஇஓ-வாக பதவி வகித்துள்ளார். இவரது பதவிக் காலத்தில் அந்நிறுவனத்தின் வருவாய் இரு மடங்கு அதிகரித்துள்ளது. இதுதவிர, துணிகர முதலீட்டு நிறுவனமான வால்டன் இன்டர்நேஷனல் தலைவராகவும் உள்ளார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் சான்டா கிளாராவை தலைமையிடமாகக் கொண்டு இன்டல் கார்ப்பரேஷன் செயல்பட்டு வருகிறது. கணினிகளுக்கான சிபியு மற்றும் அது தொடர்புடைய சாதனங்களை தயாரித்து விற்பனை செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# தவணை தொகை பெற வேளாண் அடுக்கக அடையாள எண் அவசியம்: ஆட்சியர் கிரேஸ் பச்சாவ் தகவல்



**பெரம்பலூர், மார்ச் 17:**

பெரம்பலூர் மாவட்டத்தில் பி.எம். கிசான் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு ரூ.6,000 ஆண்டுக்கு நேரடியாக விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

தற்பொழுது ஒன்றிய அரசால் வேளாண் அடுக்ககத்தின் கீழ், விவசாயிகளுக்கான தனிப்பட்ட அடையாள எண் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், தனிப்பட்ட அடையாள எண் பெறாத விவசாயிகளுக்கு பி.எம். கிசான் திட்டத்தின் 20 ஆவது தவணை வழங்கப்படுவது நிறுத்தப்படும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 53,996 விவசாயிகள் பி.எம்.கிசான் திட்டத்தில் இணைந்து உள்ளனர். இவர்களில் 28,479 விவசாயிகள் மட்டுமே வேளாண் அடுக்கக தனிப்பட்ட அடையாள எண்ணை பெற்றுள்ளனர். மீதமுள்ள 25,517 விவசாயிகள் வேளாண் அடுக்கக தனி அடையாள எண் பெறாமல் உள்ளனர்.

இவர்கள் 31.03.2025-ஆம்தேதிக்குள் அடையாள எண்ணை பெற்றால் மட்டுமே பி.எம்.கிசான் மற்றும் பயிர் காப்பீடு திட்டப்பலன்கள் கிடைக்கப் பெறும்.

எனவே, இதுவரை அடையாள எண் பெறாத விவசாயிகள், அருகில் உள்ள பொது சேவை மையத்தை அணுகி, இலவசமாக இந்த அடையாள எண்ணை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஆதார் அட்டை, ஆதார் அட்டை எண்ணுடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண், சிட்டாவுடன் பொதுசேவை மையத்தை அணுகி அடையாள எண்ணை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# கோடை வெயில் தாக்கத்திலிருந்து பாதுகாக்க காவலர்களுக்கு மோர் வழங்கும் திட்டம்: கமிஷனர் அருண் துவக்கி வைத்தார்

**சென்னை, மார்ச் 17:**

*கோடை வெயில் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் போக்குவரத்து காவலர்களுக்கு காகித கூழ் தொப்பிகளை கமிஷனர் அருண் வழங்கினார்.*





கோடை காலத்தில் சென்னை பெருநகர போக்குவரத்து காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களின் தாகத்தை தணிக்க போக்குவரத்து காவலர்களுக்கு 2012-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான நான்கு மாதங்கள் ஆவின் மோர் வழங்கும் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல்துறை கமிஷனர் ஆ.அருண், போர் நினைவுச்சின்னம் அருகில் போக்குவரத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு ஆவின் மோர் பாக்கெட்டுகள் வழங்கி 2025ம் ஆண்டிற்கான மோர் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார். மேலும், கோடை வெயிலின் தாக்கத்தை சமாளிப்பதற்காக போக்குவரத்து காவல் ஆளிநர்களுக்கு காகித கூழ் தொப்பிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையாளர் ஆர். சுதாகர், போக்குவரத்து காவல் இணை ஆணையாளர் (தெற்கு) பண்டி கங்காதர், போக்குவரத்து காவல் துணை ஆணையாளர்கள், காவல் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ராணிப்பேட்டை அரசினர் குழந்தைகள் இல்லத்தில் மாணவர்களிடம் கலந்துரையாடினார் கலெக்டர்



**ராணிப்பேட்டை, மார்ச் 17:**

*ராணிப்பேட்டை நகராட்சி காரை கூட்ரோடு சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் கலெக்டர் சந்திரகலா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது குழந்தைகள் வரவேற்பு மையத்திலிருந்த இரண்டு மாணவர்களிடம் கலந்துரையாடினார்.*

*இதனை தொடர்ந்து வரவேற்பு இல்லம் எதிரில் பெற்றோர்கள் வருகை தந்தால் அமர்வதற்கு சிறிய வரவேற்பு கட்டமைப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையின் மீது, நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அதற்கான இடத்தினை பார்வையிட்டார்.*

*இதனைத் தொடர்ந்து குழந்தைகள் இல்லத்தில் உள்ள பழைய கட்டிடங்கள், அகற்றப்பட வேண்டிய கட்டிடங்கள் குறித்தும் பார்வையிட்டார். குழந்தைகள் இல்லம் பராமரிப்பு குறித்தும் மையத்தின் அனைத்து இடங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*குழந்தைகள் இல்லத்தில் தங்கி பயிலும் குழந்தைகள் சென்னைக்கு சுற்றுலா சென்றுள்ளதால் குழந்தைகள் யாரும் இல்லை என கண்காணிப்பாளர் தெரிவித்தார்.*

*இதனைத் தொடர்ந்து ராணிப்பேட்டை நகராட்சி ஆட்டோ நகர் மூக்காயி அம்மன் கோவில் தெருவில் அனாதின இடத்தில் கட்டப்பட்டுள்ள 35 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும், நகர்புறத்தில் உள்ள குடியிருப்புகளில் பட்டா இல்லாத குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கும் திட்டத்தின் மூலம் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*தொடர்ந்து ராணிப்பேட்டை பிஞ்சி ஏரி புதிய பேருந்து நிலையம் அருகில் மாந்தாங்கல் ஏரியிலிருந்து வரும் கால்வாய் சீரமைப்பது குறித்தும், வீசி மோட்டார் தேசிய நெடுஞ்சாலை அருகில் மாந்தாங்கல், தண்டலம், பிஞ்சி ஆகிய ஏரிகளில் இருந்து வரும் நீர் செல்லும் கால்வாய் பகுதியையும் பார்வையிட்டார்.*

*பின்பு வன்னிவேடு அகஸ்தீஸ்வரர் கோவில் அருகில் பாலாற்றுக்குச் செல்லும் கால்வாய் சீரமைப்பது தொடர்பாக ஆய்வு செய்தார்.*

*கால்வாயின் தொடக்கம் முதல் பாலாறு சென்று சேரும் வரையிலான வரைபடத்தை முழுமையாக தயார் செய்து தெளிவாக சமர்ப்பிக்க கலெக்டர் கேட்டுக் கொண்டார்.*

*மேலும், இந்த கால்வாய் வழித்தடங்களின் பக்கத்தில் உள்ள நிலங்கள் வகைப்பாடு குறித்தும் தெரிவிக்கவும் கேட்டுக் கொண்டார்.*

*இந்த ஆய்வின் பொழுது வருவாய் அலுவலர் ந.சுரேஷ், நகரமன்ற தலைவர் ஹரிணி தில்லை, வருவாய் கோட்டாட்சியர் ராஜராஜன், நகரமன்ற துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சந்திரன், வட்டாட்சியர் அருள்செல்வம், உதவி இயக்குநர் நில அளவை பொன்னையா, உதவி பொறியாளர் தமிழ்செல்வன் மற்றும் வருவாய்த்துறையினர் கலந்து கொண்டனர்.*

# தமிழ்நாட்டுத் தேர்வர்களுக்கு 1500 கி.மீ. அப்பால் தேர்வு மையமா?

## ரயில்வே அமைச்சருக்கு எம்.பி. கடிதம்

ரயில்வே வாரியத் தேர்வெழுதும் தமிழ்நாட்டுத் தேர்வர்களுக்கு 1,500 கி.மீ. தொலைவுக்கு அப்பால் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு இருப்ப தாகவும், அதனை தமிழ்நாட்டிற்கு உள் ளேயே மாற்றித் தருமாறும் மதுரைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சு. வெங்க டேசன் எம்.பி. கூறியிருப்பதாவது:



ரயில்வே தேர்வு வாரியத்தால் நடத் தப்படும் 'லோகோ பைலட்' (ரயில் ஓட்டு நர்)காலி இடங்களுக்கு, ரயில்வே தேர்வு வாரியம் (RRB) நடத்தும் கணினி அடிப்படையிலான (COMPUTER BASED TEST - CBT) தேர்வு 1-இல் தமிழகத்தைச் சேர்ந்த 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தேர்ச்சி பெற்றுள்ள னர். இவர்கள், சிபிடி தேர்வு2-க்கு தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்கான சிபிடி தேர்வு-2, மார்ச் 19 அன்று நடைபெறும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற் கான தேர்வு மையங்கள் பெரும்பாலாக தமிழ்நாட்டிற்கு வெளியே அறிவிக்கப் பட்டுள்ளது. பலர், ஆயிரம் கிலோ மீட் டர் கடந்து தெலுங்கானா வரை செல்ல வேண்டியுள்ளது. இதனால் தேர்வர்கள் நிதிச் சுமைக்கும், கடுமையான அலைச்ச லுக்கும் ஆளாகும் நிலை உள்ளது. மதுரை நாடாளுமன்ற தொகுதியைச் சார்ந்த பல தேர்வர்களின் பெற்றோர் என்னை அணுகி தேர்வு மையங்களை தமிழ்நாட்டிற்குள் மாற்றித் தருவதற்கு தலையிடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆகவே, ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், உடனடியாக தலையிட்டு தேர்வு மையங்களை மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு சு. வெங்கடேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

# கும்பமேளா படகோட்டிக்கு ரூ.12.8 கோடி வரி வருமானவரித்துறை நோட்டீஸ்

உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத்தின் திரிவேணி சங்கமத்தில் ஜனவரி 23 முதல் பிப்ரவரி 26 வரை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடை பெறும் கும்பமேளா நிகழ்வு நடை பெற்றது. 45 நாட்கள் நடைபெற்ற இந்த கும்பமேளாவில் திரிவேணி சங்கமத்தை ஒட்டியுள்ள அரயில் கிராமத்தைச் சேர்ந்த பிண்ட்டு மெஹ்ரா என்ற படகோட்டும் குடும்பம் ரூ.30 கோடி சம்பாதித்தது. இதனை உத்தரப்பிரதேச முதலமைச்சர் ஆதித்யநாத் பெருமையுடன் கூறி யிருந்தார்.

இந்நிலையில், பிண்ட்டு மெஹ்ரா வுக்கு வருமான வரி சட்டம் 1961, பிரிவு 4 மற்றும் 68இன் கீழ் வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக செய்தி கள் வெளியாகியுள்ளன. அதாவது 45 நாட்களில் ரூ.30 கோடி வருமானம் ஈட்டி யதற்காக, ரூ.12.8 கோடி வரி செலுத்த வேண்டும் என்று வருமான வரித்துறை நோட்டீஸில் கூறப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# தமிழ் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை சொற்பொழிவு



தமிழ்ப் பல்கலைக்கழகம், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளியில் நிறுவப்பட்டுள்ள பேரா.ச. அகத்தியலிங்கனார், பேரா.செ.வை. சண்முகனார், பேரா. சிதம்பரநாதன் செட்டியார் மற்றும் திருமதி செண்பகம் சுப்பையா அறக்கட்டளைச் சொற்பொழிவு வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் பொறுப்புக் குழு, ஆட்சிக்குழு உறுப்பினர்களுமான சி.அமுதா, மரு.பெ. பாரதஜோதி ஆகியோர் தலைமை வகித்துப் பேசினர்.

பல்கலைக்கழகப் பதிவாளர்(பொ.) கோ.பன்னீர்செல்வம் வாழ்த்திப் பேசினார். சிறப்பு விருந்தினராக சீர்காழி எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தமிழ்ப் பேராசிரியர் கோ.சதீஸ், "ஒப்பியல் நோக்கில் அகத்தியலிங்கனார், செ.வை. சண்முகனாரின் சங்க இலக்கியப் பங்களிப்புகள்" என்னும் தலைப்பில் ஆராய்ச்சி உரையை வழங்கினார்.

சிறந்த மாணவர்கள் பத்து நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சிதம்பரநாதன் செட்டியாரின் அறக்கட்டளை மூலம் ஆண்டுதோறும் வழங்கப்படும் புத்தகப் பரிசினை வழங்கினார். முன்னதாக, மொழிப்புலத் தலைவரும் இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி துறையின் தலைவருமான ச.கவிதா வரவேற்றார். இணைப் பேராசிரியர் இரா.வெங்கடேசன் நன்றி கூறினார். முனைவர் பட்ட ஆய்வாளர் து.தர்ஷினி தொகுத்து வழங்கினார்.

# உதவிக்கரம்



கஸ்தூரி 'கார்மெண்ட்ஸ்' கம்பெனியில் சூப்பர்வைசர் ஆக வேலை பார்க்கிறாள். ஐந்துமாத கர்பிணி . ஸ்கேன் எடுக்க இன்று காலை பத்துமுப்பது மணிக்கு அப்பாயிண்மெண்ட் வாங்கியிருந்தாள்.

பஸ்'யை விட்டு இறங்கிய கஸ்தூரி, பிரேமா' ஸ்கேன் சென்டர் ' யை நோக்கி சென்று கொண்டிருந்தாள். எதிரில் வந்துகொண்டிருந்த வயதான பெண்மணி திடீரென மயங்கி கீழே விழுந்தாள். சுற்றியிருந்தோர் வாய் அளவில் அனுதாபப்பட்டனரே தவிர யாரும் உதவிட முன்வரவில்லை. கஸ்தூரி அந்த பெண்மணியை ஆட்டோவில் ஏற்றி அருகில் இருந்த 'ஹாஸ்பிடல்' ல் சேர்த்தாள். அட்வான்ஸ் பத்தாயிரம் பணம் கட்டினால் தான் அடுத்த கட்ட 'ட்ரீட்மெண்ட்'டே ஆரம்பிப்பதாக சொன்னதால், தன்னிடம் இருந்த பணத்தை கட்டினாள்.

நேற்று கஸ்தூரி தன் மருத்துவ செலவுக்காக நகையை அடமானம் வைத்து வாங்கிய பணம்தான் அது.

கஸ்தூரி, அந்த அம்மாவின் ' ஹேண்ட்பேக்' ல் அந்தம்மா பற்றிய தகவல் ஏதேனும் இருக்கிறதா என்று தேடினாள். உள்ளே உள்ள பர்ஸில் இருந்த போட்டோவை பார்த்தவுடன் திடுக்கிட்டாள்.

' நம்ம முதலாளி போட்டோ... ஒரு வேல இந்த அம்மா முதலாளி உடைய சொந்த அம்மாவா இருப்பாங்களோ... எதற்கும் முதலாளிக்கு 'கால்' பண்ணுவோம்...' போன் செய்த அரை மணி நேரத்தில் வந்துவிட்டார்.

" சார் இந்த பொண்ணு மட்டும் உங்க அம்மாவ சரியான நேரத்துல கொண்டு வரல...உங்க அம்மா பிழைக்கிறது கஷ்டம்தான்... அதுமட்டும் இல்ல சார் அட்வான்ஸ் பணம் பத்தாயிரம் வேற கட்டியிருக்கு... உண்மையிலேயே அந்த பொண்ணுக்கு பெரியமனசு..." 'ஹெட் நர்ஸ்' சொன்னவுடன்,

" சாரி கஸ்தூரி... என்ன மன்னிச்சிடு.... நீ உன் மெடிக்கல் செலவுக்கு சம்பள பணத்துல அட்வான்ஸ் கேட்ட ... நான் என் கம்பெனியில வேலசெய்ற உனக்கே கறாரா இல்லன்னு மறுத்துட்டேன்... ஆனா நீயோ முன்ன பின்னதெரியாத எங்க அம்மாவுக்கு இவ்வளவு உதவி பண்ணிருக்க... ரொம்ப நன்றிம்மா... இந்தா இதுல இருபதாயிரம் இருக்கு எங்க அம்மாவுக்காக கட்டுன பத்தாயிரம் போக மீதி பத்தாயிரத்த உன் மெடிக்கல் செலவுக்கு இனாமா வச்சிக்க..."

"சாரி சார்... தப்பா நினைக்காதீங்க... இனாமா வேணாம் அட்வான்ஸா வச்சிக்கிறன் ...சம்பளத்துல பிடித்தம் பண்ணிக்கீங்க...பணத்தை வாங்கி கொண்டு 'ஸ்கேன் சென்டர்' யைநோக்கி நடந்தாள். முதலாளி ஏதும் பேச முடியாமல் வெட்கி நின்றார்.



**-சுகபாலா**
திருச்சி

# தகப்பன் தடம் மாறினால்



" பட்டுசாமி பெரிய மிராஸ்தார் பெயர் வாங்கிய நல்ல குடும்பம். ஏகப்பட்ட பரம்பரை சொத்து.

பட்டுசாமிக்கு நல்ல மனைவி ஒரு பெண் , இரண்டு ஆண் குழந்தைகள் . பெரிய மகன் வாய் பேச முடியாதவன் .

பட்டுசாமி தன் தாய் தந்தை மறைவிற்கு பிறகு தடம் மாறினான், முன்னணி நடிகையை வாடகைக்கு எடுத்து குடும்பம் நடத்தினான் . தன் மகளை ஆண் போல் வளர்த்தான்.

சொத்து கரையத் தொடங்கியது . விவசாயம் தான் தொழில் பல ஏக்கர் நிலம் கைவசம் இருந்தது .

மகள் எதற்கும் அடங்காமல் வளர்ந்தால் ஜிம் , கியர் புல்லட் சமேதம் ஊர் சுத்தவது என இருந்தாள் . திருமணம் செய்து வைத்தனர் . ஒரு வருடத்தில் மாப்பிள்ளை இடம் தெரியாமல் ஓடி மறைந்தான்.

அம்மா ராஜன் மகளின் வாழ்க்கை , வாய் பேச முடியாத பெரிய மகன் திருமணம் ஆகாத நிலை கண்டு மன அழுத்தத்தில் உயிர் இழந்தாள் .

பட்டுசாமி மாறவில்லை மன்மத ஆட்டத்தில் அறுபதிலும் திளைத்தார் . திடீரென உடல் மெலிந்து படுக்கையில் விழுந்தாள் மகள் ரமா . மீண்டு வரவில்லை இறந்து போனாள் வயது நாற்பது எட்டாத நிலையில் கொடுமையிலும் கொடுமை அது.

திருமணம் ஆகாமல் மூன்றாவது மகன் , பெரியமகன், இப்போது பட்டுசாமியின் கையிருப்பு , பல ஏக்கர் நிலம் வீடு அனைத்தும் வேறு இடம் தேடி போய் விட்டது .

மனம் தடுமாறிய பட்டுசாமிக்கு முதுமை ஆட்கொண்டது . பழைய நினைவுகள் வாழ்க்கையில் தான் செய்த தவறுகள் கண்களை குளமாக்கியது.

கடைசி மகன் ஒருவரிடம் வேலைக்கு சேர்ந்து கொண்டு வரும் சொற்ப வருமானத்தில் குடும்பம் வெளியில் தெரியாமல் நடந்தது .

ஆழ்மனம் வாட்டி எடுத்தது பட்டு சாமிக்கு பணத்திமிர் படுத்திய பாடு கொஞ்சம் கொஞ்சமாக புரிந்தது . மனைவி மகள் இழப்பு வாட்டியது .

இறப்பை வேண்டி தினமும் பிரார்த்தனையாக ஓடியது பட்டு சாமிக்கு ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாக இப்போது .

தகப்பன் தடம் மாறினால் குடும்பம் வீதிக்கு வரும் என்பது உண்மை தான் போல ..."

**சீர்காழி.**
**ஆர். சீதாராமன்**

# சப்திமிடும் மௌனங்கள்....

(பகுதி-3)

(புதிய தொடர்கதை)



■சசிகலா திருமால் கீழப்பழுவூர்.

தான் நினைத்தது போலவே அன்று சாயங்காலம் இலக்கியா தீபக்கின் வீட்டிற்கு வந்தாள். அவளின் வருகையை எதிர்நோக்கி காத்திருந்த தீபக், "கண்மணி நீ வர காத்திருந்தேன் ஜன்னலில் பூத்திருந்தேன்" என்ற பாடலை டேப்ரிக்கார்டரில் ஒலிக்கவிட்டபடியே ஜன்னல் அருகில் அமர்ந்து அழகிய புன்னகை ஒன்றை உதிர்த்தான் . இவர்கள் இருவருக்கும் மனதளவில் ஒருவருக்கொருவர் பிடித்திருக்கிறது என்பதை அறிந்திருந்த ராதாவோ, "ஓஹோ சுட்சுவேஷன் சாங்கோ" என்று மெதுவாக கிண்டலடிக்க, இலக்கியா வெட்கம் தாளாமல் வேகமாக வீட்டிற்குள் ஓடினாள். அங்கே வராண்டாவில் உட்கார்ந்து காபி குடித்துக்கொண்டு இருந்த தீபக்கின் அம்மா, "வாம்மா இலக்கியா இந்தா காபி குடி" என்று இவளிடம் காபி டம்ளரை நீட்டினாள். இல்ல நா இப்போதான் குடிச்சிட்டு வந்தேன். நீங்க குடிங்க என்றவாறே ராதாவின் அறைக்குள் நகர்ந்தாள்.

சற்று நேரத்திற்கு எல்லாம் "ராதா.. ஏய்.. ராதா நா தோட்டத்துக்கு போறேன் வர்றதுக்கு கொஞ்சம் நேரமாகும்.. எதிர்வீட்டுக்கு பால் எடுத்து வச்சிருக்கேன். அவங்க வந்தா எடுத்து குடு சரியா.. " என்று சத்தமாக கூறிக்கொண்டே தோட்டத்திற்கு புறப்பட்டாள் தீபக்கின் அம்மா.

"ம்ம்ம்.. சரிம்மா என்றவாறே, அப்பாடா.. அம்மா கிளம்பிட்டாங்க.. எப்போ பார்த்தாலும் ஏதாவது வேலை சொல்லியே கொல்லுவாங்கப்பா" என்று சலித்துக்கொண்டாள் ராதா..

அம்மா தோட்டத்திற்கு செல்லும் இந்த நேரம் தான் சரியான நேரம்.. ராதாவிடம் எப்படியாவது பேசிவிட வேண்டும் என்று எண்ணியவாறே, "ராதா.. ராதா.. இங்கே கொஞ்சம் வாயேன்" என்று தீபக் ராதாவை அழைக்க, "ம்க்கும் அம்மாவுக்கு அடுத்து இவன் தொல்லை தாங்கலியே.. இருடி வரேன்"என்று இலக்கியாவிடம் சொல்லி விட்டு நேரே தீபக்கிடம் சென்றவள், "இப்போ உனக்கு என்ன அண்ணா வேணும்?"என்றாள்.

தீபக் ராதாவிடம் தயங்கி தயங்கி, "ராதா... நா இலக்கியாகிட்ட கொஞ்சம் பேசணும், ஒரு பைவ் மினிட்ஸ் வெளியில இருந்து பார்த்துக்குறியா, வீட்டுக்கு யாராவது வந்தா சொல்றியா ப்ளீஸ்" என்று அசடு வழிந்தான்.

"அதுசரி.. இதுவேறையா.. வேற வழி நீ அண்ணனா போய்டியே .. சரி இரு.. புக் எடுத்துட்டு வரேன். படிக்கிறா மாதிரி நடிக்கவாவது செய்யணும் இல்ல".. என்றவள் ரூமிற்கு சென்றாள்.



இலக்கியாவிடம், "ஏய்.. இலக்கியா , அண்ணா ஏதோ உங்கிட்ட பேசணுமாம் அதுக்கு யாரும் வராம நான் காவல் காக்கணுமாம்.. நான் வெளியில திண்ணையில வெயிட் பண்றேன் நீங்க பேசிட்டு சொல்லுங்க.. சரியா.. ரொம்ப நேரம் பேசாதீங்க என்னால தாக்குப்பிடிக்க முடியாது சரியா".. என்றாள்.

"என்னடி சொல்ற .. எனக்கு பயமா இருக்கு.. நான் மாட்டேன் பா.. நான் வீட்டுக்கு போறேன்" என்று இலக்கியா பதற, "அட எங்க அண்ணன் ஒண்ணும் உன்னை விழுங்கிட மாட்டான்.. சும்மா பேசுடி.. நான் தான் வெளியில இருக்கேன்ல அப்புறம் என்ன பயம்?".. என்றவாறே ஒரு நமட்டு சிரிப்பு சிரித்துவிட்டு புத்தகத்தோடு வெளியேறினாள்.

இலக்கியாவை ஒருவித பதற்றம் தொற்றிக் கொண்டது. இதயம் இருமடங்காய் துடிக்க துவங்கியது. ராதா வெளியேறிய இரண்டொரு வினாடிகளில் தீபக் அறைக்குள் வந்தான். அவனை பார்த்தவுடன் என்ன செய்வதென்று அறியாமல் விழித்தாள். அவனும் சற்று பதற்றத்துடன் தான் காணப்பட்டான். "காலையில உங்கிட்ட ஒண்ணு சொன்னேன்.. அதுக்கு நீ இன்னும் பதில் சொல்லவே இல்லையே" என்று தயக்கமாய் சொன்னவனிடம், "உங்களுக்கு கொஞ்சமாச்சும் அறிவிருக்கா.. நீங்கப் பாட்டுக்கு காலையில வீட்டுக்கு போன் பண்றீங்க. என்ன ஏதுனு அம்மா கேட்கவும் எனக்கு என்ன பண்றதுனே தெரியல.. ரொம்ப பயந்துட்டேன்" என்று சற்றே குரலுயர்த்தி சொன்னவளை பார்த்து, "அச்சச்சோ.. என்னாச்சு.. அம்மாவுக்கு சந்தேகம் வந்திடுச்சா.. நீ மாட்டிக்கிட்டியா" என்று பதற்றமாக கேட்டான் தீபக். "அய்யோடா.. இப்ப இவ்ளோ பதறுறீங்க. இதெல்லாம் போன் பண்றதுக்கு முன்னாடி யோசிச்சு இருக்கணும் பாஸ். பஸ்பாஸ் எடுக்கணுமானு கேட்கதான் கால் பண்ணுனீங்கனு சொல்லி சமாளிச்சுட்டேன்".. என்றாள் இலக்கியா.

"அப்பாடா.. இப்போதான் நிம்மதியா இருக்கு. சரி அதவிடு. நா கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லவே இல்லையே.. ப்ளீஸ் பதில் சொல்லு.."என்று, அவள் என்ன சொல்வாளோ என்ற ஆர்வத்துடன் அவளது முகத்தையே உற்று நோக்கினான்.

அவனது முகத்தை ரசித்தபடியே ஒன்றும் அறியாதவள் போல், "என்ன சொன்னீங்க நான் பதட்டத்துல சரியா கவனிக்கல" என்று சொல்லி முடிக்கவும்.. "அண்ணா.. பால் வாங்குறதுக்காக எதிர் வீட்டு அக்கா வராங்க.. பக்கத்து வீட்டு பசங்களும் படிக்க வந்துட்டாங்கண்ணா" என்றவாறே ரூமிற்கு வர, இலக்கியா சட்டென்று வெளியேறி திண்ணைக்கு வந்தமர்ந்தாள். "ஏய்.. இலக்கியா ஏதாவது சொல்லிட்டு போ.. " என்றவாறே அவளை பின்தொடர்ந்து வந்தான் தீபக்.

பக்கத்து வீட்டு குட்டி பசங்க எப்போதும் ராதாகிட்ட வந்து டியூஷன் படிச்சிட்டு போறது வழக்கம். பசங்க பக்கத்துல உட்கார்ந்த தீபக் , இலக்கியாவை பார்த்து "ப்ளீஸ் ஏதாவது சொல்லு".. என்பது போல் புருவத்தை சுருக்க... "என்ன" என்பது போல் இவளும் புருவத்தை உயர்த்தி காட்ட... அருகிலிருந்த பையனின் சிலேட்டை வாங்கி "ஐ லவ் யூ" என்று எழுதி அவளிடம் காட்டினான் தீபக்.

"அண்ணா.. என்னோட சிலேட் குடுங்க அண்ணா"... என்று அந்த சிறுவன் அடம்பிடிக்க.. அதை பார்த்து இலக்கியா சிரிக்க... இதையெல்லாம் ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்த ராதாவோ, "என்னவோ நடக்குது மர்மமா இருக்குது" என்று கேலியாய் பாட்டுபாட, "ஏய்.. அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல.. சரி... நேரமாச்சு.. நான் வீட்டுக்கு போறேன்.. பை ராதா" என்றவாறு சட்டென்று எழுந்தவளை ஏமாற்றமாய் பார்த்தான் தீபக்.

இலக்கியாவுக்கு என்னை பிடிச்சிருக்குனு தெரியும்.. ஆனா அவ அத எப்போ ஒத்துக்குவானு தெரியலையே ... என்று சிந்தித்தவாறே அவளின் பதிலுக்காகக் காத்திருக்க தொடங்கினான் தீபக்.

(தொடரும்...)

# பாதைகள் பயணங்கள்

கடவுளை நம்புபவர்களுக்கு பயணம் செய்யும்போது நம்பிக்கை பாலமிடும். அதுவே வழி காண்பிக்கும். இதில் நாம் நிறைய விஷயங்களை கண்கூடாய் பார்த்திருப்போம். நிறைய பேர் சொல்லிக் கேள்வியும் பட்டிருப்போம்.

அதற்கு என்ன காரணம்?

நாம் நல்ல மனத்தோடு செய்யும் எந்த ஒரு நல்ல காரியமும், நாம் ஒரு ஆபத்தில் இருக்கும் போது, நம்மை காப்பாற்றும் என்பதே அது. உதாரணமாக நெருப்பு விபத்து, நம் கண்ணுக்கு, எதிரே இருக்கும் பள்ளத்தாக்குகள், வெள்ளம், நம்மை ஆயுதம் தாங்கி ஒருவர் குத்த வரும்போது, விபத்துகள், இவை எல்லாவற்றுக்குமே நமக்கு கடவுளால் கொடுக்கப்படும் உள் உணர்வின் எச்சரிக்கையில் நாம் நிச்சயமாக காப்பாற்றப் பட்டிருப்போம். அந்த உள் உணர்வை கொடுப்பது நாம் செய்த நல்ல செயலால் தான். அந்த சமயத்தில் கடவுள் வந்து நமக்கு சமிக்ஞை கொடுப்பார். அதில் நாம் நிச்சயம் காப்பாற்றப்படுவோம். இதில் இஞ்சித்தும் சந்தேகமில்லை.

என்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மயிர் கூச்செறியும் சம்பவம் அது. ஒரு முறை ஒரு இடத்தில் மேம்பாலம் கட்டிக் கொண்டிருந்த பொழுது அந்தப் பகுதி பாலம் பாதியிலேயே விடப்பட்டிருந்தது என்பதை பெரும்பாலானவர்கள் அறியவில்லை. அங்கு அபாயம் என்று எழுதி வைக்கப்பட்டிருந்த சிவப்பு நிற கொடி கம்பியில் இருந்து உருவிக்கொண்டு காற்றில் பறந்து விழுந்து இருக்கிறது. அதை நாங்கள் கவனிக்கவில்லை. என்னுடைய மகளும் நானும் பைக்கில் சென்று கொண்டிருக்கிறோம். அன்று என்னவோ தெரியவில்லை எங்களுடைய பைக் மக்கர் செய்தது. வண்டியை விட்டு இறங்கி என் மகள் வண்டியை ஏதோ சரி செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது எதிரே ஒருவர் ஸ்கூட்டரில் வந்தார் வந்தார். மேடம் இந்த பாலம் பாதியிலேயே நிற்கிறது, நானும் விழாமல் தப்பித்தேன், நல்லவேளை சரியான சமயத்தில் உங்கள் பைக் ரிப்பேர் ஆகிவிட்டது, திரும்பி விடுங்கள், அங்கே பாலம் முடியாமல் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதல பாதாளத்தில் விழுந்து விடுவீர்கள் என்று அவர் சொன்னதும் அப்பொழுதுதான் கவனித்தோம் பாலம் அப்படியே தொங்கிக் கொண்டிருந்தது. அதற்கு கீழே 300 அடி ரோடு. நினைத்துப் பாருங்கள் விழுந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று யார் காப்பாற்றியது? நம்முடைய நற்செயல்கள் தான் காப்பாற்றி இருக்கிறது. அன்றிலிருந்து இன்னும் உறுதி எடுத்துக் கொண்டேன். ஒரு துளி கூட மனதில் கெட்ட எண்ணத்தை விதைக்கக் கூடாது என்று. சொல்லும்போது இன்னொரு விஷயமும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மற்றவர்கள் சந்தோஷப்படும் பொழுது நீங்கள் துன்பப்படாதீர்கள், மற்றவர்கள் துன்பப்படும் போது நீங்கள் சந்தோஷ படாதீர்கள் இது இரண்டையும் வாழ்க்கையில் எப்போதும் கடைபிடிக்க வேண்டும்.

நம்முடைய பாதை பயணங்கள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்.

**நம்மிடம் ஒருவர் அன்பு செலுத்துகிறார் ஏதோ சந்தர்ப்ப வசத்தால் அவருக்கும் நமக்கும் சண்டை வந்துவிடுகிறது. இந்த சம்பந்தப்பட்டவர் உங்களிடம் வந்து மன்னிப்பு கேட்கிறார். ஆனால் நம்முடைய அகங்காரம் என்ன சொல்கிறது. அன்பை புரிந்து கொள்ளாமல், மற்றவர்களை கதற விடுவது. அது ஒரு நல்ல பண்பு கிடையாது. அதேபோன்று ஒருபோதும் செய்யாதீர்கள். மன்னிப்பு கேட்பவன் மனிதன் மன்னிக்க தெரிந்தவன் மாமனிதன்.

** பகவத் கீதையில் சொல்லி இருப்பது என்



நினைவில் வந்தது. வெறுக்க கூடாத உறவுகள் நான்கு தாய் தந்தை சகோதர சகோதரிகள். நாம் ஊருக்கு நல்ல பேர் எடுக்கலாம். இதோ வருகிறாரே இவரை மாதிரி ஒரு மக்களுக்கு சேவை செய்ய முடியாது அவ்வளவு பண்பாளர் என்றெல்லாம் பெயர் வாங்கி இருப்போம். ஆனால் வீட்டுக்குள் வந்தால் சகோதரன் வீடு கட்டினால் பொறாமை, சகோதரி வீட்டில் ஒரு நல்லது நடந்தால் பொறாமை, அம்மா அப்பா வளரும் வரைக்கும் தான் அதன் பிறகு அம்மா அப்பாவை மதிக்காமல் இருப்பது. மனைவியின் பேச்சை கணவன் கேட்டுக் கொண்டு அல்லது கணவன் பேச்சை மனைவி கேட்டுக்கொண்டு பெற்றோர்களை வெறுப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தாய் தந்தை இல்லாமல் நாம் இல்லை. சகோதர சகோதரிகளின் அன்பு இல்லாமல் நமக்கு வாழ்க்கை இல்லை. தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்று ஒரு பழமொழி இருக்கிறது. சகோதர சகோதரிகளில் யாருக்காவது ஒரு ஆபத்து என்றால் இங்கே நம்முடைய இதயம் படபட என்று அடிக்கும் வயிறு கலங்கி எழும். அதுதான் ரத்த பாசம். " இரத்தம் தண்ணீரை விட அடர்த்தியானது" என்ற ஒரு பழமொழி" இருக்கிறது. அது 100% உண்மை. எனவே தயவு செய்து தாய் தந்தை சகோதர சகோதரிகளே ஒருபோதும் வெறுக்காதீர்கள். ரத்த உறவுகளை வீதியில் தவிக்கவிடுவது என்பது கடவுளுக்கே நம் மீது இரக்கம் இல்லாமல் போகும் அளவு செய்து விடும். கவனம் தேவை.

**அதே போல் ஒருவனின் உழைப்பை ஏமாற்றி அவர்களிடம் இருந்து பணத்தையோ அல்லது அவர்களுடைய உறவையோ பறிக்கும் பொழுது, ஒரு கட்டத்தில் தானாக உங்களுடைய வேகம் குறைந்து விடும் காரணம். கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை விட நம் மனசாட்சி கடவுளை விட பெரியதாக உன்னை இயக்கும். நாம் மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டு திருந்தி, செய்த பாவத்துக்கு பரிகாரம் செய்வது ஆரம்பம் தான். அதை விட , நாம் அது போல் ஒரு தவறை வாழ்க்கையில் நினைக்கக் கூட கூடாது என்று உறுதியுடன் முடிவெடுக்க வேண்டும். நம் வள்ளுவ பெருந்தகையின் வாக்குப்படி "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என்பதை மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் வழி நடக்க வேண்டும்.

** இன்றைய காலகட்டத்தில் நாம் அனைவருடன் பழக வேண்டியது மறுக்க முடியாத ஒன்று. அதற்காக ஒருவன் எல்லோரையும் ஏமாற்றுகிறான் என்று தெரிந்தும் அவன் எந்த அடாவடி செயலுக்கும் துணை இருப்பான் என்று தெரிந்தும் அவனுடன் பழக வேண்டிய அவசியம் இல்லை. பழங்காலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது "தாமரை இலை தண்ணீர் போல்"என்று. அது இலையின் அங்கும் எங்கும் ஓடும் ஆனால் ஒட்டாது, இலையும் அதை ஏற்றுக் கொண்றார் போல் இருக்கும் ஆனால் ஒட்ட விடாது. இது போன்ற ஒரு பழக்கம் எந்த வித பிரச்சனையையும் நமக்கு ஏற்படுத்தாது.

** இன்றைக்கு துரோகத்தை விட கொடிய நஞ்சு எதுவும் கிடையாது. ஒருவருக்கு நம்பிக்கை துரோகம் செய்யும் பொழுது அது அந்த மனிதனை அணு அணுவாக கொல்லும். ஒரு காலகட்டத்திற்கு பின் நம்பிக்கை துரோகம் செய்தவனை அது கொல்ல ஆரம்பிக்கும். இதுதான் உண்மை.

முடிவாய் ஒன்று. நமக்கு ஒரு பக்கம் கடவுள் பாதை காட்டுகிறார். மறு பக்கம் அரக்க குணம் கொண்ட பாதை நம்மை வழிநடத்தத் தயாராக இருக்கிறது. சரியான பாதையை நாம் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காகத்தான் நல்லவர்களுடைய பழக்கவழக்கங்கள், மூதாதையர்களின் அறிவுரைகள், நம்முடைய உண்மையான கடவுள் பக்தி இதைக் கொண்டு நல்லதை தேர்ந்தெடுப்பதே நமக்கு நல்லது. இன்னும் எதுவும் கெட்டு விடவில்லை. எதுவும் நடக்காமல் இருப்பதை விட தாமதமாக நடப்பது விரும்பத்தக்கது.

-திருமாமகள்

---

தினம் ஒரு தலைவர்கள்

# சங்கு சுப்பிரமணியம் வரலாறு

## பிறப்பு

சங்கு சுப்பிரமணியம். 18 நவம்பர் 1905ல் திருவாரூர் மாவட்டம், தேரழுந்தூரில், மீனாட்சி, சுந்தரம் எனும் தம்பதியருக்குப் பிறந்தார்.


## வாழ்க்கைக் குறிப்பு

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதிலேயே தந்தையார் வேலை தேடி ஆப்பிரிக்கா சென்றிட, உயர்நிலைப்பள்ளி படித்த சுப்பிரமணியமின் தலையில் குடும்ப பொறுப்பு விழுந்தது. தேரெழுந்தூர் சிற்றரச குடும்பத்தில் உள்ள சிறுவர்களுக்கு தனிப்படிப்பு சொல்லித் தந்து பணிபுரிந்தார். அச்சிறார் சரியாக படிக்கவில்லை என்றால் சிறார்கள் கண்காண தன்னையே அடித்துக்கொள்வாராம். தன்னை தானே அடிப்பேனே தவிர மற்றவரை துன்புறுத்தாத குணம், சிறு வயதில் இருந்தே இருந்திருக்கிறது.

## திருமண வாழ்க்கை

தீண்டாமையை வெறுத்தார் சங்கு. அக்காலத்தே தீண்டத் தகாத மக்களுக்கு உணவளித்ததால் மிகவும் வசைக்கு உள்ளான பெண்மணி சரஸ்வதி. அவரை திருமணம் புரிந்தார் சங்கு. அவருக்கு 8 குழந்தைகள். 5 பெண் குழந்தைகள், 3 ஆண் குழந்தைகள்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு சங்கு ஒரு தீவிர காந்தியவாதி. மக்களுக்கு விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் சென்று சேராத காலம். அந்நாட்களில் செய்தித்தாளோ பத்திரிகைகளோ அதிக விலைக் கொடுத்து வாங்க முடியாத நிலையில் மக்கள் இருந்தனர். ஓரணா, இரண்டனா என பத்திரிக்கைகள் விற்ற பொது காலணாவிற்கு சுதந்திரச் சங்கு என்ற பத்திரிகையை 1930ல் தொடங்கினார். "சுதந்திரச்சங்கு" மிகவும் பிரபலமாகப் பேசப்பட்டு, அப்பத்திரிகையின் பெயரிலிருந்த பின் பகுதியான ‘சங்கு’ ஆசிரியரான சுப்ரமணியத்துடன் இணைந்து பின்பு சங்கு சுப்ரமணியம் என்றே நிலைத்து விட்டது. சி. சு. செல்லப்பா, பாரதியார், பாரதிதாசன் போன்றவர்களின் கட்டுரை, சிறுகதைகள் என பல வெளியிட்டார். விடுதலைப் போராட்டத்தில் பல முறை கைதானார் சங்கு. போராட்டம் சூடு பிடித்த போது திருவல்லிக்கேணி பகுதியில் உள்ள ஐஸ் ஹவுஸ் பகுதியில் பேரணி நடைபெற்றது. கூட்டத்திற்கு தன் இரு பெண் குழந்தைகளை கூட்டிப்போனார். அந்த பேரணியை தடுக்க வந்த காவலர் கலைந்து போகுமாறு மிரட்ட தன் மேல்சட்டையை கழற்றி " என்ன செய்வாய், சுடுவாயா? சுடு!" என்றாராம். காவலர் அவரை கைது செய்தனர். பெண்களுக்கோ சிறுவயது. இராயப்பேட்டையில் வீடு. இரண்டு மைல் மாலை நேரம் தனியாக பெண்கள் நடந்தே செல்லவேண்டும். என்னவாகும் என மன பதபதைத்தாலும், சுதந்திர தாகம் மேற்கொள்ள கைதானார் சங்கு. சுதந்திர போராட்டத்தை தூண்டியதற்காக



பத்திரிக்கையை நிறுத்த ஆங்கிலேய அரசாங்கம் பலவழிகளில் முயற்சித்தது. அவருக்கு கட்டுரைகள் வந்து சேராமல் இருக்க காவலர் அவர் வீட்டின் முன் நிற்பார்கள். யாரேனும் படித்தவர் வந்தால் முழுமையாக சோதனை செய்து உள்ளே அனுப்புவார்களாம். அதனால் அதை அறிந்த கட்டுரையாளர்கள் தெரு முனையில் இருந்த பால்காரரிடமோ, மளிகைக் கடையிலோ கட்டுரைகள் கொடுத்துச் செல்வார்கள். அவர்களும் மளிகை சாமானுடனோ, பால் தரும் போதோ வீட்டில் சேர்ப்பார்களாம்.

## இலக்கியப் பணி

பல பத்திரிக்கைகளில் கதை சிறுகதை, கட்டுரை என எழுதியவர் சங்கு. அவரின் படைப்புகள் சுதேசமித்திரன், மணிக்கொடி அனுமான், பத்திரிகைகளிலும் வெளிவந்தன. சுதேசமித்திரன் பத்திரிகையிலும் சில காலம் பணியாற்றினார். அனுமான், மணிக்கொடி போன்ற இலக்கிய பத்திரிகைகளிலும் ஆசிரியராக பணியாற்றியவர் சங்கு. "தினமணி"யில் பாகவதக் கதைகள் எழுதினார். இதற்காக திராவிட இயக்கங்கள் இவரை பக்தி மார்க்கத்திற்காக எதிர்த்தன. ஜயதேவரின் "கீதகோவிந்தம்" நூலை தமிழில் மொழிபெயர்த்தார். இன்றும் இம் மொழிபெயர்ப்பு கையெழுத்துப் பிரதியாகவே வலம் வருகிறது. திரைப்படத்துறையில் சங்கு ஜெமினி வாசனுடன் நெருக்கமானவர் சங்கு. அவர் ஜெமினி கதைக் குழுவில் பல படங்களுக்கு கதை எழுதியவர். சக்ரதாரி, சந்திரலேகா, ராஜி என் கண்மணி போன்ற படங்களில் கதை, பாடல்கள் என எழுதியுள்ளார். ஸ்ரீராமானுஜர் என்ற திரைப்படத்தில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார். சக்ரதாரி படத்தில் ஒரு சிறிய பாத்திரத்தில் பாடலை தெருவில் பாடிவரும் பாகவதராகவும் நடித்திருக்கிறார்.

## இறப்பு

15 பிப்ரவரி 1969ல் சென்னையில் காலமானார்

# வரலட்சுமியின் வீடியோவால் ரசிகர்கள் அதிர்ச்சி..

நடிகை வரலக்ஷ்மி சரத்குமார் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள புகைப்படம் ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. போடா போடி படத்தின் மூலம் திரையுலகில் கதாநாயகியாக அறிமுகமானார்.

பின் தொடர்ந்து தாரை தப்பட்டை, விக்ரம் வேதா, மாரி 2 ஆகிய படங்களில் முக்கிய கதாபத்திரங்களில் நடித்திருந்தார். மேலும் சர்கார் மற்றும் சண்டக்கோழி ஆகிய படங்களில் வில்லியாக நடித்து மிரட்டியிருந்தார்.

தமிழ் மட்டுமின்றி தெலுங்கிலும் தனக்கென்று தனி மார்க்கெட்டை நடிகை வரலக்ஷ்மி சரத்குமார் உருவாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு இவர் நடிப்பில் வெளிவந்த மதகஜராஜா திரைப்படம் மாபெரும் அளவில் வெற்றியடைந்துள்ளது.

கடந்த ஆண்டு தனது காதலர் நிகோலாய் என்பவரை திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்கு தனது படங்களில் பிசியாக நடித்து வருகிறார். மேலும் ஜீ தமிழில் நடைபெற்று வரும் நடன நிகழ்ச்சியில் நடுவராக இருக்கிறார்.

இந்த நிலையில், கையில் கட்டுடன் நடிகை வரலக்ஷ்மி சரத்குமார் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரி பக்கத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார். இந்த வீடியோவை பார்த்த ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதில், அவர் ஒரு படத்தின் படப்பிடிப்பின் பொது சண்டை காட்சியில் தனது கட்டை விரலில் காயம் ஏற்பட்டுவிட்டதாக கூறியுள்ளார். மேலும் குணமடைந்தவுடன் விரைவில் படப்பிடிப்பில் இணைந்துவிடுவேன் என்று வரலக்ஷ்மி தெரிவித்துள்ளார்.



# தள்ளி, தள்ளிப்போகும் பிரபாஸ் திரைப்படம்

பிரபாஸ் நடித்த 'சலார்' படம் கடந்த 2023-ம் ஆண்டில் வெளியாகி 'ஹிட்' அடித்தது.

படக்குழுவினருடன், பிரபாசுக்கு தகராறு என்றும் சினிமா வட்டாரத்தில் பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பிரசாந்த் நீல் இயக்கத்தில் பிரபாஸ் நடித்த 'சலார்' படம் கடந்த 2023-ம் ஆண்டில் வெளியாகி 'ஹிட்' அடித்தது. ஆக்ஷன் கதைக்களத்தில் உருவான இந்த படம், ரசிகர்களால் பெரிதும் கொண்டாடப்பட்டது. தொடர் தோல்விகளால் துவண்டு போயிருந்த பிரபாசுக்கு 'கம்பேக்' படமாகவும் அமைந்தது.

'சலார்' படத்தின் 2-ம் பாகம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், விரைவில் இதன் படப்பிடிப்பு தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில் இந்த படம் தள்ளிப்போகிறது என்ற தகவல் வெளியாகி இருக்கிறது.

பிரபாஸ் தற்போது மாருதி இயக்கத்தில் 'தி ராஜாசாப்' படத்திலும், முகேஷ்குமார் சிங் இயக்கத்தில் 'கண்ணப்பா' படத்திலும் நடித்து வருகிறார்.

இதனைத்தொடர்ந்து 'ஹனு-மான்' படத்தை இயக்கிய பிரஷாந்த் வர்மா இயக்கத்தில் புதிய படத்தில் பிரபாஸ் நடிக்க போவதாகவும், இதன் காரணமாகவே 'சலார்-2' படத்தை அவர் தள்ளிவைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

'சலார்-2' படம் தள்ளிப்போனதற்கு படக்குழுவினருடன், பிரபாசுக்கு தகராறு என்றும் சினிமா வட்டாரத்தில் பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



# தமிழ் சினிமாவில் அறிமுகமாகும் பிரபல கன்னட இயக்குநர்



கன்னடா திரையுலகின் முன்னணி இயக்குநராக இருக்கும் சந்தோஷ் குமார் தமிழில் அறிமுகமாகிறார். தமிழ் மொழியில் இவர் இயக்கும் படத்திற்கு "யுவன் ராபின் ஹூட்" என தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை இவரே எழுதி, இயக்கி, தயாரித்துள்ளார். முன்னதாக இவர் கேம்பஸ் கிராண்டி, ஸ்டூடண்ட்ஸ், பிருந்தாஸ் கூக்லி போன்ற படங்களை இயக்கியுள்ளார்.

இவர் தற்போது இயக்கும் யுவன் ராபின் ஹூட் படத்தின் மூலம் கன்னட நடிகர் வீரன் கேஷவ் தமிழ் சினிமாவில் நாயகனாக அறிமுகமாகிறார். நாயகியாக பாலிவுட் நடிகை அல்பிஃயா ஷேக் அறிமுகமாகிறார். இவர்களுடன் ரித்விகா, பொன்வண்ணன், ஸ்ருதி சுதிர், தேஷ்பாண்டே, சந்திர சேகர் உள்ளிட்ட பல முன்னணி நட்சத்திரங்கள் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

பேஷன் மூவி மேக்கர்ஸ் நிறுவனம் சார்பில் சந்தோஷ் குமார் தயாரித்து இயக்கும் இப்படத்தின் துவக்க விழா சென்னையில் நடைபெற்றது. இதில், படக்குழுவினருடன் திரையுலக பிரபலங்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் படத்திற்கு மார்டின் கிளமண்ட் இசையமைக்கிறார். மேத்தீவ் ராஜன் ஒளிப்பதிவு செய்கிறார். சரண் சண்முகம் படத்தொகுப்பு செய்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு சென்னை, மும்பை, பெங்களூர் ஆகிய பகுதிகளில் நடத்த படக்குழு திட்டமிட்டுள்ளது.

இம்மாதம் இறுதியில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்குகிறது. நேரடி தமிழ்ப் படமாக உருவாகும் இப்படம் கன்னடம் மற்றும் இந்தி மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியாக உள்ளது.

# மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய ஏ.ஆர்.ரகுமான்

ஏ.ஆர்.ரகுமான் நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலால் பரபரப்பு ஏற்பட்டது.

ஏ.ஆர்.ரகுமான் நலமாக உள்ளதாகவும் விரைவில் வீடு திரும்புவார் என்றும் தெரிவித்தனர்! மகிழ்ச்சி! என முதலமைச்சர் தெரிவித்தார்.

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் இன்று காலை நெஞ்சு வலிப்பதாக கூறியதை அடுத்து சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதை தொடர்ந்து அவருக்கு மருத்துவர்கள் குழு சிகிச்சை அளித்தது.

இதனிடையே ஏ.ஆர். ரகுமான் நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள செய்தியறிந்தவுடன், மருத்துவர்களைத் தொடர்புகொண்டு அவரது உடல்நலன் குறித்துக் கேட்டறிந்தேன்! அவர் நலமாக உள்ளதாகவும் விரைவில் வீடு திரும்புவார் என்றும் தெரிவித்தனர்! மகிழ்ச்சி! என்று எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்தார்.

இந்த நிலையில், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் மருத்துவ பரிசோதனைகளுக்கு பிறகு வீடு திரும்பியுள்ளார். இதனிடையே, ஏ.ஆர். ரகுமானுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், ஏ.ஆர். ரகுமான் இன்று காலை நீரிழப்பு அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டார். இதன்பின் வழக்கமான பரிசோதனைக்கு பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்று கூறப்பட்டுள்ளது.



# பெருசு ஸ்னீக் பீக் காட்சி வெளியீடு

கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் அடுத்ததாக பெருசு என்ற திரைப்படத்தை தயாரித்துள்ளது.

இப்படத்தில் வைபவ், சுனில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் அடுத்ததாக பெருசு என்ற திரைப்படத்தை தயாரித்துள்ளது. இப்படத்தை இளங்கோ ராம் இயக்கியுள்ளார். படத்தின் இசையை அருண் ராஜ் மெற்கொண்டுள்ளார். திரைப்படம் வெளியாகி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இப்படத்தில் வைபவ், சுனில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இவர்களுடன் ரெடின் கிங்ஸ்லி, பால சரவணன், தீபா, நிஹரிகா, சாந்தினி, மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்தின் டிரெய்லர் அண்மையில் வெளியாகி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இதனால் படத்தை குறித்த எதிர்ப்பார்ப்பு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

இப்படம் வீட்டில் இறக்கும் ஒரு பெரியவரை, இறந்த பிறகு அவரால் ஏற்படும் பிரச்சனை மற்றும் அந்த இறுதி சடங்கில் நடக்கும் சிக்கலை சுற்றி கதைக்களம் அமைந்துள்ளது.

இந்நிலையில் படத்தின் ஸ்னீக் பீக் காட்சிகளை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த காட்சிகள் மிகவும் நகைச்சுவையாக அமைந்த் இருக்கிறது.



# லோகேஷ் கனகராஜ் பிறந்தநாளுக்கு காஸ்ட்லி கிப்ட் கொடுத்த கார்த்தி




நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகி வரும் திரைப்படம் கூலி. இந்தப் படத்தின் டைட்டில் வீடியோ மற்றும் பாடல் க்ளிம்ப்ஸ் உள்ளிட்டவை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வீடியோக்களும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன.

நேற்று பிறந்தநாள் கொண்டாடிய லோகேஷ் கனகராஜுக்கு பல்வேறு திரைப்பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்தனர். ஸ்ருதிஹாசன் அவரது வாழ்த்தை எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

இந்நிலையில் லோகேஷ் கனகராஜ் பிறந்த நாளை முன்னிட்டு, அவருக்கு பிடித்த காப்பு ஒன்றை பரிசளித்தார் கார்த்தி. அது ப்ளாட்டினத்தினால் உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பின் போது எடுத்த புகைப்படத்தினை வைத்து 'DILLI RETURNS' என்று ட்வீட் செய்துள்ளார். விரைவில் 'கைதி 2' படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகவுள்ளது. இதனை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் மற்றும் கே.வி.என் புரொடக்ஷன்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கவுள்ளன. படத்தின் படப்பிடிப்பு பணிகள் விரைவில் தொடங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.





**Kup Coffee Roasters**
நுங்கம்பாக்கம்/ஆழ்வார்பேட்டை
**எலக்ட்ரிஷியன் cum பிளம்பர் டெக்னீஷியன் தேவை**
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்
ct : 86376 25478

**WANTED**
SALES MANAGER - TAMILNADU
LADY BUSINESS SUPPORT EXECUTIVE
Surgical / Pharma Expereince Preffered
Email Resume to
orospine22@gmail.com

**G.D**
பெருங்காயம் & மசாலா கம்பெனிக்கு அனுபவம் உள்ள
**ASM**
**SALES OFFICER தேவை.**
PH. 8925956806
rehobothindustries07@gmail.com

1) Supervisor EEE 'C'
2) Electrician 'B'
3) HVAC Supervisor
4) Site Supervisor
விநாயகா எலக்ட்ரிகல்ஸ்
ஸ்பென்சர் பிளாசா மெயிண்டனன்ஸ் - சர்வீசஸ் லிட்.,
769, அண்ணாசாலை, சென்னை-2,
Ct: 9500011000

**WANTED**
(Automobile Sector)
1. QUALITY ENGINEER
(QC Documentation process must known)
(Qualification : DME, B.E, Mech)
2. CNC MACHINE OPERATOR & SETTER
(Qual: (10th, 12th, ITI DME Any degree)
KAKKALUR, THIRUVALLUR
Ct: 98407 68171

ஸ்ரீபெரும்புத்தூர் கம்பெனி ஹாஸ்டலுக்கு தங்கி வேலைசெய்ய ஆட்கள் தேவை
(அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
✳ INCHARGE
✳ செக்யூரிட்டி
✳ ELECTRICIAN
9789985835 / 7904602553

**WANTED @ AMBATTUR**
MATHUSAI PETRO PRODUCTS
• ACCOUNTANT
(Ms-Word,Ms-Excel,Good Knowledge in Tally Prime)
Exp:Min 2 yrs (M/F)
• SALES EXECUTIVE
Exp:Min 2 yrs (M/F)
• DRIVER
For Tanker Lorry & Eicher Lorry
Heavy & Light Motor Vechile Licence
Required Exp: Min 2 Yrs +
Good Salary + incentive Tamil,English,TTelugu, kanada
Qual: MCA, MBA,Graduate,Any Degree
for BITUMEN EMULSION Manufacturing company
No 17/1A , Anusha st, VGN Shanthi Ngr, Ambattur, Ch- 58.
9790927178 / 9444487731
mathusaibituchem@gmail.com

**LEAGUE CLUB**
Arumbakkam, Chennai
▪ KITCHEN SUPERVISOR
▪ HOUSE KEEPING STAFFS & SUPERVISOR
▪ CAR DRIVERS
AGE : 30 to 45
98404 67394

IN-BOUND CALLS / NO TARGET
( EXP FEMALE TAMIL or TELUGU )
**TELECALLER**
For XXX Capsules
SALARY - 14k to 16k + INC
BLM Enterprises
2/18, Kulandai Gramani St
Purasawalkam, Opp Tana st
98843 98857

HONDA ஷபீல் ஹோண்டா
2-வீலர் இன்ஜின் வேலை தெரிந்த
**மெக்கானிக்குகள் தேவை**
சம்பளம் 20000/-
Ct: 98408 85560
6, முடிச்சூர் மெயின் ரோடு, லஷ்மி நகர், முடிச்சூர், சென்னை-48

**VICTORIAN WOODS**
PANAIYUR, ECR , CHENNAI
▸ SHOWROOM SALES STAFF / MANAGER Experience in Furnitures selling is preferred.
▸ OFFICE ASSISTANT (ITI/DIP.)
▸ HELPER / LOADMAN
▸ SECURITY / HOUSEKEEPING
Timing 9.30 to 8.30. Salary ₹ 12,000/- to ₹ 15,000/- based on experience.
+ 91 81481 04380

**Supervisor தேவை**
கோசாலை பராமரிக்க தமிழ், இந்தி சரளமாக பேச தெரிந்த அனுபவம் மிக்க ஆட்கள் உடனடியாக தேவை.
தங்குமிடம் இலவசம்.
தொடர்புக்கு:
9176993738

KICL
வேளாண் இடுபொருட்கள் பிரிவில் விற்பனை பிரதிநிதிகள் தேவை
தேவையான தகுதிகள்
• 3 – 5 ஆண்டுகள் வேளாண் பூச்சிகொல்லி மற்றும் உரம் விற்பனை அனுபவம்
• ஏதேனும் ஒரு பட்டபடிப்பு (any degree)
• B.Sc (Agri) முடித்தவர்களுக்கு முன்னுரிமை
டீலர்கள் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து பணியாற்றக்கூடிய திறன் உள்ளவர்கள் தேவை
சம்பளம்
தகுதி மற்றும் அனுபவம் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.
பணியிடங்கள்:
தஞ்சாவூர் | விழுப்புரம் | ஈரோடு | சேலம் | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | திண்டுக்கல்
Mail to: recruitment@kotharis.in

**WANTED**
Accounts & Admin
Very Good Exp. in Tally & Administration with any deg.
Supervisor Any Degree / BE with good experience
No.1, Tamilarveethi, Choolaimedu, Ch-94, Nr. GG Mahal
Cont: 044-42034892
72999 40046

500 Cr Group is looking for
ACCOUNTS Sr.MANAGER
Salary Rs.70000/-, 15 years exp with Accounting + Tax knowledge.
ACCOUNTS MANAGER
Salary Rs.50000/-, 10 years exp with Accounting + Tax knowledge.
ACCOUNTANT - 4 Nos
Salary Rs.35000/-, 3- 5 years exp with good accounting knowledge.
Hindi added advantage
Immediate Joiner. Walk-in Monday to Wednesday
PPMS Field Marketing Pvt Ltd
6, 3rd Cross Street, Senthil Nagar, Kolathur, Chennai-99 Mb: 8428701276

**GYM - FRONT OFFICE**
Required for a Gym in ANNA NAGAR
Shift Timing: 6 am to 2 pm & 2 pm to 9.30 pm
Salary will commensurate depending on candidates Experience
Age below 30
Walk in Interview on 10.03.2025
# 3978, S Block, 1st Floor, 6th Avenue, Anna Nagar, Chennai - 600 040
044-26265077 / 81240 87777

WALK IN INTERVIEW @ PAZHAVANTHANGAL
+ DATA ENTRY OPERATOR
+ OFFICE ASSISTANTS
With Good Typing skills
Office Timing: 9.30am to 6.45pm
Salary Rs.15,000
Age below 30 years
Walk in for an interview: KGS Homes No. 14/15, 1st Floor, Door No. F1, College Road, Pazhavanthangal, Chennai-114
Walk in Interview Date: 10.03.2025
Ph: 95000 40777

வேலைவாய்ப்பு
“CAR WORKSHOP SERVICE ADVISOR”,
நீங்கள் ஆற்றல் மிக்கவராக இருந்தால் மற்றும் சென்னையில் உள்ள பன்னாட்டு நிறுவனத்தில் நேரடியாக வேலை செய்ய விரும்பினால், இந்த எண்ணை அழைக்கவும்
73059 67009

மிர்ச்சி கிளவுட் கிச்சன் ராயபுரம் - வேலை செய்ய அனுபவம்வாய்ந்த நபர்கள் தேவை
உணவு, தங்குமிடம் உண்டு
SOUTH INDIAN COOK
NORTH INDIAN CURRY COOK
TANDOOR COOK
CONTINENTAL COOK
F & B SERVICE SUPERVISOR
F & B SERVICE STEWARD
98413 00172
75501 90195

MRF TYRE SHOWROOM
விஜய் எண்டர்பிரைசஸ் -குன்றத்தூர்
#8/51, Kundrathur, Poonamallee Main Rd,Ch-69
ஆட்கள் தேவை - சேல்ஸ் பெண்கள் (COUNTER)
சம்பளம்: ₹ 20,000/-
94445 63950

Leading Electrical, Electronics & Fibre Cable Trading Organisation Requires the Following:
Mktg Sales Manager /
Sotres Incharge B.E/ Dip. in Electrical
Accountant / Accounts /
Office Asst. Tally exp 5 yrs
Stores / Delivery Asst.
+2 & above & Car Driver
All Positions Exp. in Tally, Excel & Mail Commn. Freshers can also apply
LOCATION : BROADWAY / AMBATTUR
99520 36461
sales@powertechcontrols.co.in

பொன்னேரியில் அமைந்துள்ள பேக்கேஜிங் தொழிற்சாலைக்கு அனுபவம் உள்ள கீழ்கண்ட நபர்கள் தேவை.
தொழிற்சாலை மேலாளர்
உதவி மேலாளர்
எக்ஸிகியூட்டிவ்
HR துறை, நிர்வாகம் (Admin), கணக்கு (Accounts)
PROFICIENCY IN ENGLISH IS MUST
Apply to:
admin@amoraproperties.com

மாங்காடு அருகில் உள்ள தனி வீட்டுக்கு
HIGH-END AUTOMATIC
கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை.
வயது : 30-45
நல்ல சம்பளம் கொடுக்கப்படும்
91507 60010,89396 90352




### குழந்தையை எழுப்புதல்

மெத்தையில்
மேனி கிடத்தி உறங்குகிறது
என் பொன்வீணை...

உறங்கும் வீணையை
அதிராமல் எழுப்புவது
எப்படி- எனும் ஆராய்ச்சியில்
உறைகிறேன் ..

சங்கெனச் சுழித்த
திங்களெனத் தெரிகிறதென்
பிள்ளை முகம்

சந்தடியின்றி எழும் காற்றின்
ஆலாபனையை அதன்
சுதந்திர சுவாசத்தில்
காண்கிறேன்.

இமைகள் அவிழ்கையில்
இதழ்களும் மலருமாறு
எழுப்ப விழைகிறேன்.

தெளிந்தநீரோடையைக்
கலவரப் படுத்தாது
அருந்த முயலும் ஓர்
உச்சி நேர யாத்ரீகன் போல்
மெலிதாய் அள்ளுகிறேன்

தன்போக்கில் உறங்கி
தன்போக்கில் எழுவதே
சோம்பல் முறித்த வில்லென
அறிந்தும் இயலவில்லையே
இயந்திர யுகத்தில்

பகல் நேரப் போர்க்களத்திற்கு
ஆயுதங்களோடு அணிவகுக்க
ஆயத்தமாகிறது அதிகாலை

நானோ மொட்டின் முகம்
கோணாமல் இதழ்கள்
அவிழக்காத்திருக்கிறேன்

அது சிரித்தபடி எழுந்து
என் தோள் சரிந்து
சின்ன இதழ் பதிக்கையில்
சித்தம் குளிரக்
காத்திருக்கிறேன்

அப்போது மீண்டும் நான்
புதிதாய் பிறப்பெடுப்பேன்



**ம.திருவள்ளுவர்**

### நீயும் நடுநிசியும்

திரியை தின்றழியும்
தீச்சுடராய் நேரம்
கழிகிறது
நீயும் நானும் மட்டும்
நிகழ்த்தும் இந்த
நடுநிசி
நாடக பொழுதை
பெருங்கடலாய்
ஆர்பரித்து கொண்டாய்!
மழை நின்ற பின்
மரக்கிளை தங்கும்
மழை துளியாய்
நனைக்கிறது
உன் முத்தம்.



**நா.சதீஸ்குமார்**
தேவகோட்டை

தான் தான் கவிதை
மண்ணைத்தான்
பொன்னைத்தான்
மறந்துதான் இருப்பேனோ
தன்னைத்தான் காட்டித்தான்
காட்சிதான் தருவானோ

எண்ணம்தான்
பொருளைத்தான்
ஏங்கத்தான் வைப்பானோ
ஏற்றம்தான் தந்துதான்
என்னைத்தான்
கொள்வானோ

இடரும்தான்
துன்பம்தான்
கனிந்தும்தான் போயிடுமோ
இதற்குதான் அவனும்தான்
ஆசைதான் பட்டானோ

எதையும்தான் தாங்கும்தான்
அடியேன்தான் என்பேனோ
என்னைத்தான் ஏற்றுதான்
இணையடியில் வைப்பானோ

எண்ணம்தான் செயலும்தான்
ஒன்றுதான் ஆகுமே
என்னுள்தான்
அவனும்தான்
குடியிருக்க
வருவானோ....



**பானுமதி நாச்சியார்**

திசைகள் எப்போதுமே
வாழும் மானுடர்க்கு
எதிரானவை அல்ல
திசை எட்டும் பயணிக்கும்
பரந்த நோக்கங்களில்
வேறுபாடுகள்
தொடர்வது ஏனோ ?
ஒரு பறவையின் பயணிப்பில்
கூட சூழலுக்கு ஏற்ற
மனிதநேயம் சிறகடிக்கத்தான்
செய்கிறது மொழிகளை
முன்னிறுத்தி அம்புகள்
எய்துகின்ற வேடுவர்கள்
எதனை வீழ்த்த
நினைக்கிறார்கள் ?
தெற்கிலிருந்து
தமிழ்த்தென்றல்
வீசுவதை எப்படித்
தடுக்க முடியும் ?
போராட்டங்களை விரும்பும்
போக்கற்றவர்களின்
செயலுக்கு தென்றல் புயலாக
மாறுகின்ற
நேரம் நெருங்குகிறது
வரையறுக்கப்பட்ட
சட்டங்களை மிதித்தே
நடனமிடும் வன்மத்தில்
திணிப்புகளின்
ஆதிக்கம் வலுக்கிறது
நாவடக்கமில்லாப்
போலிகளின் வீண்
தர்க்கம் சொல்லிழுக்குப்
பெறுவதுண்மை
பேணி நலம்
காத்திடுவோம்
மாநில மொழிகளென்றும்
மக்கள் மொழி !



**கா.ந.கல்யாணசுந்தரம்**

மழைக்கு பின்
தோன்றும்
வானவில் எல்லாம்
உன்னை தான்
ஞாபகப்படுத்தி
செல்கின்றன.
வானவில் சென்ற
பிறகும் கூட
சிவப்பு நிற மட்டும்
என்னோடு தங்கி
விடுகின்றன
உனது
பல்லச்சாய்!



**லி.நௌஷாத் கான்**

### நல் வாழ்க்கையின் நாயகி

தனிமையை நேசிப்பவன் ,சில தனிமைகள்
இப்போது கொல்கிறது .

அமைதியாய் உலகை ரசிப்பவன், இந்த அமைதியில் இத்தனை
கொடுமையா? வெறுக்கிறேன் .

துணை எதற்கு பயணத்தில்? என கூட நினைத்தது உண்டு.
பிழையின்றி வாழ வலி இன்றி வாழ ஆசைப்பட்டால், அது ஒரு
துணை இருந்தால் தான் உண்டு என்பதை தனிமை நேரம்
அதிரடியாய் உணர்த்துகிறது.

அவசியமற்றவர்கள், அர்த்தம் அற்றவர்கள், பேராசை
கொண்டவர்கள், வன்மம் நிறைந்தவர்கள் என மனிதரில்
எத்தனை வகை படுத்தினாலும்

அதனால் என்ன இறந்து விட்டுப் போகட்டும்,
நமக்கான துணை இங்கே இருக்கிறது என
நம்பிக்கை தருவது தான் வாழ்க்கை துணை..

துயரத்தில் ஒதுங்குபவர்கள் ஒரு சிலர்
ஓடி வந்து கை கொடுப்பவர்கள் மிக சிலர்
தன் துயர் என தாங்கி பிடிப்பவர் அந்த சிலரில் சிலர்
உடன்பிறந்தவரும், நம் உடன் புகுந்தவரும்..
தனிமையை நேசிக்க கற்றுக் கொள்ளாதே! அது உனக்கு
வெறுமையை தான் பெற்று தரும்.

தாரத்தோடு வாழும் பிறவியில் ஒவ்வொரு நாளும் நமக்கான
நாள் அவள் இல்லாத நாட்களில் தான், இந்நாள் நம் கையில்
இல்லை என்பதும்.. வாழ்க்கை வலி நிறைந்தது என்பதையும்
புரிந்து கொள்வோம்.. மனம் திறந்து செல்வோம்..

உனக்கென ஒரு இதயம் இருந்தாலும்
உனக்கான இதயம் இருப்பது தான் நல்
வாழ்க்கை



**ஜனனி அந்தோணி ராஜ்** திருச்சிராப்பள்ளி

### அப்பாவும்...

எப்பவும் மொபைலை
நோண்டிக்கொண்டிருந்த
மகனை அழைத்து
உட்காரவைத்து
கேரம் விளையாடும் போது,
அவனறியாமல்
விட்டுக்கொடுக்க
வேண்டியிருந்தது,
விளையாட்டில் அவனது
ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு!
வெயிலில் கிட்டிப்புள்
விளையாடப்போன என்னை
வீட்டில் உட்கார வைத்து
பல்லாங்குழி
ஆடவைத்தபோது,
எத்தனையோ முறை
ஜெயித்தேன். அப்பாவும்
விட்டுக்
கொடுத்
திருப்பாரோ?



**கே. பி. ஜனார்த்தனன்**

அவனை/அவளை
நீங்கள் பார்த்திருக்கக்
கூடும்.. விழிகளில் பிரியம்
ஏந்தி நடப்பான்/ள்..

நிராகரிப்பின் புயல்
அவனை/ளை எப்போதும்
சுழன்றடிக்கும்.

கைப்பற்றிக் கொள்ள
ஆதரவுக் கரமின்றி
மாலுமியற்ற படகாய்
அலை மோதுவான்/ள்..

அவன்/ள் முகம்
யார் மனசிலும்
பதிவதேயில்லை..


பஸ்ஸில்.. ரெயிலில்..
கடைத் தெருவில்
நம் அருகே தான்
நடப்பான்/ள்..

ஒரே ஒரு வார்த்தை..
ஸ்பரிசம் அவனு/ளுக்குள்
உயிர் வெளிச்சம்
பாய்ச்சி விடும்..

விளக்கணைத்துப் போகும்
நமக்கு அது
சாத்தியமாகப்
போவதேயில்லை
என்றும் !



**ரிஷபன்**



ஒரு மேகம் கலைந்து
செல்வது போல
என்னை எங்கேயோ
தோலைத்துவிட்டேன்
எங்கே என்று
தெரியவில்லை

என் நேசமானவர்களுக்கு
என் வாசம் தெரியும்
சுவாசம் இருக்கிறதா
என்பதும் புலப்படும்
எனக்குத்தான் அது ஒன்றும்
ஞாபகமில்லை

ஒவ்வொரு மானுட
முகங்களிலும்
நான் காண மாட்டேன்
என் அடையாளங்கள்
அப்படியாக
சொல்லக்கூடியதும் அல்ல
மரக்கிளைகளின் சாயலில்
விழுதுகளால் தாங்கிப்
பிடித்தவனாக இருக்கலாம்

ஒருவேளை நான்
அமர்ந்திருந்த நதிக்கரையில்
சுற்றித்திரியும்
தட்டான்களிடம் விசாரித்துப்
பாருங்கள் ஒரு
மழைப்பூச்சியின் கரங்களில்
மன்றாடிக்கொண்டிருக்கலாம்

நதியோர நாணல்களில்
வருடிக் செல்லும்
தென்றலுடன் ஏதாவது
கதைத்துக் கொண்டிருப்பேன்
உற்று நோக்கி என்னைச்
சிறைப்பிடியுங்கள்

தயவுசெய்து என்னை
எந்த ஒரு பூட்டிய வீட்டிலும்
யாசிக்காதீர்கள்
நூலகங்களில்
உள்ள ஏதோவொரு
பழுப்போறிய பக்கத்தில்
ஒரு காதுமடிக்கப்பட்ட
காகிதமென சில
கவிதை வரிகளைத் தின்று
சீரணித்தவனாக
அடிக்கோடிட்டு பாதுகாப்பாக
உதிரக் காத்திருக்கலாம்

**ஜவஹர் பிரேம்குமார்,**
பெரியகுளம்.

### நறுக்ஸ் நொறுக்ஸ்

மதம் பிடித்த பிறகு
மனிதனாகி
விடுகிறது
யானை!

புன்னகையைச்
சிந்தி
சேகரிக்கின்றன
இதயங்களை...
மழலைகள்!



**ரிஷிவந்தியா**
தஞ்சாவூர்.

### விழிப்புணர்வு...

விழிகள் இருந்தும் வழி
அறியாது வீழாது வாழ
வேண்டும் விழிப்புணரவு

வீடுதேடி வரும் வாயு உருளை
விலைக்கு மேலே விலையது
கேட்டால்

விலை இல்லாமல் விரும்பி
தந்தே வாக்கைக் கேட்டால்
வலிந்தே கொடுத்திடா

வீதி தோறும் கூவி விற்றால்
விலை மலிவென வாங்கா
விழிப்புணர்வு

வீதிதோறும் மதுவை விற்கும்
கடையதை விரண்டு
கடந்திட வேண்டும்
விழிப்புணர்வு

விற்பார் பட்டம் விலை
பேசியே கற்றார்
வாங்கா காசுக்கே
விழிப்புணர்வு

விளையாட்டு
என வீதியில் அலைந்து
விவரமில்லாது கல்வியைக்
கெடுக்காத விழிப்புணர்வு
என்றும்

வேண்டும் உதவி வேண்டியே
வந்து வினயமாய்த்
துண்டிப்பார் வேண்டாம்
விழிப்புணர்வு

விழிகள் பேசும் மொழியில்
மயங்கி வீழாதிருக்க
வேண்டும் என்றும்
விழிப்புணர்வு

விதியென நினைத்து
மதியினைக் கெடுத்து
வாழ்வினைத் தொலைக்காது
வாழ முயன்றிடு

என்றும் விழிப்பு எதிலும்
விழிப்பு நன்றாய்
வாழலாம் நாளுமே



**சிவ.சே. முத்துவிநாயகம்**
திருநெல்வேலி

## நூல் அறிமுகம்

நூல் :- "வீதிக்கு வந்த விசாரணைகள்."
ஹைக்கூ கவிதைகள்.
ஆசிரியர் :- செ.புதூர்.எல்.ரவி.
வெளியீடு:- தமிழகம். 1/84 தெற்குத் தெரு.
புதூர் அஞ்சல்.
செல் :-9952113194.
நூல் விமர்சகர் :குடந்தை பரிபூரணன்.




காலத்தால் முந்தியது தமிழ்.கவிதையால் முந்தியது இலக்கியம். புலவர்கள் தம் செல்லப் பிள்ளையாக வைத்திருந்த செய்யுள் செல்வங்களைஎல்லாம் அவர்களிட மிருந்து எடுத்து வந்த பாரதி தன் கவித்துவத்தால் அவைகளை நவீனத்துவப் படுத்தி எளிமையாக்கி "சொல் புதிது பொருள் புதிது"என்று புதுக் கவிதைக்கும் வித்தூன்றி விட்டு சென்று விட்டார். புதுக்கவிதையும் பற்பல பரிமாணங்களில் தன் கிளைகளை விரித்து ஹைக்கூ என்னும் கனியில் எல்லோராலும் விரும்பிப் படிக்கப் படுகின்ற ஒருவாசிப்பு அனுபவத்தை அளித்துக் கொண்டிருக்கிறது. எல் ரவி அவர்களும் அந்த அனுபவதில் திளைத்துப் போய் தன்னுடைய கண்களை உறுத்தும் சமுதாயப் கோணல்களைஎல்லாம் வீதிக்கு இழுத்து வந்து விசாரணைக்கு உட்படுத்தியிருக்கிறார்.

இலக்கிய இதழ்கள் மூலம் பலராலும் நன்கு அறியப்பட்டவரான எல். ரவி. அவர்கள் புதுக் கவிதைகளில் இந்த நூலின் வாயிலாகத் தனது கை வண்ணத்தை மெருகு படுத்தியிருக்கிறார்.

கவித் திலகம் "வெற்றிப் பேரொளி"அவர்களின் அணிந்துரையும், முனைவரும் இலக்கியப் படைப்பாளியு மான இடை மருதூர் கி. மஞ்சுளா அவர்களின் வாழ்த்துரையுமே இதற்கு சான்று பகர் கின்றன.

ஆசிரியரின் பொதுவுடைமைப் பார்வையில், "ஒன்றுமில்லை உடுத்துவதற்கு ஜன்னல் ரவிக்கை" என்னும் கவிதை சமூக ஏற்றத் தாழ்வை இடித்துக் காட்டுகிறது.

"ஆலமரத்து சாமிகள் அமைதியானதால் ஆசிரம சாமிகளின் பை நிறைந்தது "என்று போலி சாமிகள் விசாரணைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளர்கள்.

"புல்லின் தலையில் வெள்ளிக் கிரீடம் பனித்துளிகள் "என்னும் கவிதை நுட்பமான அவரது கவித்துவப் பார்வைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

வீதிக்கு வந்த விசாரணைகள் என்ற தலைப்பைத் தாங்கிப் பிடிக்கும் கவிதைகள் இந்த நூலில் ஐந்து இடம் பெற்றுள்ளன. மூன்று கவிதைகள் அரசியல் சார்ந்தவை. சாத்தான் குளம் கொலை, தூத்துக்குடி துப்பாக்கி சூடு, தேர்தல் பத்திரத்தில் தில்லுமுல்லு கள் ஆகியன குறிப்பிடத் தக்கவை.மற்ற இரண்டும் சமூகம் சார்ந்தவை.

எழுதப்படுவன எல்லாம் கவிதைகள் ஆகா. உணரப் படுபவையே கவிதைகள் ஆகின்றன என்னும் கூற்றுக்கு இணங்க எல்லாக் கவிதைகளும் இயல்பான ஓரிழையில் எளிமையாக நெய்யப்படுள்ளன.

இன்றைய கால கட்டத்திற் கேற்ப அரசியல், ஊழல், ஆகியன குறித்தும் சில கவிதைகள் உள்ளன.

உழவுத் தொழிலின் மகிமை, வறுமையின் கொடுமை, செயற்கை கருத்தரிப்பு முதியோர் காப்பகம் இயற்கை வளங்களின் அழிவு, என்று பல தள ங்களிலும் தனது கூர்மையான பார்வையை பாய்ச்சியிருக்கும் செ. புதூர் எல். ரவி அவர்கள் ஐந்து நூல்களின் ஆசிரியர். ஆறு விருதுகளுக்கு ஆசாரியர். ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர். தமிழக அரசின் "அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்" என்னும் விருதுக்கு சொந்தக்காரர்.

கையை எடுங்கள்,
பார்த்துக்கொண்டே
இருக்கிறார்கள்
அனைவரும்,,,,!
சிரித்து கேலி பேசுகிறார்கள்
சிலர். ஆகவே வேண்டாம்
இந்ததோள் படர்வு,
இந்த அருகாமை.
இந்த உரசல்.
அதுதான் மனதில் கட்டி
எழுப்பி வைத்திருக்கிறீர்களே,
கோயிலாயும்,
அதற்குள்ளாய்
விக்கிரமாயும்,,,,!
பின் ஏன் வெளி
உலகிற்கு இப்பாசாங்கு
என்றவளிடம் நெருங்கி
அமர்ந்து கூறுகிறான்.
எனது கரம் பற்றிய
தினத்திலிருந்து
இப்பொழுதான முதுமை வரை
என் குலசாமியான
உன் கரம் பற்றாமல்
உனது தோள் படராமல்
வேறு யார் மீது,தோள்
படரவும் அன்பையள்ளி
விதைக்கவுமாய்
போகிறேன் பிரியமே,,,?
அமர்ந்திருப்பது பொது
இடமாயும் பயணிப்பது
பேருந்தாயும் இருந்த
பொழுதும் கூட ,,,!



**விமலன்.**

எல்லாம் இழந்தவனுக்கு தான்
தெரியும் வாழ்வது கூட
வலிதான் என்று!
ஏனிந்த வாழ்க்கை என
எண்ணம் தோன்றும் போதே
தோற்று விட்டான்
ஈவு இரக்கமுள்ள கடவுள்!

என்னை காயப்படுத்த
உனக்கு காதல்தான்
கிடைத்ததா? செத்துப் போ
என பார்வை காட்டினால் கூட
பாடையில் ஏறி இருப்பேனடி!

எல்லாம் தொலைத்த பிறகும்,
தொலைந்த பிறகும்
வாழ்வதற்கு பிடிமானமே
இல்லை என
வருந்தி விடாதே
இதுவும் கடந்து போகுமென
உன் மேல் விழுந்து
வாழ்த்துவதற்கு
அந்த வானத்து
மழைத்துளிகள்
காத்து கொண்டிருக்கின்றன!

முகத்தை வெளிப்படையாக
படைத்த கடவுள் என்
மனதினை வெளிப்படையாக
படைத்திருந்தால்
என் காதல் உனக்கு
தெரிந்திருக்குமோ
என்னமோ?!

மாமியார்-மருமகள்
சமூக உறவே ஒரு
குடும்பத்தின் அஸ்திவாரம்
நிலையான மகிழ்ச்சி
அஸ்திவாரம் சரியாக
அமைந்தால் மட்டுமே
கிடைக்கும்!

உண்மையான உறவுகளை
ஒரு போதும் நோகடிக்காதே
ஒரு வேளை நீ உதாசீனம்
படுத்தும் அன்பு
ஒருநாள் உனக்கு
கிடைக்காமல் கூட போகலாம்!

வலிகளையும்
ஆறாத இரணங்களையும்
கொடுத்து விட்டு சென்றாலும்
அழகான சில
நினைவுகளையும் தான்
கொடுத்து விட்டு சென்றது
அந்த காதல்!

உன்னை உறங்க விடாது
நிம்மதியாக வாழவும் விடாது
இந்த பொல்லாத காதல்

**லி.நௌஷாத் கான்**

### வலை


வலையில் தான்
இருக்கிறேன்;
என்ன வகையான வலை...
அன்பின் வலையா?
ஆணவ வலையா?

தளர்வான முடிச்சுதான்;
வலிக்கவும் இல்லை.
நேரம் ஆக ஆக
உறுத்தும் உறுத்தல்
மனத்தைத் தான்
உறுத்துகிறது; மிகவும்.

காலில் ஒரு கட்டு.
ஒரு காலில் மட்டும்.
நடக்க இயலும், தன்
இச்சையில் ஓட
இயலாது.
இருந்த இடத்தில்
சுற்றி வரலாம்.
வெறுப்பாய் இருக்கிறது;
வெறுமே சுற்றி வர.

எந்த வலையானாலும்
அதுவே நெக்கு விட
காத்திருக்கிறேன்.
கத்தி கொண்டு வெட்டி
விட்டு வெளியேற
மனமின்றி...

அன்பின் வலைதானோ?
அன்றி; ஆணவ
வலைதானோ?
ஆராய மனம்
துணியாமல்
நான் என்றும் போல்
ஊமையாய்,
மௌனத்தில்.



**சசிகலா விஸ்வநாதன்**

வானமாகிறேன்
யாருக்கும் வசமாக
வானமாக...

விண்மீன்கள்
பளிச்சிடுகையில்
கொஞ்சம் என்னை
எண்ணியே
பிரமித்துக்கொள்கிறேன்...

மழையின்
மேகங்களெல்லாம்
சுமந்து செல்லும்
என் கண்ணீரால் தெளித்து
தெளித்து என்னை ஊற்றி
பெருவனம்
ஒன்றையும்
உருவாக்குகிறேன்...

வேண்டாம்..
வேண்டாம்
கூரிய கோடாலிகள்
செய்வதை நிறுத்துங்கள்...

நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாக
நாமெல்லாம் ஓர்
மலைத்தொடர் ஆவோம்...

உளிகளை உருவாக்குவதை
மறந்து வலிகள் துறந்து
உதிரம் உதிரா
உதிர்ந்த மண்வெளியாக
ஒரு பெரும் பூஞ்சோலை
ஆகலாம் நம்மீது
அமரும் புள்ளினமும்
பூவினமும்
நம்மை எண்ணி
எண்ணிமகிழ..!



**ஜவஹர் பிரேம்குமார்,**
பெரியகுளம்.



# புதுக்கவிதை பகுதிகள்

## விழிப்புணர்வு வருமா

" உணவு என்பது
உயிருக்கு சமமானது
தெய்வத்திற்கு சமமானது.... "

உணவு இல்லாமல்
எத்தனையோ மனித
இனம் வயிறு சுருங்கி முகம்
களைத்து ..."

உடல் மெலிந்து
என்ன கொடுமை
எப்படி சொல்வது
வார்த்தைகள் எழவில்லை..."

கண்ணீர் பெருகி
கரைக்கிறது மென்மையான
இதயத்தை ...".

மறுபுறம் தினமும்
கோடிக்கணக்கான
மதிப்புடைய உணவு
சாக்கடைக்கு பலியாகிறது..."

வியாபார நோக்கிலும்
ஆடம்பர வாழ்வாலும்
குப்பைக்கு இரையாகிறது
தேவையான உணவு .... "

பணம் என்ற ஒன்று
உணவையும் விட்டு வைக்க
வில்லை ..."

உணவை சேமிப்போம்
பாதுகாப்போம் பட்டினி சாவு
பட்டியலை குறைப்போம் ..."

இறைவன் கொடுத்த
உணவு அனைவருக்கும்
தான் என்பதை
உணர்வோம் .....

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

---

ஜனவரி
பிப்ரவரி
ராஜேஸ்வரி

உன் நிறம் மட்டுமல்ல
உன் மீது வரும் மணமும்
சந்தனம்தான்!
எப்படி இப்படிக்
கிறுக்கானேன்?!
என்ற என் கேள்விக்கு
உன் கா த ல் தா ன்
பதில் சொல்ல வேண்டும்!
ஏனெனில்
ஜனவரி பிப்ரவரிக்குப் பிறகு
மார்ச் என்று எழுதுவதற்குப்
பதிலாக ராஜேஸ்வரி என்று
எழுதுகிறேன்!
நீ என்னைப் பிடித்து
வெகு நாட்களாகியும்
உணராமல் தெரியாமல்
உனக்கு வலை வீசிக்
கொண்டிருந்த என்னை
நீ என்ன வேண்டுமானாலும்
சொல்லி அழைக்கலாம்!
நீ வெங்காயம் உரிக்கும்
போது(ம்) கூட
ஆனந்தக் கண்ணீர்தான்
வர வேண்டும் என்பதற்காக
நான் தவமிருந்து வரம்
கேட்பேன்! கா த லு க் கா க
நீ வர வேண்டும்!
நீ எப்பொழுதும் கா த லு ட ன்
இருக்க வேண்டும் என்ற
வரம் வேண்டும்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

---



பசும் சோலை
வனத்தினுல்...
மலர்க் கூடையோடு
பயணிக்கும்
உனைக்கண்டு...
வண்டுகளும்,
பட்டாம் பூச்சிகளும்



குழம்பித்தான்
போகின்றன....
உன்னையும்,
மலரையும்...
இனம்காண முடியாமல் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

---

## யோசிப்பதேயல்லை

இறுதிச் சந்திப்பின் தினம்
நீ அணிந்துவந்த
மென்மஞ்சள் துகிலின்
தீண்டலைப்போல
உதிர்ந்து
கொண்டிருக்கின்றன
இயல்வாகை
மரத்தின் பூக்கள்.

சிறுபொழுதே
இங்ஙனம்
நிழல் தங்கும்
சந்தர்ப்பங்கள்
வாய்த்திருக்கின்றன
முந்தைய நீள்தனிமைக்
கோடைகளிலும்.



உடல்வழியும் வியர்வையைத்
துடைப்பதாய்க் கருதி நகரும்
காற்றையொத்த காலம்
யோசிப்பதேயில்லை
மரத்தடி நிழலிலிருந்து சில
பூக்களை சுடும்வெயிலின்
அனலுக்குள்ளும் தள்ளி
சுழலவிடுகிறோம் என்பதை.

**கீர்த்தி**

---

## நாளெல்லாம் வினைகள் செய்.!

சிற்றெறும்பும் புற்றெழுப்பும்
அறிவாய்நீ.. சிலந்திவலைப்
பின்னுதடா பாருலகில்.!
எற்றிசையும் பறந்துழைத்து
இனியத்தேனை..
எல்லோர்க்கும் வழங்குகின்ற
தேனிபாராய்.! உற்றதொருப்
பிறப்புக்குப் பெருமைசேர..
உயர்ந்திடவே நாளெல்லாம்
வினைகள்செய்..! அற்றுவிழும்
புற்பூண்டா உன்பிறப்பு?
ஆறறிவு மனிதனென்று
தோள்கள் தட்டு!

எற்றிசையும் போரொடுங்க..
வறுமைதீர எதிர்க்கின்ற
தீவிரத்தின் முனை ஒடுங்க..
புற்றுகளாய் வளர்ந்திட்ட
பசிப்பிணியை புறப்பாட்டுத்
தமிழ்மகனே.. புரட்டிப்போடு!

பெற்றவர்கள் வாழ்த்தும்படி
வினைகளாற்றி.. பெருமைமிகு
விஞ்ஞானக் கருவியேந்தி...
உற்றவனாய் உலகத்தை
மாற்றுதற்கே.. உறங்காதே..
நாளெல்லாம் வினைகள்
செய்க!

செங்குருதிப் பூக்காடு
உனது கண்கள்.. இங்கே
செயல்ஒன்றே உன்மூச்சு
சீறிவரும் பெருவெள்ளம்
தங்குதடை தனையுடைத்து
உனதுகரங்கள்..
தானாற்றும் வினைகளாலே
இந்தபூமி.. எங்கும்
பொதுவுடைமை
மலரும்மட்டும்.. இடைவிடாது
நாளெல்லாம் வினைகள்
செய்க!

**வே.கல்யாண்குமார்**

---

## ஹைக்கூ...

இளைப்பாறும்
வாகனங்கள் சுங்கச்சாவடி

விட்டெறியும் உண்டியல் காசு
சோம்பல் பக்தி

ஊதி ஊதி
இளைத்துப்போனது
ஊதுகுழல்

கண்விழிப்பில் கனவுகளோடு
தொழிலாளர்

வரிவடிவத்தில் உறவும் நட்பும்
மொய் ஏடு

**மு. பழனித்துரை,**
அறந்தாங்கி.

---

## மருந்து

மறதி ஒரு நோயன்று
மானுடர்க்கு மனத்துயர்
போக்கும் மாமருந்து.
நீங்கா நினைவுகள்
தூங்கா இரவுகள்
காதலர்க்கு ஓர் மருந்து.
இளமை நட்பும் இனிய
சுற்றமும் துயர் காணா
வாழ்விற்கு மருந்து.
மனம்விட்டு சிரிப்பு
அடக்காத அழுகை
அனைத்திற்கும் அருமருந்து.

**பாலகிருஷ்ணன். ஆர்**
பொள்ளாச்சி.

---

## லப்டப்

இதயம் சொல்லித்துடிக்கும்
உன் பெயரை...

கனவென நினைத்து
உச்சரித்துவிடுகிறது
உதடுகள்... சப்தமாய்..!

**ம.முத்துக்குமார்**

---

## "ஊரெங்கும் திருவிழா"


மக்களின் ஒற்றுமைக்கு
முன்னோர் ஏற்படுத்திய
மாண்புடை முறையே
மாரியம்மன் திருவிழா

உள்ளூர் வெளியூர்
உறவுகள் ஒன்றுகூடும்
உற்சாகமாய் அம்மனுக்கு
உற்சவங்கள் நடத்திடும்

கேளிக்கை நிகழ்ச்சிகள்
குழந்தையர் மகிழ்ச்சிக்கு
திருவிழாக் கடைகள்
கன்னியர் களிப்பிற்கு

வழுக்குமரப் போட்டிகள்
வாலிபர் தீரத்திற்கு
வாணவேடிக்கைத் தெறிப்பு
காண்போரின் மலைப்பிற்கு

நாகரீக காலத்திலும்
நடந்தேறும் விழாக்கள்



கலாச்சாரக்
கவசங்கள்
பாரம்பரிய
பெருமைகள்//

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

---



## தாம்பத்யம்

அவள் மானம் காக்க
அவன் தன்
உடல் மூடி
உயிர் கொடுத்தான்
முதலிரவில்...!

**பிரபாகர்சுப்பையா** மதுரை

---



## தொழில்நுட்பம்

காகத்திற்கு கூடுகட்ட
மரக்குச்சிகள்
கிடைக்காததால், துணிகள்
காய வைக்கும்
ஹேங்கர்களைப் புதிய



தொழில்நுட்பமாக
பயன்டுத்து
கிறதோ...!?!

**H. பரக்கத் நிஷா**
திருவாரூர்

---



(தாலாட்டுப் பாடல்)

## வெளி விருத்தம்:

"நீள்தமிழ்போல்
நீயுமன்றோ தூளிநீயே"

பட்டுப்போல் மழலைக்குப்
பட்டுமெத்தை ஆகின்றாய்--
தூளியே நீ

மெட்டமைத்து நான்பாட
மெல்லிசையைக்
கூட்டுகின்றாய்-- தூளியேநீ

கொட்டுகின்ற
வார்த்தையெல்லாம்
குழல்கீதம் ஆக்குகின்றாய்--
தூளியேநீ

விட்டுவிட்டு நான்விலக
வீறுதுணை என்மகற்கு--
தூளியேநீ

தாய்மாமன் நாடிவர
தவித்திருக்கும்
நேரமெல்லாம்-- தூளியேநீ

ஓய்வென்றே அறியாமல்
உறுதிமொழி தந்திடுவாய்--
தூளியேநீ

வாய்மையிலே உன்போலே
வாய்த்திடுவோர்
யாருமில்லை--தூளியேநீ

வேய்குழலாய்ப்
போற்றுகின்றேன்
வினைபுரியும்
காவலன்தான்--
தூளியேநீ

தாலாட்டி மகிழ்வுடனே
தாயாகித் தழுவுகின்றாய்--
தூளியேநீ

கோலாட்சி என்வீட்டில்
குறைகளைந்த கோமளமே--
தூளியேநீ
பாலூட்டும் தாயெனக்கு
பரிந்துதவும் துணைநீயே--
தூளியேநீ
சீலத்தில் சேர்ந்துவந்து
சீர்பெருக்கும் தோழியுமாய்--
தூளியேநீ

நான்பாடும் பாட்டினிலே
நலஞ்சேர வைக்கின்றாய்--
தூளியே நீ

வான்நிலவாய்ப் பிள்ளைக்கு
வசந்தங்கள்
காட்டுகின்றாய்-- தூளியேநீ

கான்விளைந்த கனிச்சாறாய்க்
கற்கண்டாய்
இனிக்கின்றாய்-- தூளியேநீ

மான்போலத் துள்ளுகின்றாய்
மழலையரைக்
காக்கின்றாய்-- தூளியேநீ

ஏழையரின் வீட்டினிலே
எழில்தந்த
சொர்க்கமன்றோ-- தூளியேநீ

தாழையென மணம்பரப்பி
தகைமையிலே
நிறைகின்றாய்-- தூளியேநீ

வாழையென வழங்குகின்ற
வள்ளலென வாழுகின்றாய்--
தூளியேநீ

மாழையென எப்போதும்
மனம்நிறைந்து
ஆடுகின்றாய்-- தூளியேநீ

தமிழ்நாட்டுச் சீதனமே
தடையில்லா மணிவிளக்கே--
தூளியேநீ

அமிழ்தென்ற மருந்தாகி
அளிக்கின்றாய்
அருள்நிறைவாய்--
தூளியேநீ

சிமிழென்றே ஒளிர்ந்திருக்கச்
சேர்க்கின்றாய் ஆனந்தம்--
தூளியேநீ

நிமிர்ந்திருக்கும் அடையாளம்
"நீள்தமிழ்போல்" நீயுமன்றோ-
-தூளியேநீ!

**கவிஞர் நம்பிக்கை நாகராஜன்**
கோவை.

---

## சந்தை காதலி

பக்கத்தில் பலர் இருந்தும்
பார்வையிலே பட்ட முகம்
நிறம் ஒன்றும் புதிதல்ல
மா நிறமும் இல்லை
பூ நிறமும் இல்லை
ஊரெங்கும் பார்ப்பது தான்
பேச்சொன்றும் கேட்டதில்லை
கேட்பதிலும் நாட்டமில்லை
கண்ணாலே பேசுவதால்
பக்கத்தில் சென்றதில்லை
தினம் பார்க்க வேண்டும்
பார்வையாலே பேசுவதை
தினம் கேட்க வேண்டும்
பார்ப்பதை நான்
பார்த்ததில்லை
பார்க்கும் நேர பரவசம்
வேண்டும்
அந்த நொடி நேர பரவசமே
படைப்பாளன் பலருக்கும்
எரியூட்டும் சக்தியன்றோ

**ஓம் குமார் P N**
மதுரை

---

## குடும்பத்தினர்

குடும்பத்தின் உறவுநிலை
கொட்டுகின்ற வார்த்தையில்
வெட்டுகின்ற உறவுதனைச்
சேர்ப்பதூஉம் எப்படியோ

மகிழ்ச்சியுடன் வாழ்ந்திடவே
மனக்குறையும் நீங்கிடவே
ஒதுங்கிநின்று வாழ்வதும்
உயர்வுதான் வேறில்லை

கூடுதன்னில் குருவியுமே
கொண்டாடும் குஞ்சுகளைச்
சிறகைவிரித்துப்
பறக்கத்துடிக்கத் தன்வழியைப்
பார்த்திடுமே

உறவுகளை
முறைப்படுத்தி
வைத்ததெல்லாம்
சொற்களாய்
சொற்களுக்கும்
பேதமுண்டு

இனவெறியும் அதிலுண்டு
தனிதனியாய் வாழ்ந்திடவே
தனிக்குடித்தனம்
வழிவிட்டோம்
தனித்தனியாய் ஆவதற்கே
வழிவகுத்தால் பெருமூச்சே

நினைக்கின்ற செயலெல்லாம்
நிறைவேறும் நாளதனில்
சொல்வதற்கு உறவில்லை
பகிர்வதற்கு ஏங்கிடுவாய்

பந்தங்கள் யாவையுமே
வழிவழியாய் வருபவைதான்
உமிழ்கின்ற சொற்களையே
பிறபோழ்தில் அள்ளுவாயே



பல்லாண்டு வாழ்கவென்று
பலர்போற்ற வாழ்ந்திடுவாய்
எடுத்துச்சொன்ன
சொற்களிலேயே
இன்ப(ஊ)ற்று பெற்றிடுவாய்!

**பானுமதி நாச்சியார்**

---

வான வில்லை வளைச்சு
தரட்டுமா...
இல்லை வைலோகத்தை
வாங்கி தரட்டுமா...
சேத்த சொத்த எழுதி
தரட்டுமா...
இல்லை சேத்தனைக்க பக்கம்
வரட்டுமா...

ஏய் புள்ள எம்புட்டு ஆசை
எனக்கு இருக்குடி...
இதில் உனக்கு எது புடிச்சி
இருக்குடி...

தள்ளி தள்ளி தூரம்
ஓடாதே...ஏ புள்ள




துள்ளி துள்ளி அருகில்
வாயேண்டி...

ஒம்மேலே அம்புட்டு ஆசைடி...
நாம சேர்ந்து வாழ
இஸ்ட்டம்தானேடி...!!

**பொன்.கருணா**
நவி மும்பை

---


எளிதாய் எட்டிய இன்பங்கள்.........
துளித்துளியாய் சேர்ந்து ஆழிப்பெருங்கடலாய்
விரிந்திட ஒடிய காலங்கள் எத்தனையோ.........

விதைவிதையாய் வீழ்ந்து அடர்வனங்களாய்
வியாபிக்க கடந்த காலங்கள் எத்தனையோ...........

விசும்பு உதிர்த்த தூய உயிர்த்துளிகள்
வையகத்திற்கு எத்தனை எத்தனையோ..........

பகலவன் சிந்திய ஒளிக்கீற்றுகள் இந்த
பாருக்கு எத்தனை எத்தனையோ ..........

ஓரறிவிலிருந்து படிப்படியாய் ஆறறிவாய் பரிணமிக்க
கரைந்த காலங்கள் எத்தனையோ......

வனமாய் கிடந்த நிலத்தை பண்படுத்த
மனிதன் உழைத்த காலங்கள் எத்தனையோ ......

பகுத்தறிவாய் பண்பட மனிதம் சுரந்த
எண்ணச் சுரப்புகள் எத்தனையோ......

மனிதம் அழிந்திடாது தாங்கிய நற்சான்றோர்கள்
மண்ணுலகில் எத்தனை எத்தனையோ ......



மனிதன் படைத்த மங்காத பனுவல்கள்
மாந்தர்க்கு எத்தனை எத்தனையோ ......

எத்தனை எத்தனை இன்பங்கள் இங்கு
எளிதாய் கிடைக்கப் பெற்றவை ......

**ம.அமிர்தா தமிழரசன்,**
தேனி.

---

## அத்தை போட்ட செயின்

நான் ஐந்தாம் வகுப்பு
படித்தபோது
மொட்டை அடித்தார்கள்.
அத்தையிடம் கேட்டேன்;
எனக்கு "கழுத்தில் செயின்,
கையில் மோதிரம்
போடுங்கள் அத்தை"
என்றேன். போட்டு அழகு
பார்த்தார்கள்.
அப்பாவும் பார்த்தார்.
மறுநாள் மார்வாடி கடைக்குச்
சென்றது. அதன்
பிறகு,
அப்பாவும் மறந்து
போனார்.
நானும் மறந்து
போனேன்.
அம்மா ஒரு நாள்
புலம்பினாள்.
"நடவுக்கு அடி உரம்
போடணும்னு வாங்கிட்டு
போனாரு மனுஷன்
காதுல போட்டிருந்த
தோட்டை".
"அடுத்த நடவும் வந்துடுச்சு"
என்றாள்.
"அதிலிருந்து காது சும்மாவே
கெடக்குது"
"குச்சை சுமந்து கொண்டு".



ஏதோ அவள்
பாஷையில்
சொல்லிக் கொண்டே
சென்றாள் .

**ஜா.விநாயகமூர்த்தி**
விழுப்புரம்

---

## பெயரர்கள்...

பெயருக்கு அல்ல பெயரர்கள்
பேறளிப்பவர்கள்....
மனத்தைத் தாங்கிப்
பிடிக்கும்
மலரிதழ் மனசுக்காரர்கள்
முரண்களைப்
பெயர்ப்பவர்கள்
முன்கோபத்தைப்
பெயர்ப்பவர்கள்
ஆயுளை நீட்டிக்கும்
அருமருந்து
மொழியற்ற குரலில்
மொழியின் ஆன்மாவைக்
காட்சிப்படுத்துபவர்கள்
நம்மின் இடர்கள்
யாவற்றையும்
நம்மைக்கொண்டே
களைபவர்கள்
நம்மின் பகையைப்
பெயர்த்து
நலமுற நாள்தோறும்
வைப்பவர்கள்
வயது தளர்ந்து
மனது களைத்து
மயக்கமுற நின்றாலும்
மணக்கும்
வாழ்வை வாழ வைப்பவர்கள்
பார்க்கிற யாவரையும்
பேதமின்றிப்
பகையின்றி பாசங்கொள்ள
வைக்கும் கலையைக் கற்றுத்
தருபவர்கள் பெயரர்கள்
பெயருக்கு அல்ல
பேறளிப்பவர்கள்
எப்போது வேண்டுமானாலும்
எதுவரினும் அஞ்சாது வாழும்
கலையை வல்லமையாய்
வரமளிப்பவர்கள் பெயரர்கள்
பெயருக்கு அல்ல
பேறளிப்பவர்கள்



இருக்கும் வாழ்வின்
வேரை
அணைப்பவர்கள்
அன்பின்
எல்லாம் குவித்து...

**ஹரணி**
தஞ்சாவூர்.

---

என் தடங்களைப்
பதித்துத்தான்
செல்கிறேன்..
ஆளற்ற
பாலைவனமாயினும்..
பின்னொரு நாளில்
யாரேனும் வாசிக்கக்
கூடும்.. வரிகளில்
புதைந்த என் அன்பை.

**ரிஷபன்**

---

பெண்ணே நீ
என்னை சாம்பலாக்கி
இருந்தாலும்....
ஃபீனிக்ஸ் பறவையாய்
மீண்டெழுந்திருப்பேனே..
நீ மரங்கொத்தி பறவையாய்....
என் மனதை கொத்தி
சிதைக்கவல்லவா
செய்தாய்.... !

**எம்.பி.தினேஷ்,**
கோவை : 25

---

## என்னுயிரே ......

உன் கண்ணில் தூசி
விழுந்தால்
என் கண்களில் கண்ணீர்
வழிகிறது.
உன் காலில் முள்
தைத்தால்....
எனக்கு வலிக்கிறது.
நீ உடல் சோர்வு
என்னும்போது ..
எனக்கு ஏற்படுகிறது
மனச்சோர்வு.
உள்ளத்தை
நேசிப்பவர்களுக்கு மட்டுமே
தெரியும் ... உணர்வுகளின்
வலி. நான் நேசிப்பதும்
யாசிப்பதும்உன் உள்ளத்தை
மட்டுமே .எட்டாத தூரத்தில்
நீ இருந்தாலும்.
என் இதயத்தின்
உணர்வுகளில் நீவாழ்ந்து
கொண்டிருக்கிறாய்என்பது
என்னைத்தவிர யாருக்குத்
தெரியும். வாழ்வில்
மாற்றங்கள் எப்போது
வேண்டுமானாலும் நிகழலாம்.
நிச்சயம் ஒரு நாள் நம்
வாழ்விலும் நிகழும்.

**ஜி.சுந்தரராஜன்**
திருத்தங்கல்

# வாசகர் கடிதம்

இன்றைய செய்திகளின் முதலில் கண் பட்டது விவசாயிகளுக்கு 17 ஆயிரம் கோடி பயிர்க் கடன். அடேங்கப்பா. இன்றைய வேளாண் பட்ஜெட்டில் எம்.கே. ஆர். பன்னீர்செல்வம் இவ்வாறு கூறினார். ஐந்தாவது தடவையாக இன்று சட்டசபையில் 2025-26 ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை வேளாண்மை அமைச்சர் இன்று தாக்கல் செய்தார். 2025 -26 ம் ஆண்டில் வட்டி மானியமாக 853 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இயற்கை உரத்துக்கு என்று மூன்று கோடி 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதோட இல்லாமல் இலவச மின் இணைப்புக்காக 8186 கோடி நிதியினை தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்துக்கு அரசு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

கடன் வாங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டவுடன் எடப்பாடி அவர்கள் பேசுகையில் வேளாண்மை துறை பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு எந்த நன்மையுமே இல்லை ஏமாற்றம்தான் மிஞ்சி இருக்கிறது என்று கூறினார். அவர் மேலும் கூறிய போது இந்த ஆண்டு ஒரு லட்சத்து 5 ஆயிரம் கோடி கடன் சொல்லியுள்ளார். அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் கடனிலேயே தான் செய்ய முடியும். மேலும் அவர்கள் கூறுகையில் கடந்த ஆண்டிலேயே இந்தியாவிலேயே கடன் வாங்கும் முதன்மை மாநிலமாக தமிழக அரசு திகழ்கிறது என்றார். செங்கோட்டையன் பற்றி அவரிடம் கேட்டதற்கு அதிமுக மட்டுமே என்றும் சுதந்திரமாக செயல்படும் கட்சி என்றார். அண்ணா திமுகவில் எல்லோரும் சுதந்திரமாக செயல்படலாம் ஒருவருக்கும் கட்டுப்பாடு கிடையாது என்றார் அவர். இனிமேல் தான் வேளாண் பட்ஜெட் பற்றி ஒவ்வொருவராக கருத்து எழுப்புகிறார்கள் பொறுத்திருந்து பார்ப்போம்.

பிரதமர் மோடி அவர்கள் அடுத்த மாதம் இலங்கை பயணம் செய்கிறார். இலங்கையின் வெளியுறவு அமைச்சர் இதைப் பற்றி கூறும்போது இந்திய பிரதம மோடி ஏப்ரல் மாதத்தில் இலங்கை வரும்போது சம்போ சூரியன் மின் நிலையத்தை திறப்பதுடன் கூடுதலாக பல புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும். மேலும் அவர் கூறுகையில் தேசிய நலனைப் பேணுவதற்காக பணியாற்றும் அதே வேளையில் எந்த சார்பு எடுக்காமல் எங்கள் வெளியுறவு கொள்கையில் நாங்கள் நடுநிலையாக இருப்போம் என்றார் இது ஏன் திடீரென.

ஆயிரம் மாணவர்கள் உருவாக்கிய அதிநவீன கண்டுபிடிப்பு. சென்னையில் இந்திய தொழில்நுட்பக் கழக(ஐஐடி மெட்ராஸ்) புத்தாக்க மையத்தின் திறந்த வெளி அரங்கு 2025 நேற்று நடந்தது. இதில் 26 குழுக்களை சேர்ந்த ஆயிரம் மாணவர்கள் உருவாக்கிய 60 அதிநவீன தொழில் நுட்ப கண்டுபிடிப்புகள் காட்சிப் படுத்தப்பட்டன. குறிப்பாக ஒன்றை சொல்ல வேண்டுமானால் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் மனித உருவமான "SAMVID" துல்லியமான மயக்க மருந்தின் அளவை உறுதி செய்யும் " சூப்பர் சிரிஞ்ச் " பொருட்களை எடுத்துச் செல்வதற்காகவும் விநியோகம் செய்வதற்காகவும் வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ட்ரோன்களின் வரிசையான ட்ரோன் ஸ்வர்ம்" ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. ஐஐடி எம் இன் புத்தாக்க மையம் கருவியாக்கம் மற்றும் மின்சார சேவையின் துறையின் மையமாக விளங்குவதுடன், மாணவர்கள் சமூகத்தினுடைய ஒரு கட்டமைப்பை உருவாக்கி உள்ளதாக அவர் கூறினார். நல்ல விஷயம்.

இன்னும் சில செய்திகளை பார்க்கலாம்.

** சட்டசபையில் நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்த போது இவ்வாறு கூறினார். அரசு ஊழியர்கள் விபத்தில் இறந்தால் தனிநபர் விபத்து காப்பீட்டு தொகை ஒரு கோடி வழங்கப்படும். அரசு ஊழியர் விபத்தில் இருந்தாலும் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டாலோ தனிநபர் விபத்து காப்பீட்டு ஒரு கோடி வழங்கிட வங்கிகள் முன் வந்துள்ளன. மேலும் விபத்து காரணமாக இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் பள்ளிக் கல்வியை நிறைவு செய்து உயர்கல்வி பயின்றிடும் மகளின் உயர் கல்விக்கான உதவித் தொகையாக 10 லட்சம் வரை வழங்க வங்கிகள் முன் வரும் என்றார் அவர். தனிநபர் வங்கி கடன் வழங்கும் போது வட்டியில் சலுகை கொடுக்கப்படும் என்றார். பரவாயில்லையே சரியான பட்ஜெட் டாகத் தான் இருக்கிறது. அடுத்த ஒரு செய்தி பார்த்தபொழுது பவன் கல்யாண் அவர்களுக்கு பிரகாஷ்ராஜ் பதிலடி கொடுத்திருக்கிறார். எதனால் எனில் இந்தி மொழியை வெறுக்கும் தமிழகம் தமிழிப்படங்களை பிற மொழிகளில் மொழிபெயர்க்க கூடாது என்று இந்தி மொழியே எங்கள் மீது திணிக்காதீர்கள் என்று நாங்கள் சொல்வது அந்த மொழியின் மீது உள்ள வெறுப்பு அல்ல. தாய்மொழி பாதுகாப்பதற்கு தான் என்றார் பிரகாஷ் ராஜ். சிந்துபாத் கதை போல் இது தொடரும்.


வர வர ஒரு பத்தி செய்திகள் க்ரைம் செய்திகளை விட சூடாக இருக்கிறது. அமிர்தசரஸில் உள்ள குருத்வாரில் அதிகாலையில் குண்டு வெடிப்பு பஞ்சாபில் பதற்றம். யாரோ கை வெடிகுண்டை வீசிவிட்டு சென்றதில் கண்ணாடி சுவர்கள் சேதமடைந்தது. அடக்கடவுளே. அடுத்த மகாராஷ்டிராவில் சோகம் நாலு பேர் பலி எதனால்? நான்கு சிறுவர்கள் ஹோலி பண்டிகை முடித்துவிட்டு உடலை கழுவுவதற்காக உல்காஸ் ஆற்றில் இறங்கி உள்ளனர். அப்பொழுது ஒரு சிறுவன் தண்ணீரில் மூழ்க மற்ற ந சிறுவர்கள் அவரை காப்பாற்ற முனைந்த வேளையில் இவர்களும் இறந்து விட்டனர்.

தினம் ஒரு விளையாட்டு நீச்சல் போட்டி அருமை. தீபம் ஏற்றுவதற்கும் கற்பூரம் ஏற்றுவதற்கும் என்ன வித்தியாசம் என்பது அருமையான கட்டுரை உண்மைதான். தினம் ஒரு தலைவர்கள் பகுதியும் வழக்கம் போல் அருமையாக இருந்தது. கவிதைவும் நூல் விமர்சனமும் அட்டகாசம். ஜோதிடம் அறிவோம் வித்தியாசமாக இருந்தது. குறிப்பாய் நட்சத்திரங்களும் தெய்வங்களும் வித்தியாசம். பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் 2000 ரூபாய் பட்ஜெட்டில் அறிவிப்பு. ஆஹா.

அதெல்லாம் சரி ஜம்மு காஷ்மீரில் 2,15,905 அரசு நிலம் சட்ட விரோதமான ஆக்ரமிப்பில் இருந்தது. இதில் 192457 மீட்கப் ப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் 39205 உள்ளதால் இதனுடைய மதிப்பு 18050 கோடியாக உள்ளது. நீக்கப்படும் நிலத்திலிருந்து நிலமற்ற குடும்பங்களுக்கு தலா 1360 சதுர அடி வழங்கப்படுகிறது. பரவாயிலையை என்று நினைக்கையில் அடுத்த செய்தி அதாவது முன்னாள் முதல்வர்கள் கட்டிய மாளிகைகளை என்ன செய்வது? டெல்லி ஆந்திரா அரசுகள் குழப்பம். அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் ஆட்சியில் 33 கோடி அளவில் அரசு மாளிகை புதுப்பிக்கப்பட்ட விவகாரமும், ஜெகன்மோகன் ரெட்டி அவர்களின் ஆட்சியில் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு இணையாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களும் பேசும்பொருளாகியுள்ளது இப்போது. ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை மிஞ்சும் அளவு செலவு செய்யப்பட்டுள்ளதால், இப்பொழுது என்ன செய்யலாம் என்று சந்திரபாபு நாயுடு யோசிப்பதற்காக செய்தி.

ஆஹா பேப்பர் படித்து முடிக்கும் தருவாயில் நல்ல செய்தியாக கண்ணில் பட்டது. தன் 59 வயது மகனுக்கு தன்னுடைய கிட்னியை கொடுத்து காப்பாற்றிய 81 வயது தாய். வட மேற்கு டெல்லி பகுதியைச் சேர்ந்த தொழிலாதிபர் ராஜேஷ் அவர்களுக்கு அவருடைய தாய் இவ்வாறு மறுவாழ்வு அளித்திருக்கிறார். தாய்க்கு ஈடு இணை ஏது?

வெளிநாட்டு செய்திகளில் கண்ணில் பட்டது சூடானில் 33 லட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு. அடுத்த செய்தி மிகவும் கொடுமை ஆபத்தின் பிடியில் உலக உணவு திட்டம். இந்த பற்றாக்குறை என்ன என்றால் உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்ட மியான்மாரில் 10 லட்சம் மக்களுக்கான உணவு திட்டத்தை வெட்ட வேண்டிய கட்டாயத்தில் உலக உணவுத் திட்டம் இருப்பதாக செய்தி. 2024 ல் நிதிகொடுத்து வந்த அமெரிக்கா திடீரென்று நிதியை நிறுத்திவிட்டது. இதனால் இந்த நெருக்கடி உருவாகியுள்ளதாக செய்தி. போப் அவர்களின் உடல்நிலையில் தொடர்ந்து முன்னேற்றம் நல்ல செய்தி. அடுத்து ஈரானின் அணுசக்தி தொடர்பான பேச்சுவார்த்தையில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே முரண்பாடு இருப்பதால், சீனா ரஷ்யா ஈரான் ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து மார்ச் 14 ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த முரண்பாடுகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கவே இந்த ஏற்பாடு. நிச்சயமாக சுனிதா வில்லியம்ஸ் விடு திரும்பி விடுவார். டிராகன் விண்கலங்களில் தற்போது சர்வதேச விண்வெளி மையத்துக்கு புறப்பட்டு உள்ள விண்வெளி வீரர்களிடம் தங்கள் பொறுப்பு ஒப்படைத்துவிட்டு சுனித வில்லியம்ஸ் மட்டும் வில் மோர் வீடு திரும்புகின்றனர். சூப்பர். பாலஸ்தீனர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த உணவு. இஸ்ரேல் மீண்டும் அதை தடுத்து வைத்திருக்கிறது. அமெரிக்க பொருள்களுக்கு எதிராக ஐரோப்பாவில் பிரச்சாரம். வரிவிதிப்பின் காரணமாக அமெரிக்காவின் பொருள்களுக்கு பதிலாக வேறு எந்த பொருளையும் உபயோகப்படுத்தலாம் என்பத் பற்றிய குறிப்புகள் பகிரப்படுகின்றன. மறுபக்கம் போர் நிறுத்தத்துக்கு நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் ஆனால் அது நீடித்திருக்க வேண்டும் என்கிறார் புதின். புதின் உக்ரைன் ரஷ்யா போருக்கு ஆதரவு தெரிவித்து இருக்கும் நிலையில் இது போன்று ஒரு கட்டுப்பாடு. ஆனால் அவர் போர் நிறுத்த ஒப்புக்கொள்கிறேன் என்றோ மறுக்கிறேன் என்றோ சொல்லவில்லை. அவர்கள் போர் நிறுத்தத்தை ஏற்க விரும்பவில்லை. அதை வெளிப்படையாக அமெரிக்காவிடம் சொல்லவும் பயப்படுகிறார் புதின் என்றார் ஜெலன்ஸ்கி. இப்படி சொல்லியே மூன்று வருடம் ஓடிவிட்டது. முடியலை.



-ஜெயந்தி சுந்தரம்

விவசாயிகளுக்கு 17000 கோடி பயிர்க்கடன்#வேளாண் பட்ஜெட்டில் அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் அறிவிப்பு
பிரதமர் மோடி அடுத்த மாதம் இலங்கை பயணம்
கடன் வாங்குவதில் முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்குகிறது#ஈபிஎஸ் =இவர் முதல்வராய் இருந்தபோது கடன் வாங்கியதே இல்லை
சென்னை 1000 மாணவர்கள் உருவாக்கிய அதி நவீன கண்டுபிடிப்புக்கள்
இது மொழி வெறுப்பல்ல; மொழி பாதுகாப்பு#பவன் கல்யாணுக்கு நடிகர் பிரகாஷ்ராஜ் பதிலடி
34 நாடுகளின் செயற்கைக் கோள்களை ஏவி 1260 கோடி இந்தியா ஈட்டியது
பாஜகவுக்கு முன் பாஜகவுக்குப் பின்#பவன் கல்யாணுக்கு கனிமொழி எம்பி பதிலடி
புதுக் கவிதைகள் அட்டகாசம்
வாசகர் கடிதங்கள் பிரமாதம்
நூல் விமர்சனம் சிறப்பு
பெற்றொரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் ரூ.2000 #பட்ஜெட்டில் அறிவிப்பு
சென்னை ஐஐடியில் மாணவர்கள் உருவாக்கிய தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளின் கண்காட்சி

கேரளாவில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் இருவர் தூக்கிட்டு தற்கொலை

ஜம்மு காஷ்மீரில் 18000 கோடி நிலம் ஆக்கிரமிப்பு

முன்னாள் முதல்வர்கள் கட்டிய சொகுசு மாளிகைகளை என்ன செய்ய?#டெல்லி ஆந்திர அரசு முதல்வர்கள் குழப்பம்

இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை#தமிழகத்தைச் சாடிய பவன்கல்யாண்
ஜார்கண்ட்#ஹோலி ஊர்வலத்தில் மோதல்#வாகனங்கள் கடைகளுக்கு தீ வைப்பு
டெல்லியில் 59 வயது மகனுக்கு 80வயது தாய் சிறுநீரக தானம் அளித்தார்
2021ல் எனக்கு கொலை மிரட்டல்#சுழற் பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி தகவல்
பாகிஸ்தான் உள்ளிட்ட 41 நாடுகளுக்கு பயணத்தடை விதிக்க் டிரம்பின் நிர்வாகம் பரிசீலனை
ஈராக், சிரியாவின் ஐஎஸ் தலைவர்கள் கொல்லப்பட்டார்#ஈராக் பிரதமர்
போப் உடல்நிலை தொடர்ந்து முன்னேற்றம் காணப்படுகிறது
போர் நிறுத்தத்திற்கு உடன் படுகிறோம்#ஆனால் அது நீண்ட காலத்திற்குரியதாக இருக்க வேண்டும்#புடின்
அமெரிக்க பொருட்களுக்கு எதிராக ஐரோப்பாவில் பிரச்சாரம்
விரைவில் பூமி திரும்பும் சுனிதா வில்லியம்ஸ்#விண்வெளி மையத்திற்கு புறப்பட்ட ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம்



-பி. திலகவதி
சென்னை

35 நாளில் சிம்பொனி எழுதிய இளையராஜா. அறிமுகப்படுத்திய நடிகை வடிவுக்கரசிக்கு ஜோடியாக " நிறம் மாறும் உலகில்" படத்தில் நடிக்கும் பாரதிராஜா. விண்ணைத்தாண்டி வருவாயா? படம் வெளிவந்து 15 ஆண்டுகள் சச்சின், எம் .குமரன் சன் ஆ∴ப் மகாலட்சுமி மறு வெளியீடு. அஜீத் நடிப்பில் குட் பேட் அக்லி அடுத்த மாதம் 10 ம் தேதி வெளியாகும் செய்தி என " சினித்துளி" செய்திகள் அனைத்துமே அருமை.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

தமிழ்நாடு இ பேப்பர் க்கு தலை வணக்கம் சினித்துளி மழைத்துளி போல் அனைத்தும் அருமை... விவசாயிகளுக்கு ரூபாய் 17000 கோடி பயிர் கடன் நன்று ஆயிரம் மாணவர்கள் உருவாக்கிய அதிநவீன கண்டுபிடிப்புகள். நலம் தரும் மருத்துவம்.... கத்திரிக்காய் சாப்பிடுவதால் இதயத்தின் பலம் அதிகரிக்கிறது. கத்திரிக்காய் ரத்தத்தில் உள்ள கொழுப்புகள் அளவை கட்டுப்படுத்துகிறது கத்திரிக்காய் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடலில் இரும்பு சத்து மற்றும் ஹீமோகுளோபின் அதிகரிக்கும். கத்திரிக்காய் எடையை குறைக்க உதவும். சிறுகதைகள் அருமை. தீபம் காண்பிப்பதும், கற்பூரம் காண்பிப்பதும் கட்டாயம் உண்டு. இருள் அகலம் கற்பூரம் காண்பித்தால் மனதில் அழுக்குகள் விலகி மனம் இறைவனிடம் ஒன்றி விடும் அருமையான விளக்கம். பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் 2000 பட்ஜெட்டில் அறிவிப்பு வரவேற்கிறோம். டெல்லியில் 59வயது மகனுக்கு சிறுநீரக தானம் செய்து மறுவாழ்வழித்து 80 வயது தாய்...எவ்வளவு வயது இருந்தாலும் ஒரு தாய் மனது அப்படி தான் பெற்றவளுக்கு பிள்ளை தானே வேண்டும். இன்று பிறந்தநாள் திருமண நாள் காணும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன் உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை தினமும் எங்களுக்கு தெள்ளத்தெளிவாக கொடுக்கும் நம் தமிழ்நாடு இ பேப்பர் க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்




-நிர்மலா ஸ்ரீதரன்
திருவண்ணாமலை

வணக்கம் 16.3.25

அன்றைய தமிழ்நாடு இ பேப்பர்.காம் நாளிதழுடன் கொடுக்கப்பட்ட சினித்துளி மிகவும் அருமை ஒவ்வொரு பக்கத்திலும் திரையுலகில் என்ன நடக்கிறது என்று அழகாக சொல்லி புரிய வைத்தது நன்றாக படிக்கும்படி அருமையாக தெளிவாக இருந்தது பாராட்டுக்கள். தமிழ்நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் வேளாண்மை பட்ஜெட் பற்றி மிக அழகாக தெளிவாக சொன்னது பாராட்டுக்குரியது இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புதமான நாளாக எனக்கு அழகாக வகுத்து சொன்னது. திருக்குறள் மிகவும் அருமை படிக்கும்போதே அதனுடைய பொருள் புரிந்து மகிழ்ச்சியுடன் படிக்க வைத்தது எந்தெந்த கோவில்களில் பங்குனி மாதத்தில் என்னென்ன சிறப்பு பூஜைகள் என்று அழகாக படங்களாக தொகுத்து கொடுத்து செய்தியாகவும் பிரசூதித்தது மன மகிழ்ச்சியுடன் படிக்க வைத்தது. கத்திரிக்காய் என்றாலே அலர்ஜி என்று பலர் சாப்பிடுவதில்லை அந்த கத்திரிக்காயை சாப்பிடுவது உடல் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவும் என்ற ஒரு கேள்வியும் கேட்டு நலம் தரும் மருத்துவ பகுதி அதுக்கு தகுந்த பதிலும் கொடுத்து புரிய வைத்த தமிழ்நாடு இ பேப்பருக்கு மனம் நிறைந்த பாராட்டுக்கள். தினம் ஒரு விளையாட்டுப் பகுதியில் நீச்சல் போட்டி என்று நீச்சல் போட்டி பற்றிய விரிவான விளக்கம் அளித்தது ஆர்வமுடன் படித்து புரிந்து கொள்ள முடிந்தது. தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் கண்டன் சங்கரலிங்கனார் வரலாறு நல்ல வரலாறு செய்தியாக இருந்தது மனம் நிறைந்த பாராட்டுக்கள் பல்சுவை களஞ்சியம் பகுதியில் வரும் மீம்ஸ் மிகவும் அருமை பலமுறை பார்த்து ரசித்து சிரிக்க வைத்தது ஜோதிடம் அறிவோம் பக்கத்தை படித்தவுடன் பல ஜோதிட கேள்விகளுக்கு பதில் அளிப்பது போல நல்ல விளக்கத்துடன் இருந்தது. ராசிபலன் மிகவும் அருமை எந்த ராசிக்கு என்ன பலன் என்று படித்தவுடன் எப்படி எல்லாம் இந்த வாரம் இருக்கும் என்று நினைத்துப் பார்க்க வைத்தது.. நேற்று வழங்கப்பட்ட தமிழக வேளாண் வேளாண் பட்ஜெட் 2025 முக்கிய அம்சங்களை மிக அழகாக தெளிவாக விவரித்தது பயனுள்ள தகவல்.

ஒரு பத்தி செய்திகள் அத்தனையும் முத்துக்கள் ஒவ்வொரு முத்தாக மெதுவாக படித்து நன்றாக புரிந்து கொள்ள முடிகிறது அமெரிக்காவுக்கு செல்ல எந்தெந்த நாடுகளுக்கு தடை என்று விவரமாக படித்தவுடன் இவர்களுக்கு எல்லாம் விசா கிடைக்காது என்று எண்ண வைத்தது. எல்லா பக்கத்திலும் நல்ல செய்திகளாக அருமையாக தொகுத்து கொடுத்து விடியலை சந்தோஷ விடியலாக மாற்ற உதவும் தமிழ்நாடு இ பேப்பர் ஆசிரியர் குழுமத்திற்கு மனம் நிறைந்த பாராட்டுக்கள் தொடரட்டும் உங்களின் இந்த அருமையான பணி.



-உஷா முத்துராமன்

# வாசகர் கடிதம்

சினித்துளி இணைப்புடன் வெளிவந்த தமிழ்நாடு இ. பேப்பரின் ஒவ்வொரு பக்கமும் தேன்துளியாக ருசித்தது.

விதம் விதமாக 36 கவிஞர்களால் கவிதைத் தோரணம் கட்டப்பட்ட புதுக்கவிதை பகுதிகள் என்னை குதூகலத்தில் ஆழ்த்தியது. அதிலும் 'ஜனவரி பிப்ரவரி மகேஸ்வரி....' என்ற முத்து ஆனந்தின் கவிதை என்னை ஒருவித கிறக்கத்தில் தள்ளியது.

தமிழ்நிலாவின் 'குப்பைக்குள் புதையல்', முகில் தினகரனின் 'த்ரில்' என்ற இரண்டு சிறுகதைகளுமே சிறப்பாக இருந்தது. எப்போதுமே தமிழ்நாடு இ.பேப்பரில் சிறுகதைகள் சோடைப்போனதில்லை! தினம் ஒரு விளையாட்டு பகுதியில் 'நீச்சல் போட்டியை பற்றிய தகவல்களை படித்து வியந்துப்போனேன். இதில் எனக்கு ஒரு வருத்தம் என்னவென்றால் எனக்கு நீச்சல் தெரியாது என்பதுதான்!

'தீபம் ஏற்றுவதற்கும், கற்பூரம் ஏற்றுவதற்கும் என்ன வித்தியாசம்' என்பதை இப்போதுதான் முதன் முறையாக அறிகிறேன். அறியாத பல தகவல்களை தமிழ்நாடு இ.பேப்பர் மூலம் அறிய முடிகிறது.

அழகான அமைப்பில் பல்சுவை கதம்பமாக வெளிவரும் தமிழ்நாடு இ.பேப்பர் ஒவ்வொரு நாளும் உற்சாகம் தரும் தேனமுதமாக இருக்கிறது!

**-சின்னஞ்சிறுகோபு**
**சிகாகோ**

---

தமிழக பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு ரூ17 ஆயிரம் கோடி பயிர்க்கடன் இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் முதல் மாநிலமாக தமிழகம் உள்ளது.

பிரதமர் மோடி இலங்கை பயணம்.

151 பயனாளிகளுக்கு அமைச்சர் கீதாஜீவன் கணினி பட்டாக்களை வழங்கினார்.

ஐஐடி-யின் 1000 மாணவர்கள் உருவாக்கிய 60 அதிநவீன கண்டுபிடிப்புகள்.

தனிநபர் விபத்து காப்பீடு தொகை ரூ ஒருகோடி.

கொழுப்பைக் குறைப்பதில் கத்தரிக்காய் முக்கிய பங்கு வகிக்கிறது.

குருத்வாராவில் குண்டு வெடிப்பு. பஞ்சாபில் பதற்றம்.

குப்பைக்குள் புதையல், த்ரில் -கதைகள் மிகவும் அருமை.

பாகிஸ்தான் உள்ளிட்ட 41 நாடுகளுக்கு பயணத்தடை விதிக்க ட்ரம்ப் நிர்வாகம் பரிசீலனை.

தமிழக பட்ஜெட்டில்பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் ரூ2 ஆயிரம் வழங்க முடிவு.

**-பார்வதி நாகமணி**

---

இன்றைய 16/03/25 நாளிட்ட நமது தமிழ்நாடு மின்னிதழ் நேசிக்கும்படியாய் புதுவிதத் துடிப்புடன் இருந்தது. நாளுக்குநாள் படைப்புகள் பொறுப்பும் சிறப்பும் மிக்கவையாக மலர்கின்றன. இன்றைய குப்பைக்குள் புதையல் கதை, மனிதர்களுக்குள் தெய்வமாகச் சிலர் வாழ்ந்துதான் வருகின்றனர் என்பதை ஆணித்தரமாகக் காட்டியது. சீரான இனிய எளிய நடை. அடுத்து த்ரில் கதை த்ரிலாக சுழன்றது. தொடர்ந்து தவறுகள் செய்துவந்த அமுதாவையும் திருந்த வைத்த கதையமைப்பு நிறைகுடம். படைப்பாளர்களுக்கும் தமிழ்நாடு மின்னிதழ் குடும்பத்திற்கும் பாராட்டுகள்.

**-மு. பழனித்துரை**
**அறந்தாங்கி**

---

தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் அவர்களுக்கும், மற்றும் அங்கு பணிபுரியும் அனைத்து அன்பு உடன்பிறப்புகளுக்கும் என் இனிய வணக்கம் !

தமிழக பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு 17 ஆயிரம் கோடி பயிர் கடன் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு பட்ஜெட்டிலும் புதிதாக பயிர் கடன்கள் வழங்குவதும், பழைய கடன்களை தள்ளுபடி செய்வதாக அறிவிப்பதும் தொடர்கிறது.

இப்படி இருந்தால் வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதற்கு யாருக்கும் மனம் வராது. பட்ஜெட்டில் தள்ளுபடி செய்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் கடன்களை கட்டாமலேயே காத்திருப்பார்கள்.

கடனில் மூழ்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்று எடப்பாடி பழனிச்சாமி பேசியிருக்கிறார். ஒவ்வொரு மாநில அரசும் தாங்கள் அறிவிக்கும் இலவச திட்டங்களுக்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டால் தங்கள் இஷ்டத்துக்கு கடனை வாங்கிக் கொள்கிறார்கள்,

எதிர்காலத்தில் ஆள வருகிறவன் கடனை செலுத்தட்டும் என்ற அலட்சியமே ஒரு காரணம். இப்படியே இஷ்டத்துக்கு கடன் வாங்கும் நிலை தொடர்ந்தால் அரசின் வருமானத்தையே வட்டியாக கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

மாநிலங்கள் தங்கள் இஷ்டத்துக்கு கடனை வாங்குவதை தடுப்பதற்கு ஏதாவது ஒரு சட்டம் போட வேண்டும்.

மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக " இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை " என்று ஆந்திர மாநில துணை முதலமைச்சர் பவன் கல்யாண் பேசியிருக்கிறார்.

அவர் பேசவில்லை. மத்தியில் அரசுக்கு ஆதரவு அளிப்பதற்காக அவரது மாநிலத்துக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட அபரிமிதமான சிறப்பு நிதி பேசுகிறது. மத்திய அரசிடம் இருந்து தனது மாநிலத்திற்கு வாங்கிய நிதியை விட மிக அதிகமாகவே பேசுகிறார்.

பல்சுவை களஞ்சியம் பகுதியில் சத்தியவான் சாவித்திரி புராணக் கதை அருமையாக இருந்தது.

டெல்லியில் 59 வயதான தனது மகனுக்கு தனது ஒரு சிறுநீரகத்தை தானமாக அளித்து மகனின் உயிரை காப்பாற்றி இருக்கிறார் ஒரு 80 வயதான தாய்.

இந்த செய்தியை படிப்பதற்கே புல்லரிக்கிறது. தாய் பாசம் என்பது கடைசி வரை அதாவது சுடுகாடு போகும் வரை மாறாமல் இருக்கும் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு சான்று.

உலக உணவுத் திட்டம் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக ஐநா கூறி இருக்கிறது. சூடானில் 33 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உலவுகின்றன என்று கூறுகிறது. இதற்கெல்லாம் காரணம் ஐநாவுக்கான நிதியை நிறுத்திய அமெரிக்காவின் புதிய நிர்வாகமும் அதிபர் ட்ரம்பும் தான்.

கார் ரிப்பேர் ஆனதால் வெளியூரில் மாட்டிக் கொண்டது போல திரும்பி பூமிக்கு வரும் விண்கலம் கோளாறு செய்ததால் மேலும் பல மாதங்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலேயே காத்து கிடக்கும் சுனிதா வில்லியம்ஸ் அவரை அழைத்து வர புதிதாக அனுப்பப்பட்டிருக்கும் விண்கலத்தில் பத்திரமாகவும் ஆரோக்கியமாகவும் , வர இறைவனை வேண்டுகிறேன்.



**-வெ.ஆசைத்தம்பி**
**தஞ்சாவூர்**

---

எங்களின் இதய ஒலியே வணக்கம். மார்ச் 16ஆம் தேதி நாளிதழில் விவசாயிகளுக்கு 17 ஆயிரம் கோடி கடன் வழங்கு இருப்பதாக தமிழக அரசு திட்டமிட்டு இருப்பதை அறிய முடிகிறது. மேலும் தமிழக வேளாண்மை பட்ஜெட் 2025 முக்கிய அம்சங்கள் என்று நீங்கள் தொகுத்து அளித்தது மிகவும் சிறப்பு. கடன் வாங்குவதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் உள்ளது என்று எடப்பாடி தெரிவித்திருக்கிறார். அரசு ஊழியர்கள் விபத்தில் இறந்தால் தனிநபர் விபத்து காப்பீட்டு மூலம் அவர்களுக்கு ஒரு கோடி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிகிறது. இது மொழி வெறுப்பல்ல தாய்மொழி பாதுகாப்பு என்று பவன் கல்யாணத்துக்கு நடிகர் பிரகாஷ்ராஜ் பதில் கூறியிருக்கிறார் அது மட்டுமல்ல அவருக்கு எம்பி கனிமொழியும் பதில் கூறியிருக்கிறார். திரைச் செய்திகள் இனித்தன. பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் 2000 வழங்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. டெல்லியில் 59 வயது மகனுக்கு சிறுநீரகத்தை தானமாக கொடுத்து மறுவாழ்வு அளித்த என்பது வயது தாயார் பாராட்டுக்குரியவர். பாகிஸ்தான் உட்பட 41 நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் அமெரிக்காவில் நுழைய கடுமையான பயண தடை விதிக்க அமெரிக்கா பரிசு என செய்து வருகிறது. நாம் நாம் நீண்ட நாட்களில் பார்க்கும் சுனிதா வில்லியம்ஸ் விரைவில் பூமிக்கு வருகிறார். மற்றும் ஜோதிடம் அறிவோம் வாசகர் கடிதம் புதுக்கவிதைகள், செய்திகள் என்னை ஏராளமாக தந்து எங்களை மகிழ்விக்கும் உங்களுக்கு பாராட்டு. .. அது மட்டுமல்லாது ஞாயிற்றுக்கிழமை இணைப்பு ஒன்றை தந்து மகிழ்வில் ஆழ்த்துகிறீர்கள். சினித்துளி அற்புதம் அற்புதம் அழகு பாராட்டுக்கள்.



**-ந. சண்முகம்**
**திருவண்ணாமலை**

---

தமிழ்நாடு இ பேப்பர் டாட் காம் இன்றைய செய்திகள்.

விவசாயிகளுக்கு ரூபாய் 17000 கோடி பயிர் கடன் வேளாண் பட்சத்தில் அமைச்சர் எம் பன்னீர்செல்வம் அறிவிப்பு.

பிரதமர் மோடி அடுத்த மாதம் இலங்கை பயணம்.

சென்னை ஐஐடியில் ஆயிரம் மாணவர்கள் உருவாக்கிய 60 அதிநவீன தொழில்நுட்பம் கண்டுபிடிப்புகள்.

அரசு ஊழியர்கள் விபத்தில் இருந்தால் தனிநபர் விபத்து காப்பீடு தொகை ஒரு கோடி ரூபாய் அறிவிப்பு.

கத்திரிக்காய் சாப்பிடுவதால் உடல் ஆரோக்கிய கட்டுரை சிறப்பாக உள்ளது.

34 நாட்டின் செயற்கைக்கோள்களை ஏவி ரூபாய் 1260 கோடி வருவாய் இயற்றியது இந்தியா.

அமிர்தசரஸ் குருத்வாராவில் குண்டு வெடிப்பு பஞ்சாபில் பதற்றம்.

மேட்டூர் காவிரி கரை அகழாய்வில் கீழடி போல் பழமையான பொருட்கள் கிடைக்கும் என எதிர்பார்ப்பு.

தினம் ஒரு தலைவர் சங்கரலிங்கனார் வரலாறு அருமை.

புதுக்கவிதைகள் பகுதி அருமையாக உள்ளது.

பெரும் எழுச்சியோடு நடைபெற்ற மண்டல வித்யா நிகழ்ச்சி சவுதி அரேபியாவில்.

பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் ரூபாய் 2000 ரூபாய் தமிழக பட்ஜெட்டில் அறிவிப்பு.

பெத்தேல் அறக்கட்டளை சார்பாக சாதனை மகளிர்க்கு விருதுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா.

அரசு நிதி உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்கள், சாலை மறியல் மதுரையில் 400 பேர் கைது.

பிரபல ரவுடி வசூல்ராஜா கொலை வழக்கில் 10 பேர் கைது.

ஜார்க்கண்ட் ஹோலி ஊர்வலத்தில் மோதல் வாகனங்கள் கடைகளுக்கு தீவைப்பு.

டெல்லியில் 59 வயது மகற்கு சிறுநீரக தானம் செய்து மறுவாழ்வழித்த என்பது வயது தாய்.

போர் நிறுத்தத்திற்கு உடன்படுகிறோம் ஆனால் அது நீண்ட காலத்திற்கு உரியதாக இருக்க வேண்டும் ரஷ்ய அதிபர் புடின் அறிவிப்பு.

இன்றைய செய்திகள் அனைத்தும் சிறப்பாக உள்ளது புகைப்படங்கள் மிகவும் தெளிவாக உள்ளது அனைவரும் பாராட்டக் கூடியது நன்றி வணக்கம்.



**-அபிபுல்லாகான்.க**
**போளூர்**




Wanted
SECRETARY FOR A DOCTOR
Clinic Located at:
MADIPAKKAM
JOB TIMING
WEEKDAYS -4 pm to 9 pm
SUNDAY -10 am to 2 pm.
Contact: 9884447865






































































## மராத்தான் ஓட்டம்...



சமீபத்தில் சென்னை தீவுத்திடலில், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோர் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் நடைபெற்ற நுகர்வோர் விழிப்புணர்வு குறித்து மாணவர் மாணவியருக்கான மராத்தான் ஓட்டத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் திரு. த. மோகன், இ.ஆ.ப., மாணவர்கள், மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# பல்சுவை களஞ்சியம்



# கடவுளின் படியளப்பு

கடவுள் ஒரு சர்வ வியாபி. அவர் எங்கும், எப்போதும், எல்லோரோடும் இருப்பவர். நம்மை சுற்றி சுற்றி வருபவர். ஆனால் அவரை சுற்றுவதற்காக நாம் முயற்சிக்கும்போது அகமும் முகமும் மலர்கிறார்.

பல பல வருடங்களாக எங்கள் வீட்டின் அருகிலுள்ள ஒரு பெருமாள் கோயிலிற்கு தினம் சென்று அவரை சுற்றும் (பிரதட்சனம் செய்யும்) பழக்கத்தை கொண்டுள்ளேன் நான். அதற்காக நேற்று மாலை சென்றபோது எனக்கு கோயில் மூலம் பழக்கமான உஷா மாமி மிகவும் சோர்வாக அமர்ந்திருந்தார். நான் எனது பிரதட்சனங்களை முடித்துக் கொண்டு அவர் அருகில் அமர்ந்து மேலோட்டமாக பேசிவிட்டு விஷயத்திற்கு வந்தேன். ஏன் சோர்வாக இருக்கிறார் என்று நான் கேட்டபோது, அவர் என்னதான் பெருமாளை சுற்றி சுற்றி வந்தாலும் வாழ்வில் எந்த முன்னேற்றமுமில்லை என்று மிகவும் விரக்தியுடன் கூறினார். அவரது குடும்ப சூழல் பற்றி எனக்கு தெரியுமென்பதால் அவரது சோர்வு புரிந்தது.


வாழ்க்கை எனக்கு கற்று கொடுத்த பாடத்தை அவருடனும் இப்போது உங்களுடனும் பகிர்கின்றேன்.


நமது பாவங்களும் புண்ணியங்களும் தனி தனி கணக்குகள். இன்று நிறைய புண்ணியங்களை செய்து குவித்து அவை மூலம் பாவங்களை கழித்து விடலாம் என நினைப்பது தவறு. நமது தீர்ப்பு நாளன்று நமது பாவங்களையும் புண்ணியங்களையும் தனி தனியாக எடை போட்டே நாம் நல்லவரா அல்லவரா என்ற முடிவெடுக்கப் படுகிறது.

கடந்த காலங்களில் நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்களும் புண்ணியங்களும் நமது கணக்கில் ஏறி வரும். சிறு வயது முதல் நாம் அறியாமல் செய்த பல நல்ல காரியங்களால் புண்ணிய கணக்கின் எடை கூடும். அதே போல் கோபத்தாலும் தாபத்தாலும் நாம் செய்யும் கெட்ட காரியங்கள் நமது பாவ மூட்டையை பலுவாக்கும். வளர வளர நாம் மனமுதிர்ச்சி அடைகிறோம். வாழ்க்கை அனுபவத்தாலும் மனமுதிர்ச்சியாலும் சிறிது சிறிதாக தன்மை படுகிறோம். சிறு வயதின் "எடுத்தோம் கவுத்தோம்" என்ற செயல்கள் குறையும். ஒவ்வொரு செயலின் முன்னும் நாம் பலமான யோசனையில் ஈடு படுவோம். முதியோரையும் அறிந்தோரையும் கேட்டு தெளிவு பெற்ற பின்னர் செயல்பட ஆரம்பிப்போம். அப்படி செய்யும்போது அச்செயல் சரியான முடிவை தரும்.

அதே போல் வயது முதிர்ச்சி நம்மை பல நல்ல காரியங்களில் ஈடு பட செய்கின்றன. பிறருக்கு உதவுதல், இல்லாதவருக்கு கொடுத்தல், இளைஞர்களுக்கு நல்ல அறிவுரை வழங்குதல் என்று நமது புண்ணிய மூட்டை எடை கூடும் நிலை தொடங்கும்.

எது எப்படி ஆனாலும் நாம் செய்த பாவங்களுக்கான சம்பளத்தை நாம் சுமப்பது நிச்சயம். அதே போல் நமது புண்ணியங்களுக்கான சம்பளத்தையும் நாம் அனுபவிப்பது உண்மை. ஒன்று துக்கம், மற்றொன்று சுகம்..... அவ்வளவே. இவை யாவையையும் அந்த உஷா மாமியிடம் விளக்கினேன். அவரும் தெளிவு பெற்றார்.





நாம் இந்த கால கட்டத்தில் அனுபவிக்கும் துன்பங்கள் யாவுமே என்றோ நாம் செய்த தீய செயல்களின் விளைவே. இப்போது நாம் நல்ல காரியங்களையும் பிறருக்கு உதவிகளையும் செய்வது முன்னர் செய்த பாவங்களை அழிக்க முடியாது. நான் முன்னர் சொன்னது போலவே இரண்டும் இரு தனி கணக்குகள்.

எனவே நாம் நமது குழந்தைகளை வளர்க்கும்பொதே சிறு வயதிலிருந்தே இறை கதைகளை கூறி வளர்ப்பது நல்லது. அக்கதைகளுக்குள் புதைந்திருக்கும் நல்ல அறிவுரைகளை நாம் அவர்களுக்கு விளக்கி ஊட்டினால், அவர்கள் நிச்சயமாக நல்ல மனிதர்களாகவே உருவாகுவார்கள். நமது புராண கதைகள் யாவுமே நன்மையையும் தீமையையும் சுற்றி பிணையப் பட்டவை. இவைகளை அடித்தளமாக கொண்டு குழந்தைகள் வளர்ந்தால் எதிர்காலத்தில் நாம் ஒரு வளமான சமுதாயத்தை உருவாக்கிய பெருமையை சுமப்போம்.

வைணவ குரு ஸ்ரீ ராமானுஜரின் இரு வரிகள் இதை மிக அருமையாக விளக்குகின்றன :

"தேக யாத்ரா கர்மா தீனா
ஆத்ம யாத்ரா பகவத் அதீனா"

"உனது உடலின் பயணம் உனது மனதை பொறுத்தது. உனது வாழ்வின் பாவ புண்ணியங்களால் உருவாகிறது. ஆனால் உனது ஆத்மாவின் பயணமோ என் கையில். அதை நான் பத்திரமாக ஆன்மீக வழியில் கொண்டு செல்வேன்" என்று நம்மை பார்த்து இறைவன் சொல்வது போல் அமைந்துள்ளன.



-ரமா ஸ்ரீனிவாசன்

# மீம்ஸ்







# பொன்மொழிகள்



உடல் நோயற்று இருப்பது முதல் இன்பம். மனம் கவலையற்று இருப்பது இரண்டாவது இன்பம். உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது மூன்றாவது இன்பம்

- மு.வரதராஜனார்.


எறும்பின் சுறுசுறுப்பும், எருதின் உழைப்பும், நரியின் தந்திரமும், நாயின் விசுவாசமும், கழுதையின் பொறுமையும், காகத்தின் சுட்டுறவும், புலியின் வீரமும், புறாவின் ஒழுக்கமும், சிங்கத்தின் நடையும், யானையின் அறிவும், மானின் வாழ்வும், மக்களுக்குத் தேவை

- கி.ஆ.பெ. விசுவநாதன்



இரகசியத்தைக் காப்பாற்றுங்கள், அது உங்களுக்கு அடிமை. அதை வெளியிட்டுவிட்டால் அது உங்கள் எஜமான்

- வில்ஹென்றி



காலில் செருப்பு போட்டுக் கொண்டால் நீ முள்ளின் மீது கூட சுலமாக நடக்கலாம். ஞானமாகிய செருப்பை போட்டுக் கொண்டால் உலகம் என்னும் முள் நிறைந்த வனமெங்கும் நீ பயமின்றி பயணம் செய்யலாம்

- இராமகிருஷ்ண பரமஹம்சர்



கட்டுப்பாடு என்பது சுதந்திரத்திற்கு முரணானது அல்ல, சுதந்திரத்தை நியாயமான வகையில் பயன்படுத்திக் கொள்ள உதவுவதே

- அரவிந்தர்



-ஆர்.ஹரிகோபி,
புது டெல்லி



விடுகதை

| | |
|---|---|
| கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகையின் நடுவே ஒரு குளம். அது என்ன? | தேங்காய் |
| தலை இல்லாதவன் தலையை சுமப்பவன் அவன் யார் | தலையணை |
| பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார் | சீப்பு |
| கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன? | பூசனிக்கொடி |
| தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்? | பென்சில் |
| கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான் அவன் யார்? | கரும்பு |



# ஜோக்ஸ்

அந்த எழுத்தாளர் மாவு மில்லில் வேலை பார்க்கிறாராம்.
அதான் அரைத்த மாவையே அரைக்கிறாரா

----------------

தானத்தில் சிறந்தவர் நமது மன்னர் என்று எப்படிப் பெயர் எடுத்தார்?
போர்க்களத்தில் கூட எதிரி நாட்டு மன்னரிடம் சமா"தானம்" பேசி சமாளித்து விடுவார்.

----------------

எங்கே ஈ காட்டு பாக்கலாம்?
நீங்க 'ஈ' பார்த்ததில்லையா டாக்டர்!

--------------

2 ல 5 போகலைன்னா பக்கத்துல கடன் வாங்கணும்.
பக்கத்துல சரவணன் கிட்ட கேட்டேன் தர மாட்டேங்குறான், சார்!

----------------

பார்த்து அறிவது பலன் தருமா? பார்த்து தெரிவது பலன் தருமா? இல்லை பார்த்து புரிவது தான் பலன் தருமா?
பார்த்து எழுதுவதே பலன்தரும், சார்.

----------------



மன்னருக்கு கிரிக்கெட் பைத்தியம் முத்தி போச்சு.
எப்படி சொல்றீங்க?
எதிரி மன்னரிடம் போரை "பகல் இரவு" போராக வைத்துக்கொள்ளலாமா என்று கேட்டு ஓலை அனுப்பி இருக்கிறார்.

----------------

முதுகில் பல்லி விழுந்தால் காலண்டரில் குழப்பம் னு போட்டிருக்கே!
நம்ம முதுகில் பல்லி விழுந்தால் காலண்டர்ல ஏன்டா குழப்பம் வரணும்.

----------------

நல்லா படிச்சு பரீட்சை எழுதியும் இப்படி ஃபெயில் ஆயிட்டோமேன்னு கொஞ்சம் கூட கவலை இல்லாம நிக்கிற?
நீங்கதானப்பா சொன்னிங்க "கடமையை செய் பலனை எதிர்பார்க்காதேனு"



# பன்முகம்



## நன்னாரி நீர் இழப்பை சமன்படுத்த உதவுகிறது

நன்னாரி சர்பத் பெரும்பாலும் தென்னிந்தியாவில் வெயில் காலங்களில் தாகத்தை தணிக்க அனைவராலும் விரும்பி குடிக்கப்படும் ஒரு பானம். ஒரு கிளாஸ் நன்னாரி சர்பத்தில் 72 கலோரிகள், 15 கிராம் கார்போஹைட்ரேட் மற்றும் 15 கிராம் சர்க்கரை உள்ளது.

இதில் சபோனின், பிளவனாய்ட்ஸ், அல்கலாய்ட்ஸ், பினோலிக் காம்பௌண்ட்ஸ் போன்ற ஆன்டி ஆக்ஸிடண்ட்கள் உள்ளன. அது மட்டுமல்ல, இது ஆக்சிஜனேற்ற அழுத்தத்தை குறைத்து பிரீ ரேடிக்கல்களை வெளியேற்றுகிறது. இவற்றில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் மூட்டு வலி மற்றும் முடக்கு வாதம் போன்ற பிரச்சினைகளை குறைக்கிறது.

மேலும் இதிலுள்ள சபோனின் என்ற ஆன்டிஆக்ஸிடண்ட் தோலில் உள்ள அகநச்சுடன் கலந்து சொரியாசிஸ் நோய் விரைவில் குணமடைய உதவுகிறது. இதற்கு நுண்ணுயிர் எதிர்ப்பு செயல்பாடுகள் உள்ளதால் நன்னாரி பல ஆண்டுகளாக தொழு நோய் மற்றும் சிபிலிஸ் நோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இதிலிருக்கும் ஆன்டி ஆக்ஸிடண்ட் பிளேவனாய்ட்ஸ் கல்லீரல் பாதிப்புகளை தடுக்க துணை புரிகிறது. நன்னாரி சர்பத் ரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மையும், உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடிய பண்பையும் கொண்டுள்ளது. அது மட்டுமல்ல, நன்னாரி சருமத்திற்கு பொலிவை தருவதாக பல்வேறு ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் இது வெயிலினால் ஏற்படும் நீர் இழப்பை சமன்படுத்த உதவுகிறது. நன்னாரி சர்பத்தை குடிப்பதால் பெரிய அளவில் பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை. எனினும் இதனை அதிக அளவு குடிக்கும் போது இதில் உள்ள சபோனின் சில சமயங்களில் வயிற்றில் எரிச்சல் அல்லது புண் போன்றவற்றை உண்டாக்க கூடும்.




கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் டாக்டரிடம் கலந்தாலோசித்த பின்னரே நன்னாரி சர்பத்தை பருக வேண்டும். நன்னாரி சர்பத்தில் நிறைய மருத்துவ குணங்கள் இருந்தாலும், இதில் உள்ள சர்க்கரை மற்றும் கார்போஹைட்ரேட் சர்க்கரை நோயளிகளுக்கு ரத்த சர்க்கரை அளவை அதிகமாக்க கூடும்.

அதனால் சர்க்கரை நோயாளிகள் நன்னாரி சர்பத் குடிக்கும் போது சர்க்கரை சேர்க்காமலோ அல்லது சர்க்கரைக்கு பதிலாக செயற்கை இனிப்பூட்டிகளை கலந்தோ பருகலாம். நன்னாரியை சர்பத் வடிவில் குடிப்பதை விட வெறும் வேர்களை சுத்தம் செய்து, மண்பானை தண்ணீரில் போட்டு தினசரி தேவைகளுக்கு குடிப்பதற்கு பயன்படுத்தினால் அதிக நன்மைகள் கிடைக்கும்.



## அல்சைமர் நோய் வராமல் தடுக்க





'அல்சைமர் நோய்' என்பது படிப்படியாக வளரும் நரம்பியல் சம்பந்தப்பட்ட ஒரு தீவிரநோய் ஆகும். இதை 'மறதிநோய்' என்றே நேரடியாக சொல்லலாம். இது மூளையிலுள்ள நரம்பு செல்கள் சேதமடைவதால் ஏற்படுவதாகும்.

நேற்று நடந்தது இன்று ஞாபகமில்லை. இன்று நடப்பது நாளை ஞாபகத்தில் இருக்காது என்ற நிலை ஒரு மனிதனுக்கு ஏற்பட்டால், அவனது வாழ்க்கையில் ஒரு பிடிப்பு எப்படி இருக்கும்? வாழவே பிடிக்காது.

இந்த 'குறுகிய கால நினைவு இழப்பு நோய்' நினைவை இழக்கச் செய்யும், சிந்தனையை மறக்கச் செய்யும். வயது கூடக்கூட இந்த நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே வருகிறது. உலகமெங்கும் சுமார் 3½ கோடி மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.


மறதி என்பது குறைவான அளவில் எல்லோருக்குமே இருக்கக்கூடிய ஒரு பிரச்சினைதான். ஆனால் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த பொருளை இங்கேதானே வைத்திருந்தேன் காணவில்லையே, நேற்று நான் அப்படி சொல்லவே இல்லையே, அந்த பேப்பரில் நான் கையெழுத்து போடவே இல்லையே, இப்படி தினமுமே முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவார், சொல்வார், செய்வார். இம்மாதிரி நபர்களுக்கு மதிப்பீடு என்றொரு சோதனையையும், அறியும் திறன் என்றொரு சோதனையையும் செய்து பார்த்தால் தெரிந்துவிடும்.

தூக்கம் வருவதில் சிக்கல், பேசுவதில் சிக்கல், ஒரே பேச்சை திரும்பத் திரும்ப சொல்லுவது, தன் குடும்பத்திலுள்ளவர்களின் பெயர்களையே மறந்துவிடுவது, தவறான நடத்தைகளில் ஈடுபடுவது, சித்தப்பிரமை என்று சொல்வார்களே அப்படி செயல்படுவது இன்னும் நிறைய வித்தியாசமான செயல்களை இவர்கள் தினமும் செய்வார்கள்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் நல்ல ஆரோக்கியமான எல்லா சத்துக்களும் நிறைந்திருக்கக்கூடிய சரிவிகித சத்துணவாக தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும். ஆரோக்கியமான, சத்தான உடலுக்கு தீங்கு விளைவிக்காத சமையல் எண்ணெய் வகைளை உபயோகிக்க வேண்டும். கெட்ட கொழுப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

தினமும் கண்டிப்பாக சிறிது நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நடைப்பயிற்சி, நீச்சல் பயிற்சி முதலிய ஏதாவதொன்றை தினமும் செய்ய வேண்டும். சிகரெட், மது உபயோகிப்பவர்களாக இருந்தால், அறவே தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

நல்ல உணவு, நல்ல உடற்பயிற்சி, தன்னை சுற்றி இருப்பவர்களுடன் நன்கு பேசிப் பழகுதல், மூளைக்கு வேலை இவைகளைத் தொடர்ந்து செய்து வந்தால் அல்சைமர் நோயின் பாதிப்பிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வெளியே வரலாம்.



சோம்பேறித்தனமாக எந்நேரமும் படுத்தே இருக்காமல் உடலுக்கு எப்பொழுதும் வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆரம்பத்திலேயே இந்நோயை கண்டுபிடித்துவிட்டால் தகுந்த சிகிச்சைகளை உடனடியாக ஆரம்பித்து நோயின் தீவிரத்தைக் குறைக்கலாம்.

பழைய விஷயங்கள் ஞாபகத்துக்கு வரவில்லையே என்று நினைத்து சலிப்படைந்து அதை அப்படியே விட்டுவிடக் கூடாது. இரவு நாம் படுக்கப் போவதற்குள் எப்படியும் அதை யோசித்து திரும்பத் திரும்பக் கொண்டுவந்து பழைய விஷயத்தை கண்டுபிடித்து விடவேண்டும்.

மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். 100 வயதிலும் நல்ல நினைவாற்றலுடன் வாழலாம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. எனவே இந்நோயின் பாதிப்பு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வது உங்கள் கையிலும், உங்கள் குடும்பத்தினர் கையிலும்தான் உள்ளது.

## தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்காக

ஓராண்டு பாடத்திட்டங்கள் கிட்டத்தட்ட முடிந்து, இப்போது முழு ஆண்டு தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. ஒருசில வகுப்புகளுக்கு முழு ஆண்டு தேர்வுகள் தொடங்க இருக்கின்றன. இந்நிலையில் பாடம் நடத்த நடத்த படித்து புரிந்து கொள்ளும் மாணவர்களுக்கு மத்தியில், பாடங்களை இறுதியில் படித்து கொள்ளலாம் என நினைக்கும் மாணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதில் சிலர், தாங்கள் நினைத்தபடியே இறுதியில் ஒட்டுமொத்தமாக படித்து 'பாஸ்' மார்க் வாங்குவதுடன், ஒருசிலர் கணிசமான மதிப்பெண்களை பெறுகிறார்கள். அத்தகைய மனபக்குவம் கொண்ட மாணவர்களாக நீங்கள் இருந்தால், இந்த செய்தி தொகுப்பு உதவியாக இருக்கும். தேர்வு நெருங்கிய இறுதி நேரத்தில், எப்படி பாடங்களை படிப்பது, எப்படி தேர்வுக்கு தயாராகுவது என்பதை அறிந்து கொள்வோம்.

### 1. கால அட்டவணை

பரீட்சைக்கு குறுகிய காலம் இருக்கும் போது கால அட்டவணை மிகமிக முக்கியமானது. என்ன தேர்வு முதலில் வர இருக்கிறது, அந்த தேர்வுக்கான பாடத்தின் முதல் பகுதி, கடைசி பகுதி, அதிக மதிப்பெண்கள் கிடைக்கும் பகுதி என பாடத்திட்டத்தை நீங்களே பிரித்தெடுத்து அதற்கு ஏற்ப கால அட்டவணையை தயார் செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, கால அட்டவணைக்கு ஏற்ப பாடங்களை படித்து, தேர்வுக்கு தயாராக வேண்டும்.

### 2. வினா வகை

குறுவினா, மல்ட்டிபிள் சாய்ஸ் உள்ளிட்ட தேர்வு வினாக்களை புரிந்து கொள்ள வேண்டும். என்ன வகையான வினாக்கள், எப்படிப்பட்ட அமைப்பை நமது பாடம் கொண்டுள்ளது என்பதை புரிந்து கொண்டு அதில் அதிக மதிப்பெண் பெறும் முறையில் படிக்க வேண்டும்.



### 3. துறை ரீதியாக தயாராகுதல்

நீங்கள் படிக்கும் துறை சார்ந்து தேர்வுக்கு தயாராக வேண்டும். வரலாறு, உயிரியல், மொழி சார்ந்த பாடங்களை மனப்பாடம் செய்து தேர்வுக்கு தயாராக வேண்டும். அரசியல், விஞ்ஞானம், பொறியியல் போன்ற பாடங்களை நன்கு புரிந்து கொண்டு தயாராக வேண்டும். கணிதம், வணிகவியல் போன்ற பாடங்களை தீர்வு காணும் வகையில் படிக்க வேண்டும்.

### 4. அதிக முக்கியத்துவத்தை உணருதல்

பாடத்திட்டத்தில் எந்த பகுதியை படித்தால் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும், எந்த பகுதியில் அதிக கேள்விகள் வரும் என்பதை புரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு தேர்வுக்கு தயாராக வேண்டும்.

### 5. உணவும், உறக்கமும்...

உணவும் உறக்கமும் இரு கண்கள் என்று நினைத்துக் கொண்டு அளவோடு உண்டு உறங்குவது தேர்வு பயிற்சிக்கு மிகமிக முக்கியமானது. அதிகம் உண்டால் தேர்வின் போது தூக்கம் வரும். நீண்ட நேரம் விழித்திருந்தாலும் இதே பிரச்சினை தொடரும். எனவே அளவோடு உணவை உட்கொள்ள வேண்டும். எளிதில் செரிமானமாகும் உணவை தேர்வு செய்ய வேண்டும். கிரீன் டீ, சாக்லெட்டுக்கள் போன்றவற்றை அவ்வப்போது படிக்கும் நேரத்தில் சாப்பிட்டால் உற்சாகத்துடன் படிக்கலாம்.

## இந்தியாவில் அறிமுகமானது யமஹா FZ-S Fi ஹைப்ரிட் பைக்



யமஹா நிறுவனம் FZ-S Fi ஹைப்ரிட் பைக்கை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது.

நாட்டில் முதல் முறையாக அறிமுகமாகியுள்ள 150cc திறன் கொண்ட இந்த பைக்கின் விலை ₹1.45 லட்சமாக (Ex-Showroom) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

யமஹா FZ-S Fi ஹைப்ரிட் பைக் ரேசிங் ப்ளூ மற்றும் சியான் மெட்டாலிக் கிரே ஆகிய இரண்டு வண்ணங்களில் விற்பனைக்கு கிடைக்கிறது.

இந்த மோட்டார் சைக்கிள் 149cc ப்ளூ கோர் எஞ்சின் மூலம் இயக்கப்படுகிறது. இந்த பைக் என்ஜின் 7,250 ஆர்.பி.எம். இல் 12.2 குதிரைத்திறனையும் 5,500 ஆர்.பி.எம். இல் 13.3 Nm டார்க் விசையையும் வெளிப்படுத்தும்.



இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## வாராப்பூரில் வைரத்தேர் திருவிழா



**புதுக்கோட்டை, மார்ச் 17:**
ஆலங்குடி அருகே வாராப்பூரில் உள்ள பெரிய அய்யனார் கோவிலில் வைரத்தேர் திருவிழா விமர்சையாக நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே வாராப்பூர் பெரிய அய்யனார், பாளையடி கருப்பண்ண சுவாமி கோவிலின் மாசித் திருவிழா, 7ம் தேதி காப்பு கட்டுதலுடன் துவங்கியது. தினமும் மண்டகப்படி நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன.

கோவிலின் முக்கியத் திருவிழாவான மாசி வைர தேரோட்டத் திருவிழா நேற்று நடந்தது.

மா, பலா, வாழை என முக்கனிகளால் அலங்கரிக்கப்பட்ட தேரில் சுவாமி வீற்றிருக்க, வாராப்பூர் மற்றும் சுற்றுவட்டார 18 கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேர் இழுத்தனர்.

கோவிலைச் சுற்றி நான்கு வீதிகளிலும் வைரத்தேர் பவனி வந்தது. அப்பகுதியை சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சுவாமியை வழிபட்டுச் சென்றனர். இவ்விழாவில், செம்பட்டிவிடுதி போலீசார், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## முதல்வர் ஸ்டாலினை திருநங்கைகள் சந்தித்து நன்றி



உயர் கல்விக்கு உதவும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம் திருநங்கைகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று தமிழக பட்ஜெட்டில் அறிவித்ததற்காக முதல்வர் ஸ்டாலினை திருநங்கைகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

## திண்டிவனம் சிப்காட்டில் பணிபுரிய செஞ்சியில் வேலைவாய்ப்பு முகாம்

**திண்டிவனம்,மார்ச் 17:**
திண்டிவனம் சிப்காட்டில் பணிபுரிய செஞ்சியில் வேலைவாய்ப்பு முகாம் நடந்தது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகில் உலகத் தரம்வாய்ந்த சிப்காட் காலணி தயாரிக்கும்தொழிற்பேட்டையில் வேலைவாய் பிற்கான தேர்வு செய்வதற்காக தகவல் வெளியானதை அடுத்து ஞாயிற்றுக்கிழமை செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஏராளமான இளைஞர்கள் டிப்ளமோ மற்றும் டிகிரி படித்தோர் உள் மாவட்டம் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்தும் வந்து கலந்து கொண்டனர்.



இந்த வேலை வாய்ப்பு முகாமினை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் செஞ்சி ஒன்றியசேர்மேன் விஜயகுமார் சிப்காட் துறைசார்ந்த நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

அகரம்ராமதாஸ்

## நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த மாரத்தான் ஓட்டம்



நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த மாரத்தான் ஓட்டம் சென்னை தீவுத்திடலில் நடந்தது. அமைச்சர் சேகர்பாபு துவக்கி வைத்தார்.இதில் 1500 க்கும் மேற்பட்ட பள்ளி/கல்லூரி, மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

## அரசு கல்லூரி மாணவியருக்குப் பாராட்டு



**அறந்தாங்கி,மார்ச் 17:**
அறந்தாங்கி பெருநாவலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும், புதுக்கோட்டை மாவட்ட இணையக்குற்றத்தடுப்புப்பிரிவும் இணைந்து நடத்திய இணையக்குற்றத்தடுப்பு விழிப்புணர்வு பேச்சு, கட்டுரை மற்றும் முழக்கம் எழுதும் போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்ற மாணவியர் புதுக்கோட்டையில் நடந்த விழாவில் பரிசுகள் பெற்று வந்தனர். அவர்களைக் கல்லூரி முதல்வர் முனைவர் ம. துரை அவர்கள் பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

## புனித வியாகுல அன்னை தேர் பவனி



நாகர்கோவில் அடுத்த ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் புனித வியாகுல அன்னை தேர் பவனி நடந்தது.

## ரவுசு மணி

‘மன்னித்துவிடு’ அனைத்து விரோதங்களையும் தீர்த்து விடும் அற்புதமான சொல்



கயல்விழி
செங்கல்பட்டு

## உயர்நிலைப் பள்ளியில் உள்ள தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழா




**வேலூர்,மார்ச் 17:**
பேரணாம்பட்டு எம்ஜிஆர் நகர் பகுதியில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப் பள்ளியில் உள்ள தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் வால்டர் தலைமையில் நடைபெற்றது.

உதவி தலைமை ஆசிரியர் ஜெயந்தி முன்னிலை வகித்தார். பள்ளி ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வைத்து அதில் வெற்றி பெற்றவர்களுக்கும், மாறுவேடம் அணிந்து நடனமாடிய மாணவ, மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

இதில் ஆசிரியர்கள் மலர்விழி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கச்சத்தீவு திருவிழாவில் 7,000 பேர் பங்கேற்பு



**ராமேஸ்வரம்,மார்ச் 17:**
இந்தியஇலங்கைகடற்படையினர் பாதுகாப்புடன் நடந்த கச்சத்தீவு சர்ச் திருவிழாவில் இரு நாட்டை சேர்ந்த 7,000 பேர் பங்கேற்றனர்.

ராமேஸ்வரத்தில் இருந்து 21 கி.மீ.,ல் பாக்ஜலசந்தி கடலில் அமைந்துள்ள கச்சத்தீவு அந்தோணியார் சர்ச் திருவிழா மார்ச் 14ல் கொடியேற்றத்துடன் துவங்கியது. அன்றிரவு சர்ச் வளாகத்தில் சிலுவைப்பாதை திருப்பலி பூஜை நடந்தது.

நேற்று முன்தினம் காலை சிவகங்கை, யாழ்பாணம் மறைமாவட்ட பிஷப்கள் லூர்து ஆனந்தம், ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆகியோர் திருவிழா சிறப்பு திருப்பலி பூஜை நடத்தினர். சிங்கள மொழியில் கொழும்பு பாதிரியார் சிஷ்வாண்தே பூஜை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து இருநாட்டு பாதிரியார்கள், பக்தர்களின் கூட்டு பிரார்த்தனை நடந்தது. பின் திருவிழா கொடி இறக்கியதும் விழா நிறைவு பெற்றது.

விழாவில் இந்திய, இலங்கை பக்தர்கள் 7000 பேர் பங்கேற்றனர். இருநாட்டு கடற்படை, கடலோர காவல்படையினர் கப்பலில் கூட்டு ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

## சபரிமலை அய்யப்பன் கோவிலில் படி பூஜை



சபரிமலை அய்யப்பன் கோவிலில் நேற்று நடந்த படி பூஜை.

## ஆஞ்சநேயருக்கு 1008 லிட்டர் பால் அபிஷேகம்



நாமக்கல் ஆஞ்சநேயருக்கு பங்குனி மாத முதல் ஞாயிற்றுக்கிழமையான நேற்று 1008 லிட்டர் பால் அபிஷேகம் நடந்தது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

## மதுரையில் நியூசிலாந்து இரண்டாவது கண்காட்சி



மதுரையில் நியூசிலாந்து இரண்டாவது கண்காட்சியை நேற்று ரோட்டரி கவர்னர் ராஜா கோவிந்தசாமி துவக்கி வைத்தார்.

## அம்மன் கோவிலில் அம்மயிறக்க நிகழ்வு



குமரி மாவட்டம் இட்டகவேலி முடிப்பரை நீலகேசி அம்மன் கோவிலில் நேற்று அம்மயிறக்க நிகழ்வு நடந்தது.

## இந்திய– இலங்கை பாதிரியார்கள் திருவிழா திருப்பலி சிறப்பு பூஜை



இலங்கை கச்சத்தீவு அந்தோணியார் சர்ச் வளாகத்தில் சிவகங்கை மறைமாவட்ட பிஷப் லூர்து ஆனந்தம் தலைமையில் இந்திய- இலங்கை பாதிரியார்கள் திருவிழா திருப்பலி சிறப்பு பூஜை நடத்தினர்.

## கருக்கல்வாடி கண்ணனூர் மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழா



சேலம் மாவட்டம் கருக்கல்வாடி கண்ணனூர் மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழா நேற்று நடந்தது.

# 25 ஆயிரம் மாணவிகள், 'காவல் உதவி' செயலியை பதிவிறக்கம் செய்து சாதனை

**திருச்செங்கோடு, மார்ச் 17:**

திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கல்லூரியில், 'காவல் உதவி' செயலியை 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் ஒரே நேரத்தில் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்தனர்.

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், ஆபத்து ஏற்படும் நிமிடத்திலேயே காவல்துறைக்கு தகவல் கொடுக்க உதவும் வகையிலும், பெண்களுடன் எப்பொழுதும் காவல்துறை பாதுகாப்பாக இருக்கும் என்பதை உறுதி செய்யும் விதமாக 'காவல் உதவி' என்கிற செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயலியை மகளிர் கல்வி வளா கத்தில் சனியன்று நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணன் தலைமை வகித்தார்.




25 ஆயிரம் மாணவிகள் ஒரே நேரத்தில் பதிவிறக்கம் செய்யும் நிகழ்ச்சி, நாமக்கல் மாவட் டம், திருச்செங்கோடு விவேகானந்தா

கல்வி நிறு வனங்களின் முதன்மை அலுவலர் சொக்கலிங்கம் வரவேற்றார். கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர் சண்முகம், திருச்செங்கோடு துணை காவல் கண்காணிப்பாளர் கிருஷ் ணன் மற்றும் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். 'காவல் உதவி 181' என்ற வடிவத் தில் மாணவிகள் அணிவகுத்து நின்று ஒரே நேரத்தில் காவல் உதவி செயலியை பதிவிறக்கம் செய்தனர்.

அப்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம், திருச்செங்கோட்டில் அமைக்கப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பாதி வேலை செய்யவில்லையே என கேட்டபோது, சாலை பணிகள் நடந்து வருவதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாலை பணிகள் முடிந்தவுடன் மீண்டும் முழுமையாக இயங்கும், என்றார். காவலர்கள் பற்றாக்குறை என்பது குறித்து கேட்டபோது, மாவட்டத்தை பொருத்தவரை 1400 காவலர்கள் உள்ளனர். இவர்களுக்கான பணிகள் தற்போது கூடுதலாக உள்ளது என்பதை தவிர வேறு பற்றாக்குறை என்பது எதுவும் இல்லை, என்றார்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### இந்திய ராணுவத்தில் ஆள்சேர்ப்பு - ஆன்லைன் விண்ணப்பங்கள் வரவேற்பு



இந்திய ராணுவத்தில் நடப்பாண்டுக்குரிய ஆள்சேர்ப்புக்கான அறிவிக்கை வெளியாகியுள்ளது. ராணுவத்தின் ஆள்சேர்ப்பு அலுவலக சென்னை தலைமையகம் சார்பில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக www.joinindianarmy.nic.in என்ற அதிகாரபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் கடலூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்கள், புதுவை யூனியன் பிரதேசத்திலிருந்து புதுச்சேரி மாவட்டம் மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள திருமணமாகாத ஆண்கள், பெண்கள் ஆகியோர், தங்கள் விண்ணப்பங்களை இந்த இணைய தளத்தின்மூலமாக ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்.

அக்னிவீரர் பொதுப் பணி, அக்னிவீரர் தொழில்நுட்பம், அக்னிவீரர் எழுத்தர் / ஸ்டோர்கீப்பர் தொழில்நுட்பம், அக்னிவீரர் டிரேட்ஸ்மேன் (10 ஆம் வகுப்பு தேர்ச்சி), அக்னிவீரர் டிரேட்ஸ்மேன் (8 ஆம் வகுப்பு தேர்ச்சி), சிப்பாய் நிலையிலான தொழில்நுட்ப நர்சிங் உதவியாளர், சிப்பாய் நிலையிலான பார்மா, அக்னிவீர் பொதுப் பணி (ராணுவ மகளிர் காவல்) ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தேர்வர்கள், அக்னிவீரர் பணியிடத்துக்கு தங்கள் தகுதியின் அடிப்படையில் ஒரேநேரத்தில் ஏதேனும் இரண்டு பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம். பொதுத்தகுதித்தேர்வு ஆன்லைன் முறையில் தமிழ் உட்பட 13 மொழிகளில் நடத்தப்படும். ஐடிஐ, டிப்ளமோ முடித்தவர்கள் மற்றும் என்சிசி தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு இதில் போனஸ் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான பதிவு மார்ச் 12, 2025 அன்று தொடங்கி ஏப்ரல் 10, 2025 அன்று முடிவடையும். ஜூன் 2025-ல் ஆன்லைன் எழுத்துத் தேர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நுழைவுச் சீட்டுகள் ஆன்லைனில் வழங்கப்படும். அவற்றைப்பெற விண்ணப்பதாரர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தையும், அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலையும் தொடர்ந்து பார்த்துவருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏதேனும் உதவிக்கு விண்ணப்பதாரர்கள் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் அமைந்துள்ள இந்திய ராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகம் (தலைமையகம்) (அஞ்சல் குறியீடு- 600009) மற்றும் தொலைபேசி எண் 044-25674924 ஆகியவற்றைத் தொடர்பு கொள்ளலாம்.

ஆள்சேர்ப்பு நடைமுறை முழுமையாக தானியங்கி முறையில், நியாயமான மற்றும் வெளிப்படையான வகையில் நடைபெறுகிறது. ஏதேனும் நபர்கள் விண்ணப்பதாரர்களை அணுகி அவர்களை தேர்ச்சி பெற அல்லது பணியில் சேர உதவ முடியுமென்று கூறினால், அது மோசடியாகும். அத்தகைய நபர்களிடமிருந்து விண்ணப்பதாரர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. சொந்த கடின உழைப்பு மற்றும் போட்டி தேர்வுக்கு முறையாக தயாராதல் மட்டுமே அவர்களின் தேர்வை உறுதி செய்யும். இதில் இடைத்தரகர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை. அத்தகைய இடைத்தரகர்கள், முகவர்கள் அல்லது முகமைகளால் பணிநாடுநர்கள் ஈர்க்கப்பட வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுப்பள்ளி மாணவர் உயிரிழப்பு தலைமையாசிரியர் இடமாற்றம்

**நாமக்கல், மார்ச் 17:**

ராசிபுரத்தில் அரசுப்பள்ளியில் மாணவர் உயிரிழந்த சம்பவத்தில், அப்பள்ளியின் தலைமையாசிரியர் உட்பட 2 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் சிவானந்தா சாலை அரசு மேல்நிலைப்பள்ளியில் கடந்த பிப்.26 ஆம் தேதியன்று, மாணவர்களுக்கு இடையே நடந்த மோதலில் 9 ஆம் வகுப்பு மாணவர் கவின்ராஜ் உயிரிழந்தார். மற்றொரு மாணவர் கைது செய்யப்பட்டு சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் அடைக்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக தமிழக பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் உத்தரவின் பேரில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி விசாரணை நடத்தினார். அவரது அறிக்கையின் அடிப்படையில் தலைமையாசிரியர், வகுப்பு ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டது. இதையடுத்து, அப்பள்ளியின் தலைமையாசிரியர் வரதராஜன் செல்லப்பம் பட்டி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு இடமாற்றம் செய்யப் பட்டார். மேலும், அறிவியல் பாட பட்டதாரி ஆசிரியர் ராஜேந்திரன் சித்தாளந்தூர் அரசு மேல்நிலைப்பள்ளிக் கும், தமிழ் பாட பட்டதாரி ஆசிரியர் சோமசுந்தரம், மறுநியமனத்திலிருந்து விடுவிக்கப்பட்டார். இதற்கான உத்தரவை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பிறப் பித்துள்ளார்.

## பஞ்சு பாரம் ஏற்றி வந்த லாரியில் தீ விபத்து

**நாமக்கல், மார்ச் 17:**

வெப்படை அருகே பஞ்சு பாரம் ஏற்றி வந்த லாரியில் ஏற்பட்ட தீ விபத்தில், லாரி முற்றிலும் எரிந்து சேதமானது. நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் ஒன்றியம், படைவீடு, சாமுண்டூர் பகுதியைச் சேர்ந்தவர் செல்வராஜ் (53). இவர் தனக்கு சொந்தமான லாரியில் வெப்படை பகுதியில் இயங்கி வரும் தனியார் நூற்பாலையிலிருந்து பஞ்சு மூட்டைகள் ஏற்றிக்கொண்டு, பாதரை அருகே உள்ள குடோனுக்கு கொண்டு செல்வதற்காக சனியன்று சென்று கொண்டிருந்தார். பாதரை எனும் பகுதி அருகே வந்தபோது, லாரியில் ஏற்றப்பட்டு இருந்த பஞ்சு மூட்டைகள் சாலையின் குறுக்கே சென்ற மின் கம்பியில் உரசியது. இதனால் பஞ்சு மூட்டை தீப்பற்றி எரிந்தது. ஆனால் தீப்பற்றியது தெரியாமல் செல்வராஜ் லாரியை ஓட்டிக்கொண்டு இருந்தார். பின்னால் வந்த வாகன ஓட்டிகள் லாரியில் தீப்பிடித்து எரிகிறது என்று சொன்னதும், பதறிப்போய் அப்பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தின் அருகே லாரியை நிறுத்தினார். அதற்குள் லாரி முழுவதும் கொழுந்துவிட்டு எரிந்தது. உடனே அவர் கீழே குதித்து உயிர் தப்பினார். இதுகுறித்து தகவலறிந்த வெப்படை தீயணைப்புத் துறையினர், சம்பவ இடத் துக்கு வந்து 3 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். எனினும் பஞ்சு மூட்டையுடன் லாரி முழுவதும் எரிந்து சேதமானது. மொத்தம் ரூ.10 லட்சத்திற்கு நஷ்டம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதுகுறித்து வெப்படை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விபத்தில் கணவர் உயிரிழப்பு மனைவி, குழந்தை படுகாயம்

**சேலம், மார்ச் 17-**

சங்ககிரி பழைய பேருந்து நிலையம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் கணவர் உயிரிழந்த நிலையில், படுகாயமடைந்த மனைவி மற்றும் குழந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தருமபுரி மாவட்டம், பெரும்பாலை, சமத்தாள் பகுதி யைச் சேர்ந்தவர் கூலித் தொழிலாளி அம்சராஜ் (30). இவரது மனைவி சரண்யா (23), மகன் தனுஷ் (2). மூவ ரும் தருமபுரியிலிருந்து திண்டுக்கல் மாவட்டம், கொடை ரோட்டில் சாலையோரம் தள்ளுவண்டியில் சிப்ஸ் வியா பாரம் செய்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். சங்ககிரி பழைய பேருந்து நிலை யம் அருகே சென்றபோது, ஈரோட்டிலிருந்து சேலம் நோக்கி வந்த லாரி, இவர்கள் மீது மோதியது.

இதில் அம்சராஜ் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். பலத்த காயமடைந்த அவரது மனைவியும், குழந்தையும் மீட்கப் பட்டு சங்ககிரி அரசு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இதுகுறித்து சங்ககிரி காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் மகளிர் தின கருத்தரங்கம்

**கோவை, மார்ச் 17:**

சர்வதேச மகளிர் தினத்தை முன் னிட்டு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மனித சங்கிலி இயக் கம் மற்றும் மகளிர் கருத்தரங்கம் சனியன்று நடைபெற்றது.

அனைத்து அலுவலகங்களி லும் விசாகா கமிட்டி அமைக்க வேண் டும். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்ககைளை முன் வைத்து தமிழ்நாடு முழுவதும் அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில், மனித சங்கிலி மற்றும் கருத்தரங்கம் நடை பெற்று வருகிறது.


இதன்ஒருபகு தியாக, கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மனித சங்கிலி இயக்கமும், தாமஸ் கிளப்பில் கருத் தரங்கமும் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக்குழு பொறுப்பா ளர் வி.சாந்தி, அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ச.ஜெகநாதன் ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட துணைத்தலைவர் ஆர். மாலதிராணி வரவேற்றார். இதில், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாவட்டத் தலைவர் ஜோதிமணி துவக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ப. செந்தில்குமார் சிறப்புரையாற்றினார். தமிழ் நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் ப.நடராஜன் மற்றும் நிர்வாகிகள், ஏ.பிரகலதா, நிர்மலா, ஆர்.ரவி ஆகியோர் வாழ்த்திப் பேசி னர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் வி. சோமசுந்தரம் நிறைவுரையாற்றினார். முடிவில், எம்.நதியா நன்றி கூறினார்.

தருமபுரி இதேபோன்று, சிஐடியு தரும புரி மாவட்டக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு, அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலா ளர் ஏ.தெய்வானை தலைமை வகித்தார். மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் பி.மகேஸ்வரி வரவேற்றார். மாவட்டத் தலைவர் எம். சுருளி நாதன் ஒருங்கிணைத்தார். 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்' என்ற தலைப்பில் முன்னாள் மாநில துணைத்தலைவர் கோ.பழனியம்மாள், 'கனவுகள் மெய்பட காண்போம்' என்ற தலைப்பில் மாநில துணைப் பொதுச்செயலாளர் அண்ணா குபேரன் ஆகியோர் கருத்துரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் அன்பழகன், இணைச் செயலாளர் கே.தேவகி, மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் உட் பட பலர் கலந்து கொண்டனர்.

## உதவி லோகோ பைலட் பணிக்கான தேர்வு மைய சர்ச்சை: ரயில்வே தேர்வாணையம் விளக்கம்

**கோவை, மார்ச் 17:**

ரயில்வே உதவி லோகோ பைலட் பணிக்கு கணிப்பொறி சார்ந்த தேர்வு மையங்கள் வெளி மாநிலங்களில் ஒதுக்கியது தொடர்பாக சர்ச்சை எழுந்தது.



இது பற்றி ரயில்வே தேர்வாணையம் விளக்கம் அளித்துள்ளது. அதில் கூறியிருப்பதாவது; ரயில்வே உதவி லோகோ பைலட் பணிக்கு விண்ணப்பித்த தேர்வர்களுக்கு முடிந்த அளவிற்கு சொந்த மாநிலங்களிலேயே தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த பதவிக்கான கணிப்பொறி சார்ந்த முதல் கட்ட தேர்வு பல கால முறைகளில் நடந்தது. ஒவ்வொரு கால முறைக்கும் வேறு, வேறு கேள்வித்தாள்கள் வழங்கப்பட்டன. தேர்வர்கள் வசதிக்கென இரண்டாம் கட்ட தேர்வு ஒரே கால முறையில் , ஒரே மாதிரியான பொதுவான கேள்வித்தாளுடன் நடத்தப்படுகிறது. இதன் காரணமாக தேர்வர்களுக்கு முடிந்த அளவிற்கு சொந்த மாநிலங்களிலேயே தேர்வு மையங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிலருக்கு மட்டும் தவிர்க்க முடியாமல் அருகிலுள்ள மாநிலங்களில் தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் மார்ச் 17 , 18 ஆகிய நாட்களில் ரயில்வே பாதுகாப்பு படை பணிகளுக்கான தேர்வுகள் முடிந்தவுடன் மார் 19 , 20 ஆகிய நாட்களில் உதவி லோகோ பைலட் பணிக்கு தேர்வுகள் நடக்கின்றன. இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு சொந்த மாநிலத்தில் குறிப்பிட்ட நகரத்திலுள்ள ஒரே தேர்வு மையங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை ரயில்வே தேர்வாணையத்தில் இரு பதிவிகளுக்கும் விண்ணப்பித்த 15,000 விண்ணப்பதாரர்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இது மாதிரியான ஒதுக்கீடு இந்தியாவிலுள்ள 21 ரயில்வே தேர்வு ஆணையங்களிலும் கடைபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த முறை நடந்த இரண்டாம் கட்ட கணிப்பொறி சார்ந்த தேர்வுகளுக்கும் இதே ஒதுக்கிடு முறை தான் கடைபிடிக்கப்பட்டது. இந்த தேர்வுகளில் பங்கேற்ற வழக்கத்திலுள்ளபடி பட்டியலின மாணவர்களுக்கு இலவச பயண பாஸ்களும் வழங்கப்பட்டுள்ளன.

## கடலூரில் சிறுதானிய விழா: போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கலெக்டர் சிபி ஆதித்யா பரிசு

**கடலூர், மார்ச் 17:**

சிறுதானிய விழாவினை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பரிசுகளை வழங்கினார்.



2023 ம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் சிறுதானிய ஆண்டுவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, கடலூர் மாவட்டத்தில் கடலூர், அண்ணாகிராமம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, காட்டுமன்னார்கோயில், குமராட்சி, கீரப்பாளையம், மேல்புவனகிரி, பரங்கிப்பேட்டை, விருத்தாசலம், கம்மாபுரம், நல்லூர், மங்களூர், ஸ்ரீமுஷ்ணம் ஆகிய வட்டாரங்களில் உள்ள சத்துணவு பணியாளர்களுக்கு மாவட்ட அளவிலான சிறுதானிய சமையல் போட்டி 13.3.2025 அன்று கடலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. கடலூர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலக வளாகத்தில் 13.3.2025 அன்று மாவட்ட அளவில் சிறுதானியம் குறித்த விழிப்புணர்வு வினாடி வினா போட்டியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த 39 பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கலெக்டர், சிறுதானிய வகை உணவுகள் குறித்த கண்காட்சி அமைக்கப்பட்டிருந்ததை பார்வையிட்டு, மாவட்ட அளவில் நடைபெற்ற சிறுதானிய சமையல் போட்டியில் கடலூர் வட்டார சத்துணவு பணியாளர்கள் முதலிடமும், அண்ணாகிராமம் வட்டார சத்துணவு பணியாளர்கள் இரண்டாமிடமும், குறிஞ்சிப்பாடி மற்றும் கம்மாபுரம் வட்டார சத்துணவு பணியாளர்கள் மூன்றாமிடம் பெற்று வெற்றி பெற்றவர்களுக்கும், மாவட்ட அளவில் சிறுதானிய விழிப்புணர்வு வினாடி வினா போட்டியில் காட்டுமன்னார்கோயில் பி.ஆர்.ஜி அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவன் முதலிடமும், கோ.ஆதனூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவி எம்.வைஷ்ணவி இரண்டாமிடமும், கடலூர் ஸ்ரீவரதம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவி செ.பு. அஷ்யாஸ்ரீ மூன்றாமிடமும் பெற்று வெற்றி பெற்றவர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) மீனா, மாவட்ட கல்வி அலுவலர் ஞானசங்கரன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# யுனெஸ்கோ அங்கீகார உத்தேச பட்டியலில் 6 இந்திய சின்னங்கள்



**புதுடெல்லி, மார்ச் 17:**

யுனெஸ்கோ பாரம்பரிய சின்ன அங்கீகாரத்துக்கான உத்தேச பட்டியலில் புதிதாக 6 இந்திய வரலாற்று சின்னங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.

ஐ.நா. சபையின் யுனெஸ்கோ அமைப்பு, உலகம் முழுவதும் உள்ள பாரம்பரிய சின்னங்களுக்கு அங்கீகாரம் வழங்கி வருகிறது. இதன்படி வனம், மலை, ஏரி, பாலைவனம், நினைவு சின்னம், கட்டிடம் உள்ளிட்டவற்றுக்கு பாரம்பரிய சின்னம் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் யுனெஸ்கோ அமைப்பால் உலகம் முழுவதும் 1,223 பாரம்பரிய சின்னங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் இந்தியாவில் மட்டும் 43 பாரம்பரிய சின்னங்கள் உள்ளன. கடந்த 1998-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரை 56 இந்திய வரலாற்று சின்னங்களுக்கு அங்கீகாரம் கோரப்பட்டு நிலுவையில் உள்ளன. இவை யுனேஸ்கோவின் உத்தேச பட்டியலில் உள்ளன. இந்த சூழலில் புதிதாக 6 இந்திய வரலாற்று சின்னங்களும் தற்போது உத்தேச பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளன.

தெலங்கானாவின் நாராயணன்பேட்டை மாவட்டம், முதுமல் பகுதியில் சுமார் 1,200-க்கும் மேற்பட்ட பெருங்கற்கால நெடுங்கற்கள் உள்ளன. இது யுனெஸ்கோ பாரம்பரிய சின்ன அங்கீகாரத்துக்கான உத்தேச பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதேபோல சத்தீஸ்கரில் உள்ள காங்கேர் தேசிய பூங்கா, பல்வேறு மாநிலங்களில் அமைந்துள்ள அசோகர் கால கல்வெட்டுகள், மத்திய பிரதேசத்தின் முரைனா மாவட்டத்தில் அமைந்துள்ள சவுசத் யோகினி கோயில்கள், வடமாநிலங்களில் அமைந்துள்ள குப்தர் கால கோயில்கள், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசத்தில் உள்ள பண்டேலா கோட்டைகள் ஆகியவையும் யுனெஸ்கோ உத்தேச பட்டியலில் சேர்க்கப்பட்டு இருக்கிறது. இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

யுனெஸ்கோ பாரம்பரிய சின்ன அங்கீகாரத்துக்காக முதலில் உத்தேச பட்டியலில் பெயர் சேர்க்க வேண்டும். அதன்பிறகு பரிந்துரை குழு, ஆலோசனை குழு, உலக பாரம்பரிய கமிட்டி என அடுத்தடுத்து பல்வேறு நிலைகளை தாண்ட வேண்டும். இதற்கு பல ஆண்டுகள் ஆகலாம்.

புதிதாக 6 வரலாற்று சின்னங்களை யுனெஸ்கோ உத்தேச பட்டியலில் சேர்த்துள்ளோம். இவற்றையும் சேர்த்து 62 இந்திய பாரம்பரிய சின்னங்கள் நிலுவையில் இருக்கின்றன. உலகம் முழுவதும் சுமார் 181 நாடுகளை சேர்ந்த 1,756 வரலாற்று சின்னங்கள் பரிசீலனையில் இருக்கிறது.

இவ்வாறு மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## முஸ்லிம்களுக்கு ஒப்பந்த பணிகளில் 4% இடஒதுக்கீடு: கர்நாடக அரசின் முடிவுக்கு பாஜக கடும் எதிர்ப்பு



**புதுடெல்லி, மார்ச் 17:**

*கர்நாடக அமைச்சரவை கூட்டம் முதல்வர் சித்தராமையா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் அரசின் ஒப்பந்த பணிகளில் முஸ்லிம்களுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்திருத்த மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன் மூலம் எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு ஒப்பந்த பணிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பதை போல, முஸ்லிம்களுக்கு 2பி பிரிவில் ரூ.1 கோடி வரையிலான ஒப்பந்த பணிகளில் 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.*

*பாஜக எதிர்ப்பு: இதுகுறித்து பாஜக மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் கூறுகையில், “தனித் தொகுதி, தனி பல்கலைக்கழகம் ஆகியவை நாட்டில் பிரிவினைக்கு வழிவகுத்திருக்கின்றன. அதுபோல மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்குவது பிரிவினையை அதிகரிக்கும். வாக்கு வங்கியை மனதில் வைத்து காங்கிரஸ் இந்த முடிவை எடுத்துள்ளது.*

*ராகுல் காந்தியின் விருப்பப்படி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது.சட்டத்தையும்மக்களின் வரிப்பணத்தையும் காங்கிரஸ் தவறாக பயன்படுத்துகிறது. நாட்டின் பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கு தாரை வார்ப்பதை அனுமதிக்க முடியாது” என்றார்.*

*பெங்களூரு பாஜக எம்பி தேஜஸ்வி சூர்யா கூறுகையில், “தேர்தல் அரசியலுக்காக காங்கிரஸ் இந்த முடிவை எடுத்துள்ளது. மத அடிப்படையிலான இடஒதுக்கீட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. கர்நாடக அரசின் இந்த முடிவு மத மாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. அரசின் அதிகாரத்தையும், பொது வளங்களையும் வாக்கு வங்கி அரசியலுக்காக காங்கிரஸ் தவறாகப் பயன்படுத்துகிறது. நாட்டின் பொருளாதாரத்தை அரசியல் தேவைக்காக விளையாட்டு மைதானமாக காங்கிரஸ் மாற்றிவிட்டது” என்றார். கர்நாடக அரசு விளக்கம்: இதற்கு கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார், “கர்நாடக அரசின் முடிவை எதிர்க்கட்சியினர் மடை மாற்றுகின்றனர்.*

*இந்த இட ஒதுக்கீடு முஸ்லிம்களுக்கு மட்டும் வழங்கப்படவில்லை. ஒப்பந்த பணிகளில் எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி பிரிவினருக்கு வழங்கப்பட்டதைப் போல மத சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து சிறுபான்மையினரும் பலன் அடைவார்கள்” என விளக்கம் அளித்துள்ளார்.*

## வாக்காளர் பிரச்சினை குறித்து ஏப்.30-க்குள் ஆலோசனை கூறலாம்: கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் அழைப்பு




**புதுடெல்லி, மார்ச் 17:**

*வாக்காளர் பிரச்சினை குறித்த ஆலோசனைகளை அரசியல் கட்சிகள் வரும் ஏப்ரல் 30-ம் தேதிக்குள் தெரிவிக்கலாம் என தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.*

*மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஒருவரின் வாக்காளர் அடையாள அட்டை எண்ணும், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் வாக்காளர் அடையாள அட்டை எண்ணும் ஒன்றாக இருந்தது தெரியவந்தது. இதை சுட்டிக்காட்டிய மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, போலி வாக்காளர்கள் உள்ளதாக குற்றம்சாட்டினார்.*

*இதுகுறித்து தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், “வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 2 பேருக்கு ஒரே எண் கொண்ட வாக்காளர் அடையாள அட்டை இருந்தாலும், அவர்களை போலி வாக்காளர்களாக கருத முடியாது. அவர்களால் 2 இடங்களிலும் வாக்களிக்க முடியாது. தங்களுடைய வாக்குப்பதிவு மையத்தில் மட்டுமே வாக்களிக்க முடியும் எனினும், இதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என கூறப்பட்டிருந்தது. இந்நிலையில், வரும் 18-ம் தேதி மத்திய உள் துறை செயலாளர், சட்டத் துறை செயலாளர் மற்றும் ஆதார் ஆணைய தலைமைச் செயல் அதிகாரி ஆகியோருடன் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ஆலோசனை நடத்த உள்ளார். அப்போது, ஒரே எண் 2 வாக்காளர்களுக்கு ஒதுக்கப்படுவதைத் தவிர்க்க, வாக்காளர் அடையாள அட்டையை ஆதார் எண்ணுடன் இணைப்பதை கட்டாயமாக்குவது குறித்து விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது. இதுதவிர, வாக்காளர் பதிவு அதிகாரிகள் (இஆர்ஓ), மாவட்ட தேர்தல் அதிகாரிகள் (டிஇஓ) அல்லது மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் (சிஇஓ) நிலையிலான, தீர்க்கப்படாத பிரச்சினை கள் குறித்து, அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் வரும் ஏப்ரல் 30-ம் தேதிக்குள் தங்கள் ஆலோசனைகளை தெரிவிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*மேலும், பிரச்சினை க்குரிய வாக்காளர் அடையாள அட்டைகள் கடந்த 2008 மற்றும் 2013-ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் விநியோகிக்கப்பட்டதாகவும் அப்போது பாஜக ஆட்சி யில் இல்லை என்றும் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்திருந்தது.*

## திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் மகளிர் தின மருத்துவ முகாம்




**திருவாரூர், மார்ச் 17:**

திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மு.கிருஷ்ணன் தலைமை வகித்தார், விழாவில் பங்கேற்ற திருவாரூர் முதன்மை மாவட்ட நீதிபதி பி. செல்வ முத்துக்குமாரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

இதில், புதுதில்லியில் நடந்த தேசிய மாணவர் படையின் சிறப்பு முகாமில் கலந்து கொண்ட ஜிஸ்னா டி.கே.அனைத்திந்திய தல் சைனிக் கேம்பில், கேரட் பட்டம் வாங்கிய அக்ஷயா, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் மூலமாக ரூ.1.5 கோடி ஆய்வு நிதியாக பெற்ற பேராசிரியர் விஜயலட்சுமி மற்றும் பேராசிரியர் விசாலட்சுமி, சங்கீதத்துறைக்கு பெரும் பங்காற்றிய பேராசிரியர் பிரேமலதா, நாட்டிய கலைஞர் வடிவழகி, பல்கலைக்கழக மருத்துவர் விஷ்ணுபிரியா மற்றும் பல்கலைக்கழக அலுவலர் சாந்தி ஆகியோருக்கு கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். விழாவில், பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் இரா. திருமுருகன், தேர்வு கட்டுப்பாட்டாளர் பேராசிரியர் சுலோச்சனா சேகர், பேராசிரியர் ரவிக்குமார், பேராசிரியர் சுந்தரவடிவு மற்றும் பல்கலைக்கழக மருத்துவர்கள் விஷ்ணு பிரியா, பிரேம் டேவிஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

பல்கலைக்கழக மருத்துவமனையில், சிறப்பு மருத்துவர்கள் ஆர்.புவனேஸ்வரி மற்றும் நஸ்ரின் பாத்திமா ஆகியோர் பங்கேற்ற பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமில், மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அலுவலர்கள், கிராமப்புற பெண்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# க்ரைம் கார்னர்

## இங்கிலாந்தில் குடியேற உதவுவதாக வாக்குறுதி அளித்து ரூ. 20.46 லட்சம் மோசடி

**காந்திநகர், மார்ச் 17–**

இங்கிலாந்திற்கு குடியேற உதவுவதாக வாக்குறிதி அளித்துவிட்டு ரூ. 20.46 லட்சத்தை ஏமாற்றிய நபரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

குஜராத் மாநிலம் காந்திநகர் மாவட்டம் டஹேகாம் நகரைச் சேர்ந்த பங்கஜ் படேல் என்பவர் அங்கு ஆட்டோமொபைல் தொழில் செய்து வருகிறார். இந்த நிலையில் இவரையும் இவரது மனைவியையும் சந்திக்க உறவினரான தொழிலதிபர் ஹஸ்முக் படேல் வீட்டிற்கு வந்தார். அப்போது அந்த நபர் பங்கஜ் மற்றும் அவரது மனைவி இருவரையும் இங்கிலாந்துக்கு குடியேற உதவுவதாக பொய்யான வாக்குறுதி அளித்தார். மேலும் அங்கு சென்றால் அதிக பணம் சம்பாதிக்கலாம் என ஆசை வார்த்தைகள் கூறி நம்ப வைத்தார்.

பின்னர் ரூ. 32 லட்சத்தை கொடுங்கள் இருவரையும் லண்டனுக்கு அனுப்பி வைக்கிறேன் என உறுதியளித்தார். அப்படியில்லை என்றால் முழுபணமாக இல்லாமல் மாதம் மாதம் பணத்தை டெபாசிட் செய்யுங்கள் எனக்கூறி பணத்தை பெற்றுக்கொண்டார். இதுவரை ஜூலை 2022 முதல் ஜனவரி 2024 வரை பணத்தை டெபாசிட் செய்தனர்.

இதனால் முதற்கட்டமாக ரூ. 6.50 லட்சம் பணத்தை உறவினரிடம் டெபாசிட் செய்தார். பின்னர் பணம் அனைத்தையும் பிரிட்டிஷ் பவுண்டுகளில் மாற்றியதாக கூறி மூன்று நாட்களுக்கு பிறகு ரூ. 3.5 லட்சத்தையும் ரொக்கமாகவும், விசா விற்வாக அசல் ஆவணங்களையும் பெற்றுக்கொண்டார். பின்னர் அந்த உறவினர் பணத்தை எடுத்துக்கொண்டு உங்களுடைய வேலை விஷயமாக லண்டன் செல்வதாக கூறி லண்டனுக்கு சென்றதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் உறவினர் எந்த பதிலும் சரியாக அளிக்காத நிலையில் பணத்தை திருப்பி கேட்டுள்ளார்.

இதனால் உறவினர் மேலும் பொய்யான வாக்குறுதிகளை அளித்து சில போலி ஆவணங்களை காட்டி மேலும் ரூ. 7.5 லட்சத்தையும் பெற்றுக்கொண்டு அவர நிலை காரணமாக லண்டனுக்கு செலவதாகக்கூறிய பின்னர் அவருடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்தார். உறவினரை தொடர்புகொள்ள முடியாத நிலையில் தான் ஏமாற்றப்பட்ட தம்பதியினர் மனம் உடைந்தனர். பின்னர் இது குறித்து போலீசில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரூ.3.67 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல் - பெண் உள்பட 4 பேர் கைது

**மும்பை, மார்ச் 17–**

மும்பைவிமானநிலையத்தில்ரூ.3.67கோடிமதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மும்பை சர்வதேச விமான நிலையத்தில் தங்க கடத்தலில்ஈடுபட்ட பெண் உள்பட 4 நபர்களை சுங்கத்துறை அதிகாரிகள் அதிரடியாக கைது செய்துள்ளனர். இதில் 3 பேர் விமான நிலையத்தில் உள்ள விற்பனை நிலையங்களில் பணிபுரிந்து வந்துள்ளனர்.

இவர்கள் தங்க கடத்தல் கும்பலுடன் இணைந்து செயல்பட்டு வந்துள்ளனர். வெளிநாடுகளில் இருந்து தங்கத்தை கடத்தி வருபவர்களிடம் இருந்து தங்கத்தை பெற்றுக் கொண்டு, அதை விமான நிலையத்திற்கு வெளியே கொண்டு செல்லும் வேலையை இவர்கள் செய்து வந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பான ரகசிய தகவலின் அடிப்படையில் சுங்கத்துறை அதிகாரிகள் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் மும்பை விமான நிலையத்தில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனையின்போது விமான நிலைய ஊழியர் பிரதீப் பவார் என்பவர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் அளித்த தகவலின்பேரில் முகமது இம்ரான் நகோரி என்ற நபரையும், அன்ஷு குப்தா என்ற பெண்ணையும் சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். இதில் அன்ஷு குப்தா விமான நிலையத்தில் உள்ள உணவகத்தில் பணியாற்றி வந்துள்ளார். தங்கத்தை கடத்த உதவி செய்வதற்காக இவர் பணம் பெற்று வந்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை மொத்தம் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் இருந்து ரூ.3.67 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## ரூ, 75 கோடி மதிப்புள்ள போதைப்பொருட்கள் பறிமுதல் - இருவர் கைது

**பெங்களூரு, மார்ச் 17:**

கர்நாடக மாநிலத்தில் ஆறு மாதங்களுக்கு முன்னர் பம்ப்வெல்லில் போதைப்பொருள் கடத்திய ஹைதர் அலி என்பவரை போலீசார் கைது செய்தனர். இவரிடம் இருந்து 15 கிராம் எம்.டி,என்.ஏ. வை போலீசார் பறிமுதல் செய்தனர். இவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் இதில் நைஜீரிய நாட்டை சேர்ந்த பீட்டர் என்பவருக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது. இதன் அடிப்படையில் அவரை கைது செய்த போலீசார் அவரிடம் இருந்து ரூ. 6 கோடி மதிப்புள்ள போதைப்பொருளை பறிமுதல் செய்தனர். இந்த நிலையில் இருவரிடமும் நடத்தப்பட்ட விசாரணையில் டெல்லிக்கும் பெங்களூருக்கும் இடையே விமானம் வழியாக கடத்தல் நடைபெறுவது தெரிய வந்தது. மேலும் பெங்களூருவின் எலக்ட்ரானிக் சிட்டியில் உள்ள நீலாத்ரி நகரில் சந்தேகத்திற்கிடமான பேன்ட் (31) மற்றும் அபிகேல் அடோனிஸ் (30) ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய சோதனையில் ரூ. 75 கோடி மதிப்புள்ள 37 கிலோவுக்கும் அதிகமாக போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது

அவர்கள் விற்பனையாளர்களுக்கு போதைப்பொருட்கள் சப்ளை செய்து வந்ததாக கூறப்படுகிறது.

## மோடி தலைமையில் வளர்ச்சிப் பாதையில் செல்லும் வடகிழக்கு மாநிலங்கள்: அமித் ஷா பெருமிதம்

குவாஹத்தி, மார்ச் 17:

அசாமின் கோக்ராஜரில் அனைத்து போடோ மாணவர் சங்கத்தின் (ஏபிஎஸ்யூ) 57-வது ஆண்டு மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா (மார்ச் 16) சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அமித் ஷா தனது உரையில், "இன்று, போடோலாந்து முழுவதும் அதன் தலைவர் உபேந்திர நாத் பிரம்மா காட்டிய பாதையைப் பின்பற்றும் நிலையில் டெல்லியில் உள்ள ஒரு முக்கிய சாலைக்கு போடோபா உபேந்திர நாத் பிரம்மா மார்க் என்று பெயரிட அரசு முடிவு செய்துள்ளது. பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களும் கிளர்ச்சி, வன்முறை போன்ற பிரச்சினைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு, வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது. இவ்வாறு அமித் ஷா பேசினார்.

## டெல்லியில் 3 ஆண்டுகளுக்கு பிறகு காற்றின் தரம் உயர்ந்தது

புதுடெல்லி, மார்ச் 17:

தலைநகர் புதுடெல்லியில் (ஞாயிறு) காலையில் வெயில் குறைந்து இருந்தது. மேலும் காற்றின் தரம் திருப்திகரமான பிரிவின்கீழ் நீடிக்கிறது. காற்றுத் தர மேலாண்மை ஆணையத்தின் (CAQM) தகவலின்படி இன்று காலை 9 மணிக்கு காற்றின் தரக்குறியீடு (AQI) 89 ஆக இருந்தது. காற்றின் தரக்குறியீடு அளவுகள் 0-50 என இருந்தால் நல்லது, 51-100 திருப்திகரமானது, 101-200 மிதமானது, 201-300 மோசம், 301-400 மிகவும் மோசமானது, 401-500 கடுமையானது என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நேற்று காற்றின் தரம் உயர்ந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த ஜனவரி 1 முதல் மார்ச் 15 வரையிலான காலகட்டத்தில் நேற்று காற்றின் தரம் தூய்மையாக (85) இருந்தது என்று காற்றுத் தர மேலாண்மை ஆணையம் தெரிவித்திருந்தது. இந்த நிலை இன்றும் நீடிக்கிறது. இன்று டெல்லியில் வெப்பநிலை குறைந்தபட்சம் 18 டிகிரி செல்சியசாக பதிவானது. இது பருவகால சராசரி அளவைவிட 2.9 புள்ளிகள் அதிகமாகும்.

## பாஜக ஆட்சிக்கு வந்தால் ஒவைசியை நாடு கடத்துவோம்: பாஜக எம்எல்ஏ பேச்சால் சர்ச்சை

ஹைதராபாத், மார்ச் 17:

ஹைதராபாத் கோஷாமஹால் சட்டமன்ற தொகுதியின் பாஜக எம்.எல்.ஏ ராஜாசிங். இவர் அடிக்கடி ஏதாவது பேசி சர்ச்சையில் சிக்குவது வழக்கம். பாஜக மேலிடம் கூட இவரை சிறிது நாட்கள் கட்சியில் இருந்து நீக்கி இருந்தது. அதன் பின்னர், இவர் மன்னிப்பு கோரியதால், மீண்டும் கடந்த தேர்தலில் சீட் கொடுத்தது. இவரும் தொடர்ந்து கோஷாமஹால் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்நிலையில், ராஜாசிங் பேசியதாவது: ரம்ஜான் நோன்பு வேளையில் ஹைதராபாத் எம்பியான அசதுத்தீன் ஒவைஸி மத கலவரத்தை தூண்டும் வகையில் பேசி வருகிறார். சமீபத்தில் கூட இவர், ஹோலி பண்டிகையில் பிரச்சனையை உண்டாக்கும்படி பேசினார். இது மிகவும் கண்டிக்க தக்கது.

தெலங்கானாவில் பாஜக ஆட்சி அமைத்ததும், அசதுத்தீன் ஒவைஸி நாடு கடத்தப்படுவார். இல்லையெனில், அவர் பாஜகவில் இணைவதாக கட்சி தலைவர்களின் காலில் விழுந்து கெஞ்சினால் மட்டுமே இவர் இந்தியாவில் வசிப்பது குறித்து ஆலோசிக்கப்படும். சமீப காலமாக அசதுத்தீன் மன வளர்ச்சி குன்றியவர் போல் பேசுகிறார். ஆதலால், அவரது நண்பரான தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டிதான் அவரை ஒரு நல்ல மருத்துவமனையில் கொண்டு போய் சேர்க்க வேண்டும். இவ்வாறு ராஜாசிங் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்: சந்திரபாபு நாயுடு



அமராவதி, மார்ச் 17:

மக்களின் அன்றாட பிரச்சினைகளை அறிந்து உடனுக்குடன் தீர்வு காண வேண்டும் என்று கட்சி எம்எல்ஏக்களுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அறிவுறுத்தினார்.

ஆந்திர மாநிலம், மேற்கு கோதாவரி மாவட்டம், தனுகு சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசுகையில், "நான் 41 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில்தான் (மார்ச்-15) சட்டப்பேரவையில் முதன்முதலில் அடி எடுத்து வைத்தேன். நான் எங்கு சென்றாலும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடம் அத்தொகுதி பிரச்சினைகள் குறித்து கேட்டறிவேன். எம்எல்ஏக்களும் இதனை பின்பற்றி மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண வேண்டும்

தெலுங்கு தேசம் கட்சி ஆந்திர மாநிலத்தில் ஒரு நிலையான இடத்தை தக்க வைத்துள்ளது. கட்சியை நாம் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்வதுடன் மக்கள் பிரச்சினைகளையும் திறம்பட கையாள வேண்டும்.

'சூப்பர் சிக்ஸ்' திட்டங்களில் சிலவற்றை நாம் அமல்படுத்தி உள்ளோம்.

எஞ்சிய திட்டங்களை மத்திய அரசின் உதவியுடன் கண்டிப்பாக அமல்படுத்துவோம். 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்சி உறுப்பினர் அட்டையை நாம் புதுப்பித்து வருகிறோம். தற்போது 1.2 கோடி பேர் தெலுங்கு தேசம் கட்சியின் உறுப்பினர்களாக உள்ளனர்" என்றார்.

## பஞ்சாபில் அமைதியை சீர்குலைக்க முயற்சி: முதல்வர் பகவந்த் மான் குற்றச்சாட்டு



புதுடெல்லி, மார்ச் 17:

பஞ்சாபில் அமைதியை சீர்குலைக்க முயற்சி நடைபெறுவதாக அம்மாநில முதல்வர் பகவந்த் மான் குற்றம் சாட்டியுள்ளார்.

பஞ்சாபின் அமிர்தசரஸ் சுந்த்வாலா பகுதியில் உள்ள தாகுர்த்வாரா கோயிலில் நேற்று முன்தினம் இரவு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. பைக்கில் வந்த இருவர் கோயில் மீது வெடிகுண்டை வீசியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

கண்காணிப்பு கேமரா பதிவுகளின் அடிப்படையில் குற்றவாளிகளை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான் நேற்று கூறுகையில், "பஞ்சாபில் அமைதியை சீர்குலைக்க தொடர்ந்து முயற்சி நடைபெறுகிறது. போதைப் பொருள் கடத்தல், மிரட்டி பணம் பறித்தல், தாதாக்களின் அத்துமீறல் ஆகியவை இதன் ஒரு பகுதியாக உள்ளது. பஞ்சாபை சட்டம் ஒழுங்கு சீர்குலைந்த மாநிலமாக காட்ட முயற்சி நடைபெறுகிறது.

ஹோலி பண்டிகையின்போது மற்ற மாநிலங்களில், ஊர்வலங்களில் போலீஸார் தடியடி நடத்த வேண்டியிருந்தது. ஆனால் பஞ்சாபில் இதுபோன்று எதுவும் நடைபெறவில்லை. பஞ்சாபில் சட்டம் ஒழுங்கு நன்றாக உள்ளது" என்றார்.

முன்னதாக அமிர்தசரஸ் காவல்துறை ஆணையர் ஜி.பி. எஸ்.புல்லர் கூறுகையில், "கோயில் குண்டுவெடிப்பில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. சம்பவ இடத்தில் தடயவியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைவில் பிடிப்போம்.

பஞ்சாபில் குழப்பம் ஏற்படுத்த பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பு சதி செய்கிறது. இளைஞர்களை தவறான பாதையில் கொண்டுசெல்ல முயற்சிக்கிறது.

அதன் வலையில் சிக்கி வாழ்க்கையை இழக்க வேண்டாம் என இளைஞர்களை எச்சரிக்க விரும்புகிறேன்" என்றார்.

## விளையாட்டு செய்திகள்

## 2-வது முறையாக பட்டம் வென்ற மும்பை இந்தியன்ஸ்



மும்பை, மார்ச் 17:

நடப்பு மகளிர் ப்ரீமியர் லீக் சீசனில் மும்பை இந்தியன்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. இரண்டாவது முறையாக அந்த அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. அதே நேரத்தில் டெல்லி கேபிடல்ஸ் அணி மூன்றாவது முறையாக இறுதிப் போட்டியில் தோல்வியை தழுவி உள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் 14-ம் தேதி மகளிர் ப்ரீமியர் லீகின் மூன்றாவது சீசன் தொடங்கியது. இதில் டெல்லி கேபிடல்ஸ், மும்பை இந்தியன்ஸ், குஜராத் ஜெயண்ட்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, உபி வாரியர்ஸ் உள்ளிட்ட 5 அணிகள் பங்கேற்றன. இதில் டெல்லி அணி புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்து நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

எலிமினேட்டர் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் குஜராத் ஜெயண்ட்ஸ் அணிகள் விளையாடின. இதில் மும்பை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. நேற்று (மார்ச் 15) மும்பையில் நடைபெற்ற போட்டியில் டாஸ் வென்ற டெல்லி அணி பந்துவீச முடிவு செய்தது. முதலில் பேட் செய்த மும்பை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 149 ரன்கள் எடுத்தது.

150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டெல்லி விரட்டியது. டெல்லி தரப்பில் ஜெமிமா ரோட்ரிக்ஸ் (30 ரன்கள்), மரிசான் கேப் (40 ரன்கள்), நிகி பிரசாத் (25 ரன்கள்) எடுத்தனர். அவர்களை தவிர மற்ற வீராங்கனைகள் ரன் சேர்க்க தடுமாறினர். 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 141 ரன்கள் மட்டுமே எடுத்தது டெல்லி அணி. இதன் மூலம் 8 ரன்களில் மும்பை வெற்றி பெற்றது.

இதுவரை நடைபெற்ற மூன்று சீசன்களில் மூன்று முறை இறுதிப் போட்டிக்கு டெல்லி அணி முன்னேறியுள்ளது. இருப்பினும் அந்த அணி கோப்பை வெல்லும் வாய்ப்பை நெருங்கி வந்து இழந்துள்ளது.

## விராட் கோலியின் சீருடையும் 18 ஐபிஎல் சீசனும் ஆர்சிபி-க்கு கோப்பை கிட்டுமா?

ஐபிஎல் வரலாற்றில் 17 வருடங்களாக கோப்பையை வெல்ல முடியாமல் தவித்து வரும் அணிகளுள் ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரும் (ஆர்சிபி) ஒன்று. நட்சத்திர பட்டாளங்கள், அதிரடி பேட்ஸ்மேன்கள் படை என ஒவ்வொரு சீசனிலும் குதூகலமாக அந்த அணி களம் கண்ட போதிலும் சாம்பியன் கோப்பையை வெல்வது என்பது அந்த அணிக்கு கானல் நீராகவே உள்ளது. எனினும் இம்முறை 18-வது சீசனில் புத்தெழுச்சியுடன் களமிறங்குகிறது ஆர்சிபி. புதிய கேப்டனாக ரஜத் பட்டிதார் நியமிக்கப்பட்டுள்ளார்.

நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி அணியும் சீருடையின் எண் 18, இந்த சீசனும் 18. இதனால் அந்த அணியின் ரசிகர்கள் மத்தியில் போட்டி தொடங்குவதற்கு முன்னரே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. 'ஈ சாலா கப் நம்தே' என்ற வாசகத்தை கடந்த சில சீசன்களில் முன்னிலைப்படுத்திய ஆர்சிபி இம்முறை அதை அடைவதற்காக கூடுதல் உத்வேகத்துடன் செயல்படக்கூடும். ரஜத் பட்டிதார் தலைமையின் கீழ் மெகா ஏலத்தின் போது அணிக்கு புத்துயிர் கொடுக்கப்பட்டது.

கடந்த சீசனில் ஆர்சிபி அணி லீக் சுற்றில் முதல் 8 ஆட்டங்களில் 7 தோல்விகளை சந்தித்து கடும் நெருக்கடியில் இருந்தது. ஆனால் அதன் பின்னர் வியக்க வைக்கும் வகையில் கடைசி 6 ஆட்டங்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று பிளே ஆஃப் சுற்றில் கால்பதித்து இருந்தது. இதில் சிஎஸ்கே அணிக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் பெற்ற 'த்ரில்' வெற்றியும் அடங்கும்.

இந்த சீசனில் ஆர்சிபி அணியின் உரிமையாளர்கள் பேட்டிங் மற்றும் பந்துவீச்சை பலப்படுத்தி உள்ளனர். ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வுட், அனுபவம் வாய்ந்த புவனேஷ்வர் குமார் ஆகியோரை அணிக்குள் கொண்டு வந்துள்ளது. இவர்கள் இருவருமே இறுதிக்கட்ட ஓவர்களில் சிறப்பாக பந்துவீசும் திறன் கொண்டவர்கள்.

மேலும், இடதுகை வேகப்பந்து வீச்சாளரான யாஷ் தயாளும் பலம் சேர்க்கக்கூடியவர். பேட்டிங்கில் ஐசிசி டி20 தரவரிசையில் 3-வது இடம் வகிக்கும் இங்கிலாந்தின் பில் சால்ட் பலம் சேர்க்கக்கூடும். கடந்த சீசனில் சாம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பேட்டிங்கில் தொடக்க வரிசையில் பில் சால்ட் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தார். அதே செயல் திறனை அவர், மீண்டும் வெளிப்படுத்தக்கூடும். மற்றொரு விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ஜிதேஷ் சர்மாவும் அணிக்கு பலம் சேர்க்கக்கூடியவராக திகழ்கிறார்.

இது ஒருபுறம் இருக்க இந்த சீசன் விராட் கோலிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையக்கூடும்.

## அனைத்து மதங்களையும் சமமாக மதிக்க வேண்டும்: ஐ.நா. சபையில் இந்தியா உறுதி

புதுடெல்லி, மார்ச் 17:

அனைத்து மதங்களையும் சமமாக மதிக்க வேண்டும் என்று ஐ.நா. சபையில் இந்தியா உறுதிபட தெரிவித்துள்ளது.

கடந்த 2019-ம் ஆண்டு மார்ச் 15-ம் தேதி நியூசிலாந்தின் கிறைஸ்ட்சர்ச் நகரில் உள்ள மசூதியில் பிரன்டன் டாரன்ட் என்பவர் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். இதில் 51 பேர் உயிரிழந்தனர். 89 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த துயர சம்பவத்தை நினைவுகூரும் வகையில் ஐ.நா. சபை சார்பில் ஆண்டுதோறும் மார்ச் 15-ம் தேதி 'இஸ்லாமிய வெறுப்பு எதிர்ப்பு தினம்' அனுசரிக்கப்படுகிறது.

இந்த தினத்தையொட்டி ஐ.நா. சபையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் ஹரிஷ் பேசினார். அவர் கூறியதாவது:

இந்தியா பன்முகத்தன்மையின் பிறப்பிடமாக விளங்குகிறது. இந்து மதம், புத்த மதம், சமண மதம், சீக்கிய மதம் ஆகியவை எங்கள் நாட்டில் தோன்றின. இந்தியாவில்



சுமார் 20 கோடிக்கும் அதிகமான முஸ்லிம்கள் வசிக்கின்றனர். உலகில் அதிக முஸ்லிம்கள் வசிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது.

தற்போது மத பாகுபாடு மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. இதன்காரணமாக உலகம் முழுவதும் ஏராளமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். முஸ்லிம் மதம் மட்டுமல்ல, எந்தவொரு மதத்தின் மீதும் பாகுபாடு காட்டக்கூடாது. இந்தியாவில் ஹோலி பண்டிகையும் ரம்ஜானும் ஒரே நேரத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. இரு பண்டிகைகளையும் நாங்கள் போற்றி கொண்டாடுகிறோம். அனைத்து மதங்களையும் சமமாக மதித்து நடக்க வேண்டும். இதை அனைத்து உலக நாடுகளும் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்.

முஸ்லிம்கள் மீதான வெறுப்புணர்வை எதிர்த்து இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்துள்ளது. எந்தவொரு மதம், தேசம், இனத்தோடு தீவிரவாதத்தை தொடர்புபடுத்தக்கூடாது என்று தீர்மானத்தில் கூறப்பட்டு இருக்கிறது. இந்த தீர்மானத்தை இந்தியா முழுமனதுடன் ஆதரிக்கிறது. இவ்வாறு ஐ.நா. வுக்கான இந்திய தூதர் ஹரிஷ் பேசினார்.

பாகிஸ்தானுக்கு கடும் கண்டனம்: ஐ.நா. சபை நிகழ்ச்சியில் பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு செயலாளர் தாமினா ஜனுஜா சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசினார். அவர் பேசும்போது, காஷ்மீரையும் காசாவையும் ஒப்பிட்டுப் பேசினார். காஷ்மீரில் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவதாக குற்றம் சாட்டினார்.

இதற்கு இந்திய தூதர் ஹரிஷ் கடும் கண்டனம் தெரிவித்தார். அவர் கூறும்போது, "பாகிஸ்தானின் கருத்துக்கு கடும் கண்டனத்தை பதிவு செய்கிறேன். ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. இதை யாராலும் மாற்ற முடியாது. பாகிஸ்தானின் எல்லைதாண்டிய தீவிரவாதத்தால் மட்டுமே காஷ்மீர் பாதிக்கப்படுகிறது. பாகிஸ்தானின் பாசிச மனநிலை அனைவருக்கும் தெரியும்" என்று தெரிவித்தார்.

# செவ்வாய் கிரகத்துக்கு ஹியூமனாய்ட் ரோபோ உடன் செல்லும் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம்!



வாஷிங்டன், மார்ச் 17

மனிதர்களை செவ்வாய் கிரகத்தில் குடியேறச் செய்வது குறித்து பல்வேறு தருணங்களில் எலான் மஸ்க் பேசி உள்ளார். இந்நிலையில், அடுத்த ஆண்டு இறுதியில் செவ்வாய் கிரகத்துக்கு டெஸ்லாவின் 'ஆப்டிமஸ்' ஹியூமனாய்ட் ரோபோவை ஸ்டார்ஷிப் விண்கலன் மூலம் அனுப்ப திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

"அடுத்த ஆண்டு இறுதியில் செவ்வாய் கிரகத்துக்கு ஸ்டார்ஷிப் புறப்பட உள்ளது. அதில் ஆப்டிமஸ் ரோபோவும் பயணிக்கிறது. இந்த தரையிறங்கும் முயற்சி வெற்றிகரமாக நடந்தால் 2029 வாக்கில் மனிதர்கள் அங்கு தரையிறங்க வாய்ப்புள்ளது." என எலான் மஸ்க் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

உலகின் சக்திவாய்ந்த மற்றும் பெரிய விண்கலனாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் அறியப்படுகிறது. இருப்பினும் செவ்வாய் கிரகத்தில் அது வெற்றிகரமாக தரையிறங்குவதை உலகுக்கு நிரூபிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அமெரிக்காவின் நாசாவும் இதே விண்கலனை கொண்டு தான் நிலவில் மனிதர்களை மீண்டும் தரையிறங்க செய்யும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. அண்மையில் ஸ்டார்ஷிப் சோதனை ஓட்டத்தின் போது வெடித்தது. அது இந்த முயற்சியில் கொஞ்சம் பின்னடைவாக அமைந்துள்ளது.

மஸ்கின் செவ்வாய் கிரக ஆர்வம்: 'கடைசியாக மனிதர்கள் நிலவில் தரையிறங்கி அரை நூற்றாண்டு காலம் கடந்துவிட்டது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இது மனித நாகரிகத்தின் உயர்ந்த அடையாளமாக இருக்க முடியாது. மானுடர்களுக்கு நிலவில் பேஸ் (மூன் பேஸ்) இருக்க வேண்டும், செவ்வாய் கிரகத்தில் நகரங்கள் இருக்க வேண்டும். மனிதர்கள் நட்சத்திரங்களுக்கு இடையே இருக்க வேண்டும்' என கடந்த 2023-ல் மஸ்க் கூறியுள்ளார்.

தற்போது சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கி உள்ள விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸை மீட்டு வர மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# பூமி திரும்பியதும் உடல் ரீதியான சவால்களை சுனிதா வில்லியம்ஸ் எதிர்கொள்ள வாய்ப்பு!

புளோரிடா, மார்ச் 17:

அடுத்த வாரம் பூமிக்கு திரும்ப உள்ள இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ். அவரை அழைத்து வர புறப்பட்ட ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி மையத்தை அடைந்தது. இந்த நிலையில் பூமி திரும்பியதும் உடல் ரீதியான சவால்களை அவர் எதிர்கொள்ள வாய்ப்புகள் அதிகம் என தகவல் வெளியாகி உள்ளது.

சர்வதேச விண்வெளி மையத்தில் சுமார் 9 மாத காலம் அவர் தங்கி இருந்ததுதான் இதற்கு காரணம் என சொல்லப்படுகிறது. அவரோடு விண்வெளி மையத்தில் சிக்கியுள்ள அமெரிக்க விண்வெளி வீரர் பேரி வில்மோரும் இதே சவாலை எதிர்கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமி கோளுக்கு சுனிதா வில்லியம்ஸ் திரும்புவதை உலக நாடுகள் ஆவலோடு எதிர்கொண்டுள்ளன. இந்நிலையில், விண்வெளி மையத்தில் நீண்ட நாட்கள் இருந்த காரணத்தாலும் ஈர்ப்பு விசையின்மையாலும் உடல் சார்ந்த சிக்கல்களை அவர்கள் எதிர்கொள்ள வாய்ப்புள்ளதாக இதற்கு முன்பு விண்வெளிக்கு சென்று வந்தவர்கள் கூறியுள்ளனர்.

# ஏமன் மீது அமெரிக்கா அதிரடி தாக்குதல்: 21 பேர் பலி- ஹவுதி படையினருக்கு ட்ரம்ப் எச்சரிக்கை



சனா, மார்ச் 17:

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடல்வழிப் பாதையில் கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்களை முற்றிலுமாக நிறுத்தும் வரையில் தங்களது தரப்பில் தாக்குதல் தொடரும் என ட்ரம்ப் கூறியுள்ளார். அமெரிக்க தாக்குதலில் சுமார் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் கப்பல் மற்றும் வான்வழி போக்குவரத்து, கடற்படை சொத்துக்களைப் பாதுகாக்கவும், சர்வதேச கடல் வழி போக்குவரத்து சுதந்திரத்தை மீட்டெடுக்கவும்,தீவிரவாதிகளின் தளங்கள், அந்த அமைப்புகளின் தலைவர்களை இலக்காக கொண்டு நமது தேசத்தின் துணிச்சல் மிக்க போர் வீரர்கள் தற்போது வான்வழித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என ட்ரம்ப் தனது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

"ஹவுதி படையினர் அமெரிக்கா மற்றும் உலக நாடுகளின் கப்பல், வானூர்தி மீது தாக்குதல் நடத்தி உள்ளனர். அதனால் அவர்கள் மீது தீவிர தாக்குதலை மேற்கொள்ள அமெரிக்க ராணுவத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளேன்.

முந்தைய அதிபர் ஜோ பைடனின் ஆட்சியில் அவர்களுக்கு கொடுத்த பதிலடி பலவீனமானதாக இருந்தது. செங்கடல் வழியாக பயணித்த அமெரிக்க போர்க்கப்பல் மீது ஹவுதி படையினர் தாக்குதல் மேற்கொண்ட சம்பவங்கள் உண்டு. கடந்த காலங்களில் ஏவுகணைகளை கொண்டு அவர்கள் நமது வானூர்திகளை தாக்கி உள்ளனர். அதோடு நமது படைகள் மற்றும் நட்பு நாடுகளின் படைகள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதனால் அமெரிக்கா மற்றும் உலக பொருளாதாரத்துக்கு பல கோடி டாலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் அப்பாவி மக்களின் உயிரும் இதில் பறிபோயுள்ளது.

அமெரிக்க கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் இது மாதிரியான தாக்குதலை இனி பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால் அவர்களுக்கு எதிராக எங்களது தாக்குதல் தொடரும். வணிகம் சார்ந்து உலகின் முக்கிய நீர் வழி பாதையில் அவர்களது தாக்குதலை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. உலக நாடுகளின் நீர்வழி போக்குவரத்தை எந்த தீவிரவாத சக்தியும் தடுக்க முடியாது. நான் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு சொல்லிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். உங்களது செயல்பாடுகளை இன்றோடு நிறுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால் உங்கள் மீது தீவிர தாக்குதல் நடத்தப்படும். ஹவுதி கிளர்ச்சிக் குழுவை ஆதரிப்பதை ஈரான் நிறுத்திக் கொள்ள வேண்டும்" என ட்ரம்ப் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

இதற்கு தக்க பதிலடி தரப்படும். மேலும், தலைநகர் சனாவில் பொதுமக்கள் பலர் உயிர் இழந்துள்ளதாக ஹவுதி கூறியுள்ளது. அமெரிக்கா ஏமன் மீது வான்வழி தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இரண்டாவது முறையாக ட்ரம்ப் பதவியேற்றது முதல் உலக போர்களை நிறுத்துவதில் மும்முரமாக செயல்பட்டு வருகிறார். இஸ்ரேல் - ஹமாஸ் மோதல், ரஷ்யா - உக்ரைன் போர் போன்றவற்றை அதற்கு உதாரணமாக சொல்லலாம். இந்த நிலையில் அவரது பார்வை இப்போது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பக்கம் திரும்பி உள்ளது. செங்கடல் பகுதியில் பல்வேறு நாடுகளின் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது ஹவுதி.

# மேசடோனியா: கேளிக்கை விடுதியில் பயங்கர தீ விபத்து: 50-க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு




மெசடோனியா, மார்ச் 17:

தெற்கு ஐரோப்பிய நாடான மேசடோனியாவில் இரவு நேர கேளிக்கை விடுதி ஒன்றில் நடந்த ஹிப் ஹாப் இசை நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட தீ விபத்தில் 50-க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.


இது குறித்து அந்நாட்டு ஊடகம் ஒன்று, "வடக்கு மேசடோனியாவின் கோக்கானி பகுதியில் உள்ள ஓர் இரவு விடுதியில் ஹிப் ஹாப் இசை நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட தீ விபத்தில் 51 பேர் உயிரிழந்தனர். இந்த இரவு விடுதி தலைநகர் ஸ்கோப்ஜேவில் இருந்து 100 கிமீ தொலைவில் உள்ளது. விபத்தில் பலரும் காயமடைந்துள்ளனர். இதனால் உயிரிழப்புகள் அதிகரிக்கலாம்." என்று தெரிவித்துள்ளது. இருப்பினும் விபத்தில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பது குறித்து மேசடோனியா அரசுத் தரப்பிலிருந்து அதிகாரபூர்வ தகவல் ஏதுமில்லை.

முதற்கட்ட விசாரணையில், இரவு விடுதியில் ஏடிஎன் என்ற பிரபல ஹிப் ஹாப் இசைக் குழு நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தது.

அதில் 1500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர். அப்போது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் சிலர் தீயைக் கொண்டு சில சாகசங்கள் நிகழ்த்தியுள்ளனர். அதிலிருந்தே நெருப்பு அரங்கின் மேற்கூரையில் பரவி தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும், விபத்து குறித்த தீவிர விசாரணைக்குப் பின்னரே காரணம் உறுதியாகத் தெரிய வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இசை நிகழ்ச்சியில் 50-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் அந்நாட்டு மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்ததால் விசா ரத்து: அமெரிக்காவில் இருந்து வெளியேறினார் இந்திய மாணவி



வாஷிங்டன், மார்ச் 17:

பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற இந்திய மாணவியின் விசாவை அமெரிக்கா ரத்து செய்தது. இதையடுத்து, நாடு கடத்துவதில் இருந்து தப்பிக்க தாமாக முன்வந்து அந்த மாணவி அமெரிக்காவை விட்டு வெளியேறினார்.

அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இந்திய மாணவி ரஞ்சனி ஸ்ரீனிவாசன் நகர்ப்புற திட்டமிடல் ஆராய்ச்சி படிப்பு படித்து வந்தார். கடந்த ஆண்டு பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் தீவிரவாத அமைப்புக்கு ஆதரவாகவும் இஸ்ரேலுக்கு எதிராகவும் சிலர் போராட்டம் நடத்தினர். அதில் ரஞ்சனியும் பங்கேற்று யூதர்களுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினார். ஹமாஸ் தீவிரவாத அமைப்புக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இந்நிலையில், மாணவர்கள் பலர் போராட்டம் நடத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக செயல்பட்ட ரஞ்சனியின் கல்வி விசாவை கடந்த 5-ம் தேதி அமெரிக்க குடியேற்றத் துறை ரத்து செய்தது. இந்நிலையில், அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்படுவதற்கு முன்னதாக தாமாகவே முன்வந்து ரஞ்சனி கடந்த 11-ம் தேதி வெளியேறினார். அவர் விமான நிலையத்துக்கு வந்து அமெரிக்காவை விட்டு வெளியேறும் காட்சிகள் அடங்கிய வீடியோவை அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை செயலர் கிறிஸ்டி நோம் வெளியிட்டார். அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் நாட்டை விட்டு தாமாகவே வெளியேற 'கஸ்டம்ஸ் அண்ட் பார்டர் புரடெக்ஷன் ஏஜென்சி' செயலி உள்ளது. அந்த செயலியில் பதிவு செய்து அமெரிக்காவை விட்டு வெளியேறி உள்ளார் ரஞ்சனி.

சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களை கை கால்களில் விலங்கிட்டு ராணுவ விமானத்தில் நாடு கடத்தி வருகின்றனர். அதுபோல் இந்தியர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர். அதில் இருந்து தப்பிக்க மாணவி ரஞ்சனி தாமாக வெளியேறி உள்ளார்.

இதுகுறித்து உள்நாட்டு பாதுகாப்புத் துறை செயலர் கிறிஸ்டி நோம் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறும்போது, "அமெரிக்காவில் வாழவும், கல்வி கற்கவும் விசா வழங்குவது பெருமைக்குரிய விஷயம். அதே நேரத்தில் வன்முறை, தீவிர வாதத்துக்கு நீங்கள் ஆதரவாக செயல்பட்டால், அந்த உரிமை விசா ரத்து செய்யப்படும். தீவிரவாதத்துக்கு ஆதரவானவர்கள் இந்த நாட்டில் இருக்க முடியாது. தீவிரவாதிகளுக்காக அனுதாபப்படும் கொலம்பியா பல்கலைக்கழக மாணவி, நாட்டை விட்டு தாமாக வெளியேறியது மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தெரிவித்துள்ளார். வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் அந்த நாட்டு சட்ட திட்டத்தை மதித்து நடந்து கொள்ள வேண்டும். ஒரு தீவிரவாத அமைப்புக்கு ஆதரவாக செயல்படுவது தவறு என்று ரஞ்சனிக்கு இந்தியாவில் பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவை தாக்கிய சூறாவளி

வாஷிங்டன், மார்ச் 17:

அமெரிக்காவை சூறாவளி தாக்கிய சம்பவத்தில் 32 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் மத்திய, தென் மாகாணங்களை சூறாவளி தாக்கியது. அந்நாட்டின் மிசோரி, மிசிசிபி, அலபாமா உள்ளிட்ட மாகாணங்களை சூறாவளி தாக்கியது.

பலத்த காற்றுடன் சூறாவளி வீசியதால் மரங்கள் வேரோடு சரிந்தன. வீடுகள், வணிக வளாகங்கள் உள்பட பல்வேறு கட்டிடங்களின் மேற்கூரை சூறாவளியில் தூக்கி வீசப்பட்டது. பல வீடுகள் சூறாவளியில் முழுமையாக சேதமடைந்தது. இந்நிலையில், அமெரிக்காவை தாக்கிய சூறாவளியில் சிக்கி 32 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். சூறாவளியால் அதிக பாதிப்பு ஏற்பட்ட நிலையில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகிறது.

# சிரியா: அடுக்குமாடி குடியிருப்பில் வெடிவிபத்து - 16 பேர் பலி

டமாஸ்கஸ், மார்ச் 17:

சிரியாவில் 10 ஆண்டுகளுக்குமேல் உள்நாட்டுப்போர் நடைபெற்றது. தற்போது அந்நாட்டில் பஷிர் அல் அசாத் தலைமையிலான ஆட்சி அகற்றப்பட்டது. புதிய அதிபராக ஹயத் தஹிர் அல் ஷியாம் பதவியேற்றார்.

அதேவேளை, உள்நாட்டு போரின்போது பயன்படுத்தப்பட்ட பல வெடிகுண்டுகள் வெடிக்காமல் பூமிக்குள் புதைந்து உள்ளன. கடந்த டிசம்பரில் பஷிர் அல் அசாத் தலைமையிலான ஆட்சி கவிழ்ந்தபின் சிரியாவின் பல்வேறு பகுதிகளில் வெடிக்காமல் புதைந்து இருந்த சுமார் 1,500 வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்பட்டன. இந்நிலையில், சிரியாவின் லடாகியா நகரில் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பின் தரைதளத்தில் பழைய பொருட்களை சேமித்து வைக்கும் அறை உள்ளது. அந்த அறையில் உள்நாட்டு போரின்போது பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு, வெடிமருந்துகள் இருந்துள்ளது. இந்த வெடிமருந்து நேற்று இரவு திடீரென வெடித்து சிதறியது. இதில், அடுக்குமாடி குடியிருப்பும் இடிந்தது. இதனால், அடுக்குமாடி குடியிருப்பின் மேல் தளத்தில் வசித்து வந்த பலர் வெடிவிபத்தால் ஏற்பட்ட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். இந்த சம்பவத்தில் 16 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

# 'தகுந்த பதிலடி கொடுப்போம்' - ட்ரம்ப் எச்சரிக்கைக்கு ஈரான் பாதுகாப்புப் படை எதிர்வினை



தெஹ்ரான், மார்ச் 17:

"ஈரான் போர் தொடுக்காது. அதே நேரத்தில் யாரேனும் எங்களை அச்சுறுத்தினால் அதற்கு தக்க பதிலடி கொடுப்போம்." என ஈரான் பாதுகாப்புப் படையின் தலைவர் ஹொசைன் சலாமி தெரிவித்துள்ளார். முன்னதாக, ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சி படைக்கு ஈரான் ஆதரவு தரக்கூடாது என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

ஏமனில் அமெரிக்க ராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 31 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கான உத்தரவை ட்ரம்ப் பிறப்பித்தார். இது குறித்து அவர் சமூக வலைதள பதிவு ஒன்றையும் வெளியிட்டிருந்தார். தாக்குதலில் அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளதாக சொல்லி இதனை ஹவுதி கிளர்ச்சிப் படையும் உறுதி செய்தது.

"ஈரான் போர் தொடுக்காது. ஆனால், யாரேனும் அச்சுறுத்தினால் அதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும். ஏமன் நாட்டின் பிரதிநிதியாக உள்ள ஹவுதி கிளர்ச்சிப் படை தன்னிச்சையாக செயல்படுகிறது. அதன் உத்தி மற்றும் செயல்பாடும் அவர்களை சார்ந்தது." என ஹொசைன் சலாமி தெரிவித்துள்ளார்.

கடந்த 2020-ல் அதிபர் ட்ரம்ப் முதல் முறையாக ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது பாக்தாத்தில் நடந்த ட்ரோன் தாக்குதலில் அமெரிக்க ராணுவம் ஈரான் வெளிநாட்டு நடவடிக்கை ஆயுத தளபதி காசிம் சுலைமானியை கொன்றது.

இதற்கு ஈரான் கொடுத்த பதிலடியில் அமெரிக்க ராணுவத்தை சேர்ந்தவர்கள் யாரும் உயிரிழக்கவில்லை என்றாலும் மன ரீதியான பாதிப்புக்கு ஆளானதாக அமெரிக்கா தெரிவித்தது.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உச்சக்கட்டத்தில் இருந்த போது செங்கடல் வழியாக கடக்கும் இஸ்ரேல் கப்பல்களை ஹவுதி படையினர் தாக்கி இருந்தனர். தாங்கள் ஹமாஸுக்கு ஆதரவாக இருப்பதாகவும் அப்போது அவர்கள் தெரிவித்திருந்தனர்.

முன்னதாக, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள ஏமன் நாட்டின் பகுதியை குறிவைத்து தீவிர தாக்குதல் மேற்கொள்ள அமெரிக்க படைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அந்த நாட்டின் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

மேலும், ஹவுதி கிளர்ச்சிக் குழுவை ஆதரிப்பதை நிறுத்துமாறு ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். அதற்கு தான் தற்போது ஈரான் பதில் கொடுத்துள்ளது.